வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

நிதி அமைச்சு

இலங்கை

# செயலாற்றுகை அறிக்கை

# 2018

த.பெ. இல. 277

©2018 வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
செயலகம் (3 ஆம் மாடி)
த.பெ. இல. 277
கொழும்பு - 00100
இலங்கை

info@erd.gov.lk
http://www.erd.gov.lk

# உள்ளடக்கம்


மேன்நோக்கு

வெளிநாட்டு நிதியளிப்பு

## பிரிவுகள் வாரியான செயலாற்றுகை

ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு

கிழக்கு ஆசியாப் பிரிவு
- ஜப்பான்
- கொரியா

உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியப் பிரிவு

சீனா மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிப் பிரிவு

மத்திய கிழக்கு மற்றும் தென் ஆசியப் பிரிவு
- மத்திய கிழக்கு நாடுகள்
- தென்னாசிய நாடுகள்

முன்னேற்றப் பொருளாதாரங்களின் பிரிவு

ஐக்கிய நாடுகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகள்
- ஐக்கிய நாடுகள் முகவராண்மைகள்
- தொழில்நுட்ப உதவி

மூலதனச் சந்தை மற்றும் முதலீட்டுப் பிரிவு

படுகடன் முகாமைத்துவப் பிரிவு

துறைகளின் ஒருங்கிணைப்பு, செயலாற்றுகைக் கண்காணிப்புப் பிரிவு

நிர்வாக மற்றம் நிதிச் செயலாற்றுகை

## தூர நோக்கு

இலங்கையின் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கு வெளிநாட்டு நிதியினைத் திரட்டுவதன் மூலமும், முகாமைத்துவம் செய்வதன் மூலமும் தேவையான அறிவு, மற்றும் நிபுணத்துவ ரீதியாக சிறந்த தரத்தை அடைதல்.

## செயற்பணி

நாட்டின் நீண்ட காலப்படுகடனின் நிலைபேறான தன்மையைப் பேணும் அதே வேளை, இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஆதரவுடன் குறைந்த நிபந்தனைகளுடன் குறைந்த சாத்தியமான செலவில் வெளிநாட்டு நிதியினைத் திரட்டல்.

## எமது நோக்கங்கள்

- முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ள துறைகளின் அபிவிருத்தித் தேவைகளுக்கு நிதி வழங்குவதற்கு குறைந்த செலவுடனும், குறைவான இடருடனும் வெளிநாட்டு வளங்களைத் திரட்டுதல்.
- வெளிநாட்டு வளங்களை வினைத் திறனுடையதாகவும், பயனுறு விளைவுள்ளதாகவும் பயன்படுத்துவதற்கு வசதியளித்தல்.
- நாட்டின் நீண்ட கால வெளிநாட்டுப் படுகடன்களை நிலைபேறான தன்மையைப் பேணுவதற்குப் பங்களிப்புச் செலுத்துதல்.
- வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை வினைத்திறனான பயன்பாட்டின் மூலம் அரச துறையின் மனித வள அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செலுத்துதல்.
- திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பாரிய பொறுப்புக்களை பயனுறு விளைவுள்ளதாகவும், செயற்திறன் கொண்டதாகவும் நிறைவேற்றுவதற்கு திணைக்களத்தின் திறன்களை தொடர்ந்து வலுவூட்டுதல்.

## எமது விழுமியங்கள்

- சகல சட்டங்களையும், ஒழுங்கு விதிகளையும் கடைப்பிடிப்பதன் ஊடாகவும் மற்றும் சிறந்த குண நலன்களோடு இணங்கி நடப்பதன் ஊடாகவும், ஆளுமை, வெளிப்படைத்தன்மை, வெளிப்படுத்துகை, மற்றும் ஒழுக்க நெறிகளின் அதி உயர் தரத்தைப் பேணுதல்.
- திணைக்களத்தின் அக்கறையை முன்னிறுத்தி அதி உயர் தரமான தனிப்பட்ட நேர்மையைப் பேணுதல்.
- பணிக் குழுவினரின் செயலாற்றுகைகளை வெளிக்காட்டக் கூடியவாறான பரஸ்பர மதிப்பு மற்றும் நம்பிக்கைக்கான சூழலை ஏற்படுத்திப் பூரணமான சாத்தியங்களை நிறைவேற்றுதல்.
- பங்காளர்களுடன் உண்மையானதும், நியாயமானதுமான தொடர்புகளின் ஊடாக ஒழுக்க நெறிகளின் நீண்ட கால உறவுகளை மேம்படுத்துதல்.
- சகல மட்டங்களிலும் உள்ள பணியாளர்களுக்கு அதிகாரமளித்தல், தலையீடுகளைக் குறைத்தல், மற்றும் அவர்களைக் கடமைப் பொறுப்புள்ளவர்களாக இருக்குமாறு வேண்டுதல்.

# வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் ஒரே பார்வையில்

வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் நிதி அமைச்சின் கீழ் வருகின்ற பொதுத் திறைசேரித் திணைக்களங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதுடன், 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 04 ஆம் திகதி வரையில் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் நேரடிக் கண்காணிப்பின் கீழும், அதன் பின்னர் நிதி அமைச்சின் கீழாலும் செயற்பட்டது.

வெளிநாட்டு வளங்கள் திணைக்களமானது பணிப்பாளர் நாயகம் உள்ளடங்கலாக நான்கு மேலதிக பணிப்பாளர்களினாலும் நிருவகிக்கப்படுகிறது. பிரிவுத்தலைவர்கள் என செயற்படுகின்ற பணிப்பாளர்களின் மேற்பார்வையின் கீழ் பின்வரும் பிரிவுகள் மற்றும் அலகுகள் செயற்படுத்தப்படுகின்றன.

- ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு
- கிழக்கு ஆசியப் பிரிவு
- உலக வங்கி மற்றம் சர்வதேச நாணய நிதிப் பிரிவு
- சீனா மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிப் பிரிவு
- மத்திய கிழக்கு மற்றும் தென்னாசிய நாடுகள் பிரிவு
- முன்னேற்றமடைந்த பொருளாதாரப் பிரிவு
- ஐக்கிய நாடுகள் முகவராண்மை மற்றும் தொழில்நுட்ப உதவிப் பிரிவு
- மூலதனச் சந்தை மற்றும் முதலீட்டுப் பிரிவு
- படுகடன் முகாமைத்துவப் பிரிவு
- தகவல், வளங்கள் ஒருங்கிணைப்பு மற்றும் கொள்கை ஆராய்ச்சி கற்கைகள் பிரிவு
- நிர்வாகப் பிரிவு
- நிதிப் பிரிவு
- துறைகளுக்கிடையேயான ஒருங்கிணைப்பு செயலாற்றுகை மேற்பார்வை பிரிவு
- தகவல் தொழில்நுட்ப பிரிவு

# மேன்நோக்கு

“தூர நோக்கு 2025” என்ற அரசாங்கத்தின் கொள்கை ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ளவாறான அதன் புதிய அபிவிருத்திச் சவால்களை, நடுத்தர வருமான நாடு என்ற நிலையினை அடையப்பெற்றுள்ள இலங்கை, சமநிலையான பொருளாதார வளர்ச்சியினைத் தோற்றுவிப்பதற்கான நிலைமைகளை உருவாக்குவதற்காக அர்ப்பணித்துள்ளது. இச்சூழ்நிலையில், குறுகிய காலத்தில் கணிசமான பொருளாதார மற்றும் நிதி வருமானங்களைப் பெற்றுக்கொள்ள முடியுமான துறைகளில் தனியார் துறை முதலீடுகளை ஊக்குவித்து, அடுத்துவரும் ஐந்து வருடங்களில் மொ.உ.உற்பத்தியில் 5-6 சதவீத மட்டத்தில் வருடாந்த பொது முதலீட்டினைப் பேணுவதற்கான நடவடிக்கையினையும் எடுத்துள்ளது.

நாட்டின் பொது முதலீட்டு இடைவெளியினைக் கட்டுப்படுத்துவதற்கு மொத்த உள்நாட்டுச் சேமிப்புக்கள் முற்றிலும் போதாத நிலையில், அரசாங்க முதலீடுகளில் குறிப்பிடத்தக்களவு பங்களிப்புச்செய்யும் வெளிநாட்டு நிதியளிப்பு வசதிகளின் பால் அரசாங்கம் அதிகம் சார்ந்திருக்க நேரிடுகிறது. வெளிநாட்டு நேரடி முதலீடு, ஏற்றுமதிகள் மற்றும் சுற்றுலாத்துறை என்பனவற்றினை ஊக்குவித்து நடுத்தர மற்றும் நீண்ட காலத்தில் குறிப்பிடத்தக்க பொருளாதார வருமானங்களை உருவாக்குவதற்காக பாரியளவிலான மூலோபாய உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு வெளிநாட்டு நிதியளிப்புக்கள் பிரதானமாக செலவிடப்படுகின்றன. இதேவேளை, நீண்ட காலத்தில் பல நேர்மறையான விளைவுகளைக் கொண்டிருக்கும் சுகாதாரம், கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுக் கருத்திட்டங்களை மேம்படுத்துவதன் மூலம் எமது மனித வளத்தின் தரத்தினை மேம்படுத்துவதற்கும் விசேட கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது.

அதற்கமைய, நாட்டின் படுகடன் நிலைபேற்றுத்தன்மையினைப் பேணி சாத்தியமான ஆகக் குறைந்த செலவினத்தில் தேவைப்பட்ட வெளிநாட்டு நிதியளிப்பினைத் திரட்டுவதன் பால் கவனஞ்செலுத்துகின்ற எமது கடன் பெறுகை மூலோபாயத்துடன் இணைந்த வகையில் வெளிநாட்டு நிதியளிப்பு வசதிவாய்ப்புக்களை நாம் ஆராய்கின்றோம்.

எவ்வாறாயினும், நாடு உயர் நடுத்தர வருமான நாடு என்ற நிலையினை அடைந்துள்ளதன் காரணமாக சலுகை நிதியளிப்புக்கான கிடைப்பனவானது கடந்த ஐந்து ஆண்டுகளில் கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. ஆதலால், கடன்பெறுகைச் செலவினத்தினை சாத்தியமான மட்டத்தில் பேணி நிதிச் சந்தைகள் மற்றும் இரு தரப்பு மற்றும் பல்தரப்பு அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்து கலப்பு சலுகையல்லாத, சலுகையுடன் கூடிய மற்றும் வர்த்தக நிதியங்கள் என்பனவற்றிலிருந்து பொது முதலீடுகளைத் திரட்டுவதற்காக வெளிநாட்டு நிதியளிப்பிற்கான தெரிவுகளை விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. பல்கட்ட நிதியளிப்பு வசதிகள், வித்தியாசமான மாறும் மற்றும் மாறா பரவல்களுடன் கூடிய நெகிழும் தன்மை கொண்ட கடன் விலையிடல் தெரிவுகள், முதிர்வுக் கால கட்டமைப்புக்கள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டக் கடன்கள் என்பன போன்ற புதிய நிதியளிப்பு மாதிரிகளும் இந்நோக்கத்திற்காக அரசாங்கத்தினால் கண்டறியப்பட்டுள்ளது. பல்வேறுபட்ட மூலோபாய அபிவிருத்திக் கருத்திட்டங்களைச் செயற்படுத்தவதற்காக உடன்பாடான விகிதங்களில் உள்ளூர் வங்கிகளிலிருந்து நிதியளிப்புக்களைத் திரட்டுவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

மறுபக்கத்தில், நிரல் அமைச்சுக்களினால் ஆரம்பிக்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்ட முன்மொழிவுகளின் எண்ணிக்கையிலும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதன் காரணமாக வெளிநாட்டு நிதியளிப்புக்கான கேள்வியிலும் கடந்த காலங்களில் கணிசமானளவு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், தற்போதைய சட்ட மற்றும் வெளிநாட்டுக் கடன்பெறுகைகளோடு சம்பந்தப்பட்ட நிறுவன ரீதியான வரையரைகள், அரசாங்க வரவுசெலவுத்திட்டத்தில் அவற்றினை உள்வாங்குவதற்கான திறன் அவ்வாறே நடுத்தர மற்றும் நீண்ட காலத்திற்கெதிராக படுகடன் நிலைபேற்றுத்தன்மையினைப் பேணுவதன்பால் அரசாங்கத்தின் அர்ப்பணிப்பு என்பன உள்ளடங்கலாக பல்வேறுபட்ட காரணங்களுக்காக எதிர்பார்க்கப்பட்டவாறான அதே விகிதங்களில் வெளிநாட்டுப் படுகடன்களை அதிகரிப்பதற்கு முடியாதுள்ளது.

மேலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் கருத்திற்கொள்ளப்பட்டு, அரசாங்கம் நாணய ஏற்ற இறக்க இடர்வுகள் மற்றும் வெளிவாரியான அதிர்வுகள் காணப்பட்ட போதிலும் சாத்தியமான நாணய மற்றும் அரசிறை முகாமைச் செயற்பாடுகள் என்பனவற்றினைக் கடைபிடிப்பதன் மூலம் அதன் தவறுகையற்ற நிலையினைப் பேணி மேலே குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு முறையாக கவனஞ்செலுத்தி 2018 ஆம் ஆண்டின் போது பொது முதலீட்டுக்குத் தேவையான வெளிநாட்டு வளங்களை அரசாங்கம் திரட்டியுள்ளது.

# வெளிநாட்டு நிதியளிப்பு

## வெளிநாட்டு நிதியை திரட்டுதல்

இலங்கையில் அபிவிருத்திக்காக அரசாங்கம் சார்பில் வெளிநாட்டு வளங்களை ஒன்றுதிரட்டுவது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பிரதான பணியாகும். அதற்கமைய, அரசாங்கம் கடந்த நான்கு தசாப்த காலமாக பல்வேறுபட்ட இருதரப்பு மற்றும் பல்தரப்பு அபிவிருத்தி தரப்புக்களையும் வெளிநாட்டு சந்தைகளையும் பயன்படுத்தி சலுகைக் கடன், ஏற்றுமதிக் கடன், தொழில்நுட்ப உதவிகள், முழுமையான கொடைகள் மற்றும் மூலதன சந்தைக் கடன் எனும் வழிமுறைகள் மூலம் வெளிநாட்டு நிதியை ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கையின் கடன் தொகுதி காலத்திற்கு ஏற்ப குறிப்பிடத்தக்க பல்வகைப்படுத்தலுக்கு உட்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார அபிவிருத்தி காரணமாக நிகழும் தனியாள் வருமானத்தின் தொடர்ச்சியான அதிகரிப்புக்கு இணைவாக ஏற்படும் கேள்விக்கு சார்பாக அதன் பரிமாண அமைப்பு மற்றும் வகை காலத்திற்கு ஏற்ப மாறுபட்டுள்ளது. வீதி, அதிவேகப் பாதைகள், பாலங்கள், மின்சாரம், துறைமுகங்கள், விமான நிலையங்கள், நீர் வழங்கல், நீர்பாசனம் மற்றும் புகையிரதப் பாதைகள் போன்ற பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி கருத்திட்டங்களின் நிதியிடலில் அரசாங்கம் பாரிய அளவில் வெளிநாட்டு நிதியை ஈடுபடுத்தியுள்ளது. இலங்கை கீழ் நடுத்தர வருமானம் கொண்ட நாடாக வகைப்படுத்தப்பட்டுள்ள காரணத்தினால் முழுமையான கொடைகள் மற்றும் சலுகைக் கடன்கள் மீதான பிரவேசம் குறைந்துள்ளதோடு, சலுகைக் கடன் மற்றும் சலுகையற்ற கடன்களின் கலவை மற்றும் வெளிநாட்டு மூலதன சந்தைக் கடன், கடன் தொகுதியின் பிரதான அங்கமாக மாறியுள்ளது.

வெளிநாட்டு வளங்களை ஒன்றுதிரட்டுவதில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், அரசாங்க கடனின் நிலைபேற்தன்மையைப் பேணிய வண்ணம் அரசாங்கத்தின் நடுத்தரகால நிதிக் கொள்கைச் சட்டகம் மற்றும் கடன் மூலோபாயங்களினால் தயாரிக்கப்பட்டுள்ள இலக்குகளை அடைந்த வண்ணம் நாட்டில் நிலவும் சட்ட வரையறைகளுக்கு உட்பட்டு தனது பணியை சிறப்பாக நிறைவேற்றியுள்ளது.

2018 ஆம் ஆண்டு வெளிநாட்டு அபிவிருத்தி தரப்புக்களின் மற்றும் கடன் வழங்கும் முகவராண்மை நிறுவனங்கள் மூலம் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்காக கிடைக்கப்பெற்ற மொத்த நிதி ஒப்புதல்களின் அளவு 1,241.59 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அதில் 1,108.67 மில்லியன் அமெரிக்க மொலர்கள், 28 ஒப்பந்தங்கள் மூலமான கடனாகவும் எஞ்சிய 132.92 மில்லியன் அமெரிக்க டொலர்கள், 11 கொடை ஒப்பந்தங்கள் ஊடாகவும் 2018 ஆம் ஆண்டு கிடைக்கப்பெற்றுள்ளது. 2018 ஆம் ஆண்டு கடன் ஒப்புதல் பின்வருமாறு பிரதான கருத்திட்டங்களை ஆரம்பிப்பதற்காக வழங்கப்பட்டது. மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டதிற்காக 201 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும் பொதுக் கல்வி நவீனமயமாக்கல் கருத்திட்டத்திற்காக 100 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சர்வதேச அபிவிருத்தி நிறுவனம் எனும் உலக வங்கியினாலும் திறன்கள் அபிவிருத்தி கருத்திட்டத்திற்காக மேலதிக நிதியாக (120 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியினாலும் இலங்கையில் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் 64.31 கி.மீ நீளம் வீதி விரிவாக்கத்திற்காகவும் மேம்படுத்துவதற்கும் 13 பாலங்களை மீண்டும் அமைப்பதற்கு சீன அரசாங்கத்தினால் (84.98 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) வழங்கப்பட்டுள்ளது. . மொத்த அர்ப்பணிப்புகள் கீழே அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. 2,500 ஐ.அ.டொ. சர்வதேச இறை முறை வழங்கல் மற்றும் சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து கடன் வசதி ஐ.அ.டொ 1,000 மில்லியன் என்பவற்றை உள்ளடக்கியது. திறைசேரி முறிகள் உண்டியல்களில் வெளிநாட்டு முதலீடுகள் உள்ளடக்கப்படவில்லை. அரச உடமை தொழில்முயற்சிகளுக்கு அபிவிருத்தி பங்காளர்கள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட நிதி அர்ப்பணிப்புகளும் இதில் உள்ளடக்கப்படவில்லை.

மேலும், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் நீர் வழங்கல் கருத்திட்டங்களுக்காக நெதர்லாந்து அரசாங்கத்தினால் ஐ.என்.ஜீ. வங்கியினால் மற்றும் ஒஸ்ரியாவின் யுனாகெட் வங்கியினால்

பெற்றுக்கொள்ளப்பட்ட 160 மில். அமெரிக்க டொலர்களுக்காக இலங்கை அரசாங்கத்தினால் இறையான்மை பிணையங்கள் வழங்கப்பட்டுள்ளன.

### அபிவிருத்தி தரப்புக்களுக்கு அமைய வெளிநாட்டு நிதி ஒப்புதல்கள் - 2018

| அபிவிருத்தி தரப்பு | நிதி ஒப்புதல் (ஐ.அ.டொ மில்லியன்) | | |
|---|---|---|---|
| | கடன் | கொடைகள் | மொத்தம் |
| **இருதரப்பு** | **475.99** | **57.00** | **532.99** |
| அவுஸ்திரேலியா | | 25.10 | 25.10 |
| பிரான்ஸ் | 50.88 | | 50.88 |
| ஜப்பான் | 95.78 | 2.30 | 98.08 |
| கொரியா | 14.00 | 7.50 | 21.50 |
| சவுதி அரேபியா | 15.83 | | 15.83 |
| நெதர்லாந்து | 59.07 | | 59.07 |
| ஒஸ்ரியா | 30.38 | | 30.38 |
| இந்தியா | 45.27 | | 45.27 |
| ஐக்கிய அமெரிக்கா | | 22.10 | 22.10 |
| சீனா | 164.78 | | 164.78 |
| **பல்தரப்பு** | **632.68** | **75.92** | **708.60** |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 472.50 | 25.00 | 497.50 |
| உலக வங்கி | 104.00 | | 104.00 |
| கமத்தொழில் அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | 6.18 | | 6.18 |
| சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் | 50.00 | | 50.00 |
| ஐக்கிய நாடுகள் முகவராண்மை | | 50.92 | 50.92 |
| **மொத்தம்** | **1,108.67** | **132.92** | **1,241.59** |

*குறிப்பு - இந்த அறிக்கைக்காக பயன்படுத்தப்பட்ட மாற்று சதவீதம் உரிய வருடத்தில் ஏற்புடைய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்ட திகதியில் காணப்பட்ட பல்வேறுபட்ட பண வகைகளின் செலாவணி வீதத்திற்கு அமைவானதாகும்.*

## வெளிநாட்டு நிதி வழங்கல்

2018 ஆம் ஆண்டு அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஊடாக கடன் மற்றும் கொடைகளாக வெளிநாட்டு அபிவிருத்தி தரப்புக்களிடமிருந்து மற்றும் கடன் வழங்கும் முகவராண்மை நிறுவனங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற மொத்த நலன்களின் பெறுமதி 1,389.98 மில்லியன் டொலர்களாகும். இதில் 1,368.34 மில்லியன் டொலர்கள் கடனாகவும் எஞ்சிய 21.64 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கொடையாகவும் கிடைக்கப்பெற்றுள்ளது. இக்காலப் பிரிவில் ஒவ்வொரு அபிவிருத்தி தரப்

# வெளிநாட்டு நிதி வழங்கல் 2018

| அபிவிருத்தி தரப்பு | நிதி வழங்கல் (ஐ.அ.டொ. மில்லியன்) | | |
|---|---|---|---|
| | கடன் | மானியம் | மொத்தம் |
| இருதரப்பு | **791.27** | **17.70** | **808.97** |
| பிரான்ஸ் | 71.74 | 0.40 | 72.14 |
| சீனா | 371.19 | | 371.19 |
| ஜேர்மனி | 2.53 | | 2.53 |
| இந்தியா | 49.34 | | 49.34 |
| ஜப்பான் | 156.76 | 14.40 | 171.16 |
| கொரியா | 15.44 | | 15.44 |
| குவைட் | 14.03 | | 14.03 |
| ஸ்பெயின் | 4.84 | | 4.84 |
| சவுதி அரேபியா | 16.93 | | 16.93 |
| நெதர்லாந்து | 31.59 | | 31.59 |
| ஐக்கிய இராச்சியம் | 15.83 | | 15.83 |
| அவுஸ்திரேலியா | 1.01 | | 1.01 |
| ஐக்கிய அமெரிக்கா | 9.42 | 2.90 | 12.32 |
| ஹங்கேரி | 0.04 | | 0.04 |
| எச்எஸ்பீசி (டென்மார்க்) | 8.37 | | 8.37 |
| பெல்ஜியம் | 0.29 | | 0.29 |
| ஒஸ்ரியா | 21.92 | | 21.92 |
| **பல்தரப்பு** | **577.07** | **3.94** | **581.01** |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 400.79 | 0.20 | 400.99 |
| உலக வங்கி | 153.20 | | 153.20 |
| கமத்தொழில் அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | 3.46 | | 3.46 |
| சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் | 19.62 | | 19.62 |
| ஐக்கிய நாடுகள் முகவராண்மை | | 3.74 | 3.74 |
| **மொத்தம்** | **1,368.34** | **21.64** | **1,389.98** |

*குறிப்பு - இந்த அறிக்கைக்காக பயன்படுத்தப்பட்ட மாற்று சதவீதம் உரிய வருடத்தில் ஏற்புடைய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்ட திகதியில் காணப்பட்ட பல்வேறுபட்ட பண வகைகளின் செலாவணி வீதத்திற்கு அமைவானதாகும்.*

## அர்ப்பணிக்கப்பட்டு செலவிடப்படாத மீதி

2018 ஆம் ஆண்டு இறுதியில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆயினும் இது வரையில் அபிவிருத்தி கருத்திட்டங்களில் ஈடுபடுத்தவுள்ள வெளிநாட்டு நிதியின் அளவு 8,139.8 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். இதில் நூற்றுக்கு 61 சதவீதம் இருதரப்பு அபிவிருத்தி தரப்பினரிடமிருந்து வழங்கப்படவுள்ளதோடு, எஞ்சிய நூற்றுக்கு 39 சதவீதம் பல்தரப்பு அபிவிருத்தி தரப்பினரிடமிருந்து வழங்கப்படவுள்ளது.

### 2018 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியில் அபிவிருத்தி தரப்புக்களுக்கு அமைய ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆயினும் கிடைக்க வேண்டிய வெளிநாட்டு நிதியின் அளவு

| அபிவிருத்தி தரப்பு | தொகை (ஐ.அ.டொ. மில்லியன்) | % |
|---|---|---|
| **இரு தரப்பு** | **4,957.2** | **61.0** |
| பிரான்ஸ் | 411.3 | 5.1 |
| அவுஸ்திரேலியா | 0.1 | 0.0 |
| சீனா | 1,878.0 | 23.1 |
| நெதர்லாந்து | 96.5 | 1.2 |
| ஐக்கிய இராச்சியம் | 5.1 | 0.1 |
| ஒஸ்ரியா | 29.6 | 0.4 |
| இந்தியா | 524.3 | 6.4 |
| ஜப்பான் | 1,565.0 | 19.2 |
| குவைட் | 77.9 | 1.0 |
| பாகிஸ்தான் | 14.9 | 0.2 |
| கொரியா | 83.0 | 1.0 |
| ரஷ்யா | 134.7 | 1.7 |
| ஜேர்மனி | 35.5 | 0.4 |
| எச்எஸ்பீசி (டென்மார்க்) | 11.1 | 0.1 |
| பெல்ஜியம் | 0.1 | 0.0 |
| ஸ்பெயின் | 24.4 | 0.3 |
| எச்எஸ்பீசி (ஹொங்கொங்) | 65.7 | 0.8 |
| **பல்தரப்பு** | **3,182.5** | **39.0** |
| உலக வங்கி | 1,092.8 | 13.4 |
| கமத்தொழில் அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | 58.9 | 0.7 |
| சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் | 156.8 | 1.9 |
| சவுதி நிதியம் | 159.2 | 2.0 |
| ஐரோப்பிய முதலீட்டு வங்கி | 57.2 | 0.7 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 1,657.6 | 20.4 |
| **மொத்தம்** | **8,139.8** | **100.0** |


*மொத்த செலவிடப்படாத மீதியில் 26.18 சதவீதம் பாதை மற்றும் பாலங்கள் துறைக்கானது என்பதுடன் நீர்வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டுத் துறை ஒவ்வொன்றுக்கும் 22.38 சதவீதமாகும்.*

### வேண்டியிருந்த வெளிநாட்டு நிதி – பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு அமைய

| பிரிவு | தொகை (ஐ.அ.டொ. மில்) | % |
|---|---|---|
| **கமத்தொழில் பிரிவு** | | **7.37** |
| கமத்தொழில் | 144.0 | 1.77 |
| கால்நடை வள அபிவிருத்தி | 56.4 | 0.69 |
| காணி மற்றும் நீர்ப்பாசனம் | 399.2 | 4.90 |
| **பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள்** | **5,370.5** | **65.98** |
| பெருந்தெருக்கள் மற்றும் பாலங்கள் | 2,130.7 | 26.18 |
| துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை | 186.3 | 2.29 |
| மின்சாரம் மற்றும் வலுச்சக்தி | 532.5 | 6.54 |
| போக்குவரத்து | 699.5 | 8.59 |
| நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டு | 1,821.5 | 22.38 |
| **சமூக உட்கட்டமைப்பு வசதிகள்** | **1,031.3** | **12.67** |
| கல்வி மற்றும் பயிற்சி | 16.3 | 0.20 |
| தொழில் மற்றும் தொழிற் பயிற்சி | 64.2 | 0.79 |
| சுகாதாரம் மற்றும் சமூக நலன்புரி | 194.3 | 2.39 |
| வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி | 293.2 | 3.60 |
| அனர்த்த முகாமைத்துவம் | 463.3 | 5.69 |
| கிராமிய அபிவிருத்தி | **133.2** | **1.64** |
| சுற்றாடல் | **293.4** | **3.60** |
| நிதி | **290.0** | **3.56** |
| வேறு | **421.8** | **5.18** |
| **மொத்தம்** | **8,139.8** | **100.00** |

## வெளிநாட்டுக் கடன் நிலுவை மற்றும் வெளிநாட்டு கடன் சேவை கொடுப்பனவுகள்

ஆண்டு இறுதியில் அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன் நிலுவை 32.54 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும். 2018 ஆம் ஆண்டு மொத்த கடன் செலுத்துகைக் கட்டணம் 2,920.0 மில்லியன் அமெரிக்க டொலர்களாகும். அதில் 1,805.7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆரம்ப கடன் தவணைகளை செலுத்துவதற்கும் எஞ்சிய 1,114.3 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வட்டிக் கொடுப்பனவுக்கும் செலவிடப்பட்டது. 2015-2018 வரை கடன் சேவைக் கட்டணங்கள் மற்றும் 2026 ஆம் ஆண்டு வரையில் மதிப்பீடு செய்யப்பட்ட கடன் சேவைக் கட்டணம் இந்த வரைபின் மூலம் காட்டப்பட்டுள்ளது.





*குறிப்பு:*

1. *அபிவிருத்தி கருத்திட்டங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன்கள், சர்வதேச இறையாண்மை பிணைமுறிகள், வெளிநாட்டு செலாவணி நடப்பு நிதி வசதிகள் உள்ளடங்குகின்றன. ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தவிர்ந்த ஏனைய அரச சார்பு நிறுவனங்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் உள்ளடக்கப்படவில்லை.*

2. *கடன் சேவைக் கட்டணம் = கடன் தவணைக் கட்டணம் செலுத்தல் + கடனுக்கான வட்டி செலுத்தல்.*
   *ஹம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தவிர்ந்த ஏனைய அரச சார்பு நிறுவனங்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன்கள் உள்ளடக்கப்படவில்லை.*

## வெளிநாட்டுக் கடன் முதிர்ச்சி அடையும் கட்டமைப்பு

அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கான நிதிக்காக 32.54 பில்லியன் அமெரிக்க டொலர்களான மொத்த கடன் தொகை அண்ணளவாக நூற்றுக்கு 22 வீதம் அளவு எதிர்வரும் 5 வருட காலத்திற்குள் முதிர்ச்சி அடையவுள்ளது. எதிர்வரும் வருட காலத்தில் மொத்த கடன் சுமையின் நூற்றுக்கு 32 சதவீதம் முதிர்ச்சி அடையவுள்ளது. எஞ்சியவை நூற்றுக்கு 46 சதவீதம் 10 வருடங்களின் பின்னர் முதிர்ச்சி அடையும்



# பிரிவுகள் வாரியான செயலாற்றுகை

# ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு

ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு, குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான திட்டங்கள் / கடன்களுடன் ஒரு பெரிய மற்றும் பல்வகைப்பட்ட சேவைகளை நிர்வகிக்கிறது, ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து அபிவிருத்தி உதவிகளை திரட்டுதல் தொடர்பான அனைத்து செயற்பாட்டு காரணிகளிலும் ஈடுபட்டுள்ளது. நாடு பங்களிப்பு மூலோபாயத்தின் உருவாக்கம், நாடு செயற்பாட்டு வியாபாரத் திட்டத்தை (COBP) தயாரித்தல், கடன்களின் பேச்சுவார்த்தைகள் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து திரட்டப்பட்ட நிதியுதவியின் பயனுள்ள பயன்முறையை எளிதாக்குதல் ஆகியவை இதில் அடங்கும். திட்டம் மற்றும் கொள்கை அடிப்படையிலான கடன்கள், மானியங்கள், பங்கு முதலீடுகள், கொள்கை உரையாடல்கள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளை வடிவத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து உதவி திரட்டப்படுகிறது.


ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவானது, திட்டமிடப்பட்ட நிதியின் விதிமுறைகளையும் நிபந்தனைகளையும் மதிப்பிடுவதற்கும், ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்த ஏனைய ஆதாரங்களைத் தடுத்தல், தெற்கு ஆசியாவின் உப பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பு (SASEC) மற்றும் ஆசியா பசிபிக் பேரழிவு அபாய நிதியம் ஆகியவற்றிற்கும் பொருத்தமான ஆதாரங்களை மேம்படுத்துவதற்கு பொறுப்பாகும். இலங்கையில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் அல்லாத இறையாண்மை செயற்பாடுகளையும் பிரிவினையும் உதவுகின்றது.

## இலங்கையின் அபிவிருத்திப் பங்காளராக ஆசிய அபிவிருத்தி வங்கி

ஆசிய அபிவிருத்தி வங்கியானது, 31.12.2018 ஆம் ஆம் திகதியன்று சுமார் 9.7 ஐ.அ.டொ பில்லியன் பெறுமதியான கடன்கள், நன்கொடைகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகளைக் கைச்சாத்திடுவதன் மூலம் 1966 ஆம் ஆண்டிலிருந்து இலங்கையுடன் நெருக்கமாக பணி புரிந்து வந்துள்ளது. பொருளாதாரப் பன்முகப்படுத்தல் மற்றும் உற்பத்தித் திறன் மேம்பாடு என்பவற்றிற்கான முன்னுரிமை முதலீடுகள், உட்கட்டமைப்புக்களைக் கட்டியெழுப்பல், (போக்குவரத்து வலு மற்றும் நகர) பொருளாதாரத் தாழ்வாரமொன்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் மனித மூலதனத்தை விருத்தி செய்தல் என்பனவற்றை மையமாகக் கொண்டிருக்கும். உள்ளடக்கத்தினை, மேம்படுத்துவதற்கான முன்னுரிமை பெற்ற முதலீடுகள், விவசாய உட்கட்டமைப்பினையும், வர்த்தகமயமாக்கலையும் வலுப்படுத்துதல், கிராமிய இணைப்பினை விருத்தி செய்தல், பொதுச் சேவைகளின் விநியோகத்தினை விருத்தி செய்தல், மற்றும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகளுக்கான நிதிக்கான அடைவை விரிவடையச் செய்தல் என்பனவற்றினை உள்ளடக்கியிருக்கும்.


## 2018 இன் அர்ப்பணிப்புக்களும், பகிர்வுகளும்

2018 ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த அர்ப்பணிப்புக்கள் 497.5 ஐ.அ.டொ. மில்லியனாகும். இத்தொகையானது 472.5 ஐ.அ.டொ மில்லியன் கடன்களையும், மற்றும் 25 ஐ.அ.டொ. மில்லியன் நன்கொடைகளையும் உள்ளடக்கியுள்ளது. 2018 ஆம் ஆண்டில் திரட்டப்பட்ட கடன்களும், நன்கொடைகளும் நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் துறைக்கான 210 ஐ.அ.டொ. மில்லியன், கல்வி∴திறன்கள் அபிவிருத்தித் துறைக்கான 103 ஐ.அ.டொ. மில்லியன் நிதித் துறைக்கான 84.5 ஐ.அ.டொ மில்லியன் மற்றும் சுகாதாரம், சக்தியும் வலுவும் இரண்டு துறைகளுக்குமான 50 ஐ.அ.டொ மில்லியன்களையும் உள்ளடக்கியுள்ளது.





2018 ஆம் ஆண்டில் மொத்தப் பகிர்வானது 497.5 ஐ.அ.டொ. மில்லியன்களாக இருந்தது.

துறை வாரியான பகிர்வின் விநியோகம் 2018 (ஐ.அ.டொ மில்லியன்)




## 2018 ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் தொகுதி

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தற்போதைய கடன் தொகுதி நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 29 கருத்திட்டங்களையும், 05 நன்கொடைகளையும் மற்றும் 22 தொழில்நுட்ப உதவிகளையும் உள்ளடக்கியுள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் தொகுதியானது, 06 துறைகளுக்குள் முதலிடப்பட்டுள்ளது. அதாவது வீதியும் போக்குவரத்தும் துறையே பாரிய துறையாகவும், அதனைத் தொடர்ந்து சக்தியும், வலுவும், நகர அபிவிருத்தி, நீர் வழங்கலும், துப்புரவாக்கலும், கல்வி ∴ திறன்கள் ∴மனித வள அபிவிருத்தி, நீர்ப்பாசனம், சுற்றுச் சூழல், மற்றும் விவசாயத் துறைகளே அவ்வாறு முதலிடப்பட்ட துறைகளாகும் பின்வரும் தரவுகள் 2018 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியளவில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் துறைவாரியான கடன் தொகுதியை உள்ளடக்கியுள்ளது.




## 2018 இல் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பிரதான கருத்திட்டங்கள

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் 2018 இல் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பிரதான கருத்திட்டங்களின் பட்டியல் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

| நிகழ்ச்சித் திட்டம் ∴ கருத்திட்டம் | தொகை (ஐஅடொ மில்லியன்) |
|---|---|
| **வீதி மற்றும் போக்குவரதத்துத் துறை** | |
| தெற்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் | 75.00 |
| ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் கட்டம் 1 | 90.00 |
| ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் கட்டம் 2 | 107.00 |
| ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் கட்டம் 3 | 200.00 |
| 2 ஆம் ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 1 | 150.00 |
| ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 4 | 150.00 |
| வடக்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் - மேலதிக நிதியீடு | 95.00 |
| போக்குவரத்துக் கருத்தட்டத் தயாரிப்பு வசதியளிப்புக் கருததிட்டம் | 24.48 |
| கூரை மீது பொருத்தப்பட்ட சக்தி உருவாக்கக் கருத்திட்டம் | 50.00 |
| பெண் தொழில் முயற்சியாளர்களுக்கான நிதி முன்னெடுப்புக்கள் (நுந – குஐ) | 9.50 |
| **சக்தியும் வலுவும்** | |
| தூய சக்தி, வலையமைப்பு வினைத்திறன் விருத்திக் கருத்திட்டம் | 128.00 |
| பசுமை சக்தி அபிவிருத்தியும், சக்தி வினைத்திறன் அபிவிருத்தி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 1 | 150.00 |
| பசுமை சக்தி அபிவிருத்தியும், சக்தி வினைத்திறன் அபிவிருத்தி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 2 | 150.00 |
| மின்சக்தி வழங்கல் நம்பகத்தன்மை விருத்திக்கு ஆதரவளித்தல் | 115.00 |
| காற்றுச் சக்தி அபிவிருத்திக் கருத்திட்டம் | 200.00 |
| **நகர அபிவிருத்தியும், நீரும், துப்பரவாக்கலும்** | |
| பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ கருத்திட்டம் | 100.00 |
| யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல், துப்புரவாக்கல் கருத்திட்டம் | 90.00 |
| உலர் வலய நகர நீர் மற்றும் துப்புரவாக்கல் கருத்திட்டம் - மேலதிக நிதியீடு | 40.00 |
| உள்ளூராட்சி விரிவாக்கத் துறை கருத்திட்டம் - மேலதிக நிதியீடு | 60.00 |

| நிகழ்ச்சித் திட்டம் / கருத்திட்டம் | தொகை (ஐஅடொ மில்லியன்) |
|---|---|
| பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ விருத்தி முதலீட்டுக் நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 1 | 84.00 |
| பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ விருத்தி முதலீட்டுக் நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 2 | 88.00 |
| பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ விருத்தி முதலீட்டுக் நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 3 | 128.00 |
| யாழ் மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் கருத்திட்டம் - மேலதிக நிதியீடு | 120.00 |
| **நிதியீடு** | |
| அரசிறை முகாமைத்துவ வினைத்திறன் கருத்திட்டம் | 30.80 |
| மூலதனச் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 250.00 |
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் கடன் வரிசைக் கருத்திட்டம் | 100.00 |
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் கடன் வரிசைக் கருத்திட்டம் – மேலதிக நிதியீடு | 75.00 |
| **கல்வி.்.திறன்கள்.்.மனித வள அபிவிருத்தி** | |
| கல்வித் துறை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 200.00 |
| திறன்கள் துறை விரிவாக்க நிகழ்ச்சித் திட்டம் | 100.00 |
| திறன்கள் துறை விரிவாக்க நிகழ்ச்சித் திட்டம் – மேலதிக நிதியீடு | 103.00 |
| **நீர்ப்பாசனம், சுற்றுச் சூழல், மற்றும் விவசாயம்** | |
| மகாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டு நிகழச்சித் திட்டம் - கட்டம் 1 | 150.00 |
| வட மாகாண நிலைபேறான கடற்றொழில் அபிவிருத்திக் கருத்திட்டம் (ஜனுயு) | 1.30 |
| மகாவலி நீர்ப் பாதுகாப்பு முலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 2 | 210.00 |
| **மொத்தம்** | **3,624.08** |

## 2018 இல் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டதும் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டதுமான கடன்களும் நன்கொடைகளும்

2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மொத்தமாக 841.5 ஐ.அ.டொ. மில்லியன் பெறுமதியான 8 கடன்களுக்கும், மற்றும் 2 நன்கொடைகளுக்குமான பேச்சுவாத்தைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, 992.5 ஐ.அ.டொ மில்லியன் பெறுமதியான அமுலாக்கப்பட்டதாக பிரகடனப்படுத்தப்பட்டன.

| கருத்திட்டம் | கடன் /நன்கொடை | தொகை (ஐஅடொ மில்லியன்) |
|---|---|---|
| **அமுலாக்கப்பட்டவைகள்** | | |
| திறன்கள் துறை விரிவாக்கக் கருத்திட்டம் - மேலதிக நிதியீடு | கடன் | 100.0 |
| திறன்கள் துறை விரிவாக்கக் கருத்திட்டம் - மேலதிக நிதியீடு | நன்கொடை | 3.0 |
| யாழ்ப்பாண மற்றும் கிளிநொச்சி நீர் வழங்கல் கருத்திட்டம் - மேலதிக நிதியீடு | கடன் | 120.0 |
| மூலதனச் சந்தை அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | கடன் | 125.0 |
| இரண்டாவது ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் | கடன் | 150.0 |
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் கடன் கருத்திட்டம் - மேலதிக நிதியளிப்பு | கடன் | 75.00 |
| ஒருங்கிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 04 | கடன் | 150.0 |
| பெண் தொழில்முயற்சியாளர்களுக்கு நிதி முன்னெடுப்புக்கள் (ருந – குை) | நன்கொடை | 9.5 |
| கூரையில் பொருத்தப்படும் சூரிய சக்தி உருவாக்கக் கருத்திட்டம் | கடன் | 50.0 |
| மகாவலி நீர் வழங்கல் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 2 | கடன் | 210.0 |
| **மொத்தம்** | | **992.5** |

## 2019 இன் கடன் செயற்பாடுகள்

பின்வரும் அட்டவணையானது 2019 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து செயற்படுத்தப்பட்டு வந்த கடன்களுக்கான பிரதான கருத்திட்டங்களின் பட்டியலைக் காட்டுகின்றது.

| **கருத்திட்டம்** | **தொகை (ஐஅடொ மில்லியன்)** |
|---|---|
| நகர கருத்திட்டம் தயாரிப்பு வசதியளிப்பு – தொழில்நுட்ப உதவிக் கடன் | 10 |
| விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மனித வள அபிவிருத்திக் கருத்திட்டம் | 145 |
| தென்னாசிய உப பிரதேச பொருளாதார ஒருங்கிணைப்பு துறைமுக உட்பிரவேச உயர்த்தப்பட்ட நெடுஞ்சாலைகள் கருத்திட்டம் | 300 |
| களனிப் பள்ளத்தாக்கு புகையிரத புகையிரத விருத்தி நிகழ்ச்சித் திட்டம் கட்டம் 1 புகையிரத வினைத்திறன் விருத்திக் கருத்திட்டம் | 160 |
| பிரதேச அபிவிருத்தி வங்கியைப் வலுப்படுத்தல். கருத்திட்டம் | 50 |
| இரண்டாவது ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (கட்டம் 1) | 150 |
| **மொத்தம்** | **815** |

## 2018 இல் நிகழ்ந்த விஷேட நிகழ்வுகள்

- மார்ச் – ஆசிய அபிவிருத்தி வங்கியுடனான வருடாந்த நாட்டின் நிகழ்ச்சித் திட்டமிடலுக்கான ஆலோசனை
- மே – பிலிப்பைன்ஸ் மெனிலா நகரத்தில் இடம்பெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் 51 ஆவது வருடாந்தக் கூட்டம்

- **உயர் மட்ட தூதுவர் குழு**
    - ஜனவரி – ஆசிய அபிவிருத்தி வங்கியின் சபைக் குழு திரு சாஹ்த்ரபதி சிவாஜி, நிறைவேற்றுப் பணிப்பாளர், திரு ஹெல்மட் ஹெய்ஸ் பிச்சர், நிறைவேற்றுப் பணிப்பாளர், திரு முஹம்மட் சாமி சஹீட், நிறைவேற்றுப் பணிப்பாளர், திரு இன் சாங் சோங், நிறைவேற்றுப் பணிப்பாளர், திரு மாரிஓ குயிசெப்பி டி மாய்ஓ, பதில் நிறைவேற்றுப் பணிப்பாளர், திலு ஜொஹன்னெஸ் இமானுவேலட சனெய்டர் பதில் நிறைவேற்றுப் பணிப்பாளர்
    - மார்ச் - செல்வி இன்கிரிட் வேன் வீஸ், உப தலைவர் (நிதி மற்றும் இடர் முகாமைத்துவம்)
    - ஏப்ரில் - திரு. ஹன் கிம் , பணிப்பாளர் நாயகம், தெற்காசிய அபிவிருத்தி
    - ஆகஸ்ட் - திரு .வென்கை ஸாங், உப தலைவர், (செயற்பாடு 1)

- மேலே குறிப்பிடப்பட்டவைகள் உள்ளடங்கலாக 2018 இல் இலங்கைக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் 150 உயர் மட்டத்திலான தூதுக்குழுவொன்று விஜயம் செய்தது

# சீனா மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிப் பிரிவு

வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் சீனா மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிப் பிரிவானது அரசாங்கத்தின் அபிவிருத்தி முன்னெடுப்புகளுக்கு வசதியளிப்பதற்காக சீனா மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் கடன் வழங்கும் நிறுவனங்களிலிருந்து வெளிநாட்டு வளங்களை திருட்டுவது அவற்றின் கடமையாகும். கடன் வழங்குநருடன் சிறந்த ஒருங்கிணைப்பினைப் பேணுவதனூடாக கருத்திட்டச் செயற்படுத்துகையின் உறுதியான செயற்பாட்டினை உறுதிப்படுத்தவது இப்பிரிவின் பிரதான கடமையாகும்.

சீன அரசாங்கமானது இந்நாட்டில் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிக்கும் வகையில் முக்கியமான பங்கினை வகித்துள்ளதுடன் தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பாரியளவிலான உட்கட்டமைப்பு அபிவிருத்தி கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு கடந்த சில வருடங்களின் போது அபிவிருத்திப் பங்காளரொருவராக வளர்ந்து வருகின்றது. சீன உதவியாகப் பெற்றுக் கொள்ளப்படுகின்றவற்றில் பாதை மற்றும் போக்குவரத்து, துறைமுகம் மற்றும் விமான சேவைகள், நீர்வழங்கல் மற்றும் துப்பரவேற்பரவேற்பாடு மற்றும் மின்வலு மற்றும் சக்தித் துறை ஆகிய துறைகளில் முதலீடு செய்யப்பட்டது. சலுகை இயல்பையுடைய அதேவேளை நீண்ட முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட நிலையான நிதி ஒழுங்குவிதிகள் உயர் முதலீட்டுச் செலவுடன் பாரியளவிலான அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கு வசதியளிப்பதுடன் சில சீன நிதியளிப்பு வசதிகளை நன்மையாகக் கொண்டுள்ளன.

சீன அரசாங்கம் பின்வரும் பிரதான 3 அமைப்புகளில் அபிவிருத்தி உதவிகளை வழங்குகின்றது கடன்கள், மானியங்கள், சீன ஏற்றுமதி - இறக்குமதி வங்கி (சீன எக்சிம் வங்கி), சீன அபிவிருத்தி வங்கி மற்றும் சீனாவிலுள்ள கைத்தொழில் மற்றும் வர்த்தக வங்கிகள் போன்ற அரச உடமை சீன நிதி நிறுவனங்களின் ஊடாக வட்டிச் சலுகை கடன் வசதிகளும் வழங்கப்படுகின்றன. வர்த்தக அமைச்சினூடாக சீன அரசாங்கத்தினால் மானியங்கள் மற்றும் வட்டியல்லா கடன்கள் நேரடியாக வழங்கப்படுகின்றன. எச்எஸ்பிசி சர்வதேச வங்கி என்ற வகையில் சீன ஒப்பந்தக்காரர்களினால் செயற்படுத்தப்படும் கருத்திட்டங்களுக்கு நிதி வழங்குகின்றது.

## அர்ப்பணிப்புகள்

2008 இலிருந்து 2018 வரைக்கும் கருத்திட்டங்களுக்கான நிதியளிப்பிலிருந்து சீனாவினால் வழங்கப்பட்ட மொத்த நிதியளிப்பு 8,319 மில்லியன் ஐ.அ.டொலராகக் காணப்பட்டதுடன் அவற்றுள் 1,707 மில்லியன் ஐ.அ.டொலர் 2015 இன் பின்னர் பெறப்பட்டதாகும். (அரச உடமை தொழில் முயற்சிகள் உள்ளடங்களாக) மத்திய, ஊவா மாகாணங்களில் 64.31 கி.மீற்றர் பாதை விரிவாக்கல் மற்றும் மேம்பாடு, 13 பாலங்கள் புனரமைப்பு என்பவற்றுடன் இலங்கையில் மலைநாட்டு புகையிரதப்பாதை தொழிற்பாட்டுக் கருத்திட்டத்திற்காக 9 டீசல் என்ஜின்களை கொள்வனவு செய்தல் ஆகிய இரண்டு கடன் உடன்படிக்கைகள் 2018 கைச்சாத்திடப்பட்டன.

## இலங்கையில் மலைநாட்டு புகையிரதத் தொழிற்பாட்டுக் கருத்திட்டத்திற்காக 09 டீசல் என்ஜின்களைக் கொள்வனவு செய்தல்


இலங்கையில் மலைநாட்டு புகையிரத தொழிற்பாட்டுக் கருத்திட்டத்திற்காக 09 டீசல் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கு நிதியளிப்பதற்காக எச்எஸ்பிசி வங்கியுடன் 80 மில்லியன் ஐ.அ.டொலர் கடன் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்கம் கடன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது. இதற்கமைவாக இலங்கையில் மலைநாட்டு புகையிரத சேவையினை மேம்படுத்துவதற்காக புதிய இயந்திரங்களின் தொழிற்பாடு அதிகரிக்கப்படுவதுடன் 2019 இன் இறுதியில் முதலாவது கட்ட இயந்திரம் வந்தடையும். முதலாவது டீசல் இயந்திரம் 3 மாதங்களுக்கு இலங்கையில் தொழிற்படுத்தப்படுவதுடன் முதலாவது வெள்ளோட்டத்தின் பின்னர் இனங்காணப்பட்ட தேவையான மாற்றங்களைச் செய்வதற்கு மீண்டும் அனுப்பப்பட்டு எஞ்சிய இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்படும்.

## மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் 64.31 கி.மீற்றர் பாதை விரிவாக்கல் மற்றும் மேம்பாடு அத்துடன் 13 பாலங்கள் புனரமைப்பு

மிகவும் பழைமைவாய்ந்த பாதைகளை விரிவாக்கல், மேம்படுத்தல் மற்றும் பாலங்கள் மீள்கட்டமைப்பு போன்ற அரசாங்கத்தின் முன்னுரிமைத் துறைகளை செயற்படுத்துவதற்கு சீனாவின் எக்சிம் வங்கியின் ஹுனான் கிளையானது 85 மில்லியன் ஐ.அ.டொலர்களை நிதியளிப்பதற்கு உடன்பட்டது. (மொத்த ஒப்பந்தத் தொகையில் 85 சதவீதம்) இதன் மூலம் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் 64.31 கி.மீற்றர் பாதை விரிவாக்கப்பட்டு மேம்படுத்தப்படுவதுடன் 13 பாலங்கள் புனரமைக்கப்படும்.

# செலவிடல்

10 வருட காலப்பகுதியில் சீனாவினால் நிதியளிக்கப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்களின் மொத்த செலவிடலாக 6,173 மில்லியன் ஐ.அ.டொலர் நிதியளிக்கப்பட்டுள்ளது. இலங்கைக்கான வெளிநாட்டு நிதியளிப்பின் மொத்தச் செலவினமாக எக்சின் வங்கி மற்றும் சீடீபி வங்கி என்பன 2018 இல் 371 மில்லியன் ஐ.அ.டொலராகக் காணப்பட்டது. (அரச உடமை தொழில் முயற்சிகள் உள்ளடங்களாக)



## சீன ஏற்றுமதி - இறக்குமதி வங்கியிலிருந்து (சீன எக்சிம் வங்கி) அபிவிருத்தி உதவி

இலங்கை அரசாங்கம் சீன எக்சிம் வங்கியிலிருந்து கடன் பெற்றுவருகின்றது. இது முன்னுரிமை கொள்வனவாளர் கடன், சீன அரசாங்க சலுகைக் கடன் பிரதானமாக உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் நாட்டுக்கு நிலையான நன்மையினை ஈட்டித்தருகின்ற ஒத்துழைப்பு என்பனவாகும். தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த உதாரணமாக மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டைக்கு தெற்கு அதிவேகப் பாதையினை விரிவாக்குதல், கெரவலப்பிட்டியாவிலிருந்து கடவத்தைக்கு வெளிச்சுற்று நெடுஞ்சாலை கருத்திட்டம் கட்டம் III இனை நிர்மாணித்தல் என்பன சீன எக்சிம் வங்கியின் நிதி உதவியின் கீழ் 2018 இல் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டது. மேலும் தற்பொழுது நாட்டிலுள்ள அதிவேகப் பாதைகளின் உள்ளக இணைப்புகளும் அதிகரிக்கப்படுவதற்கு கருத்திட்டங்கள் இறுதிக்கட்டத்தினை அடைந்துள்ளன. 80 சதவீதத்திற்கதிகமான கருத்திட்டச் செயற்பாடுகள் தெற்கு அதிவேகப் பாதை விரிவாக்களின் நான்கு பிரிவுகளும் 2019 இல் நிறைவு செய்யப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. வெளிச்சுற்று பெருந்தெருக்கருத்திட்டத்தில் கட்டம் III இல் 85 சதவீதமான பணிகள் நிறைவடைந்துள்ளதுடன் 2019 யூன் அளவில் முழுமையாக நிறைவடையுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக, பாரிய குருநாகல் நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு கருத்திட்டத்தின் நிர்மாணப் பணிகள் 2018 இல் உறுதிப்படுத்தப்பட்டிருப்பதுடன் குருநாகல் பிரதேசத்தில் குடிநீருக்கான தேவை அதிகரித்துள்ள நிலையில் சீனாவின் எக்சிம் வங்கியின் உதவியுடன் முறையான கழிவு நீர் அகற்றல் முறைமையொன்றினை தாபிக்கப்படும். மாத்தறை – பெலியத்த – பிரிவு மாத்தறை – கத்தரகம புகையிரதப் பாதை கருத்திட்டம் இறுதிக்கட்டத்தை அடைந்துள்ளதுடன் பௌதிக முன்னேற்றத்தில் 80 சதவீதத்திற்கு அதிகமான அறிக்கையிடலினை கொண்டுள்ளது. புகையிரத தொழிற்பாட்டுப் பாதை 2019 இன் நடுப்பகுதியில் ஆரம்பிக்கப்படுமென திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், இலங்கையில் மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் 64.31 கி.மீற்றர் பாதை விரிவாக்கல் மற்றும் மேம்பாடு 13 பாலங்களின் புனரமைப்பு என்பவற்றுக்காக 85 மில்லியன் ஐ.அ.டொலர் நிதியுதவி யினைப் பெறமுடியுமாக இருந்ததுடன் நாட்டில் மேலும் பல உட்கட்டமைப்பு கருத்திட்டங்களுக்கு நிதியளிப்பதற்கு அரசாங்கத்திற்கு முடியுமாகவிருந்தது.

அதேபோன்று, கண்டி வடக்கு பாததும்பறை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டத்தின் உடன்படிக்கையொன்று தெற்கு அதிவேகப்பாதை விரிவாக்கல் கருத்திட்டத்தின் சிவில் பணிகளை வடிவமைத்தல் மீளாய்வு செய்தல் என்பவற்றுக்கான ஏற்பாடுகளைக் கொண்டுள்ளதுடன் 64.31 கி.மீற்றர் பாதை விரிவாக்கல் மற்றும் மேம்பாடு மற்றும் 13 பாலங்களின் மீள் கட்டமைப்பு என்பன 2018 இல் முன்னெடுக்கப்பட்ட கருத்திட்டங்களாகும்.

மேற்குறித்த அர்ப்பணிப்புகளுக்கு மேலதிகமாக, “ரஜரட்ட நவோதய – சனாதிபதி நிகழ்ச்சித்திட்டம் - 2016 – 2020 பொலன்நறுவை மாவட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றின் கீழ் பொலன்நறுவை கிழக்கு நகரங்கள் மற்றும் விவசாய பொருளாதார நிலையம் என்பவற்றினை அடிப்படையாகக் கொண்டு ஆரம்ப வேலை கடன் தொகையானது நிதியளிக்கப்பட்டது. மேலும், கடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு தேவையான செயன்முறை மத்திய அதிவேகப் பாதையின் பிரிவு 1 இற்காக முன்னெடுக்கப்பட்டதுடன் இது அரசாங்கத்தின் முன்னுரிமைக் கருத்திட்டம் என்பதுடன் 2019 இன் ஆரம்பத்தின் எக்சிம் வங்கியுடன் கடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

## சீன அபிவிருத்தி வங்கியிலிருந்து அபிவிருத்தி உதவிகள்

இலங்கை அரசாங்கம் சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து பெருந்தொகையான நிதியுதவிகளைப் பெற்றுள்ளதுடன் தற்பொழுது இலங்கைக்கான நிதி உதவியினை வழங்குகின்ற இரண்டாவது பெரிய சீன நிறுவனமாக கணிப்பிடப்படுகின்றது. தற்பொழுது சீன அபிவிருத்தி வங்கியின் மூலம் ஐந்து நீர் வழங்கல் கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அவையாவன, கம்பஹா, அத்தனகலை மற்றும் மினுவாங்கொடை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம், கட்டான நீர் வழங்கல் கருத்திட்டம் தம்புத்தேகம நீர் வழங்கல் கருத்திட்டம் வாழைச்சேனை நீர் வழங்கல் கருத்திட்டம் மற்றும் பண்டாரவளை, தியத்தலாவ மற்றும் ஹப்புத்தளை நீர் வழங்கல் கருத்திட்டம் என்பனவாகும். மேலும், முன்னுரிமைப் பாதை கருத்திட்ட புனரமைப்பு மற்றும் மேம்பாடு – 3 தொடர்பான கருத்திட்டங்கள் (கட்டம் 1) மற்றும் (கட்டம் 2) என்பன செயற்படுத்தப்படுவதுடன் கடன்களில் 60 சதவீதத்திற்கு அதிகமானது பயன்படுத்தப்பட்டுள்ளது. இக்கருத்திட்டங்கள் 2019 இல் நிறைவடையுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக ரூபா மீதான வெளிநாட்டு அழுத்தத்திற்கெதிராக நாட்டின் ஒதுக்குகளுக்கு பாரிய உத்தேகம் வழங்கும் வகையில் உயர்ந்த வட்டிவீதத்தில் இலங்கை அரசாங்கம் சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து வெளிநாட்டு நாணய நியதிகளுக்கமைய 1 பில்லியன் ஐ.அ.டொலர்களைப் பெற்றுள்ளது.

## ஹொங்கொங் அன்ட் சங்ஹாய் வங்கி கூட்டுத்தாபனத்திலிருந்து (எச்எஸ்பீசி) அபிவிருத்தி உதவி

இலங்கையில் பொது மக்கள் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் மிக முக்கிய கருத்திட்டங்களில் ஒன்றான இலங்கை மலை நாட்டு புகையிரத போக்குவரத்துக்கு 09 புகையிரத என்ஜின்களை சீன ஒப்பந்தக் கம்பனியான டொங்பாங் எலக்றிக் இன்ரநெஸனல் கோப்பிறேசனிலிருந்து கொள்வனவு செய்வதற்கு ஹொங்கொங் சங்ஹாய் வங்கியிலிருந்து 80 மில்லியன் ஐ.அ.டொலர்களை அரசாங்கம் பெற்றுக் கொண்டது. மேலும், இக்கருத்திட்டத்தின் கீழ் 13 வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்யும் நோக்கத்துடன் இலங்கையில் தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலைகளில் சுகாதார வசதிகளை தரமுயர்த்துவதற்கான கருத்திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு 72 மில்லியன் ஐ.அ.டொலர்களை கடனாகப் பெற்றுக் கொள்வதற்கு எச்எஸ்பிசி மற்றும் இலங்கை அரசாங்கம் என்பவற்றுக்கிடையில் பேச்சுவார்தைகள் நிறைவு செய்யப்பட்டன. இக்கடன் உடன்படிக்கை 2019 இன் ஆரம்பத்தில் கைச்சாத்திடப்படுவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

# ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி

இலங்கைக்கு பல்தரப்பு நிதி வழங்குநர்களின் குழுவில் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியானது இறுதியாக இணைந்து கொண்டது. பாதை மற்றும் ரயில் வலையமைப்பு, புதுப்பிக்கத்தக்க சக்தி மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் போன்றவற்றுக்கு கூடிய முக்கியத்துவம் வழங்கும் வகையில் உறுப்பு நாடுகளில் நிலையான உட்கட்டமைப்பு கருத்திட்டங்களை செயற்படுத்துவதனை இவ்வங்கி கரிசனை செலுத்தியுள்ளது.

ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் ஸ்தாபக உறுப்பு நாடுகளில் இலங்கை ஒன்று என்ற வகையில் 2017 மற்றும் 2018 களில் இவ்வங்கியினூடாக பல்வேறு கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கு முன்மொழியப்பட்டது. அவ்வாறு முன்மொழியப்பட்ட கருத்திட்டங்களில் வங்கி இரண்டு முன்மொழிவுகளை செயற்படுத்துவதற்கு முன்வந்தது. குறித்த இரண்டு கருத்திட்ட முன்மொழிவுகளும் பின்வருமாறு

1. மண்சரிவு ஆபத்தினை தணிக்கும் நடவடிக்கைகளின் மூலம் குறைத்தல்.
2. கொழும்பு நகர மீள் உருவாக்கல் கருத்திட்டத்திற்கான ஒத்துழைப்பு – கொழும்பு நகர மீள் உருவாக்கல் கருத்திட்டத்தின்கீழ் சேரிப்புறத்தல் வசிப்பவர்களுக்கான குறைந்த வருமான வீடமைப்புத் திட்டங்களை நிர்மாணித்தல்.

2018 இன்போது, தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் நகர அபிவிருத்தி அதிகாரசபை ஆகிய இக்கருத்திட்டத்தின் 2 செயற்படுத்துகை நிறுவனங்கள் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி மற்றும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் என்பவற்றுடன் கலந்துரையாடி இந்த இரண்டு கருத்திட்டங்களினதும் ஆரம்ப பணிகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டுள்ளன. விபரமான கருத்திட்ட ஆவணம், சுற்றாடல் மற்றும் சமூக முகாமைத்துவ வேலைச் சட்டகம், சமூக முகாமைத்துவம் மற்றும் மீள் குடியேற்ற திட்டமிடல் வேலைச்சட்டகம், மீள் குடியேற்ற கொள்கை வேலைச்சட்டகம் மற்றும் பெறுகைத் திட்டம் உள்ளடங்களாக ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக பல்வேறுபட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன. இவ்வாறான முன்னாயத்தச் செயற்பாடுகளை கண்காணித்தல், ஒத்துழைத்தல் மற்றும் மதிப்பீடு செய்யும் வகையில் முதலீட்டு வங்கியானது பல்வேறு கள விஜயங்களை மேற்கொண்டது.

மண்சரிவு பாதிப்பினை தணிக்கும் நடவடிக்கைக் கருத்திட்டத்திற்கான கடன் தொகையானது 80 மில்லியன் ஐ.அ.டொலர்களாகும். இக்கருத்திட்டத்தின் கீழ் தணிக்கப்பட வேண்டியதாக இனங்காணப்பட்ட 147 முன்னுரிமை விடயங்கள் காணப்படுகின்றன. கருத்திட்டச் செயற்படுத்துகையானது இரண்டு கட்டங்களில் முன்னெடுக்கப்படும். கட்டம் 1 – 27 இடங்களில் அவசர நிலைமைகளின் போதான பிரச்சனைகளை எதிர்கொள்ளல். கட்டம் 11 – மீதமான 120 விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தும் அவ்வாறான மண்சரிவு ஆபத்து இடங்கள் நாடு முழுவதிலும் 11 மாவட்டங்களில் காணப்படுகின்றன.

கொழும்பு நகர மீள் உருவாக்கல் கருத்திட்டத்திற்கான ஒத்துழைப்புக் கடன் தொகையானது 200 மில்லியன் ஐ.அ.டொலர்களாகும். கொழும்பு நகர மீள் உருவாக்கல் கருத்திட்டமானது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் கொழும்பு மாவட்டத்திலுள்ள வாழ்க்கைத் தரம் குறைந்த சமூகங்களுக்கான 60,000 வீடமைப்பு அலகுகளை நிர்மாணிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ள கருத்திட்டமொன்றாகும். ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் ஒத்துழைப்பின் கீழ் கொழும்பு நகர மீள் உருவாக்கல் கருத்திட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்கும் வகையில் 5,500 வீடுகள் நிர்மாணிக்கப்படும்.

இந்த இரண்டு கருத்திட்டங்களினதும் ஆரம்ப செயற்பாடுகள் அனைத்தும் நிறைவு செய்யப்பட்டதுடன் 2019 இல் உத்தியோகபூர்வ கடன் பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. பேச்சு வார்த்தைகள் நிறைவடைந்ததுடன் கடன் உடன்படிக்கைகளில் கைச் சாத்திடுவதற்கான பணிப்பாளர் சபை அங்கீகாரத்தினை முதலீட்டு வங்கி பெற்றுக்கொள்ளும்.

இதற்கு மேலதிகமாக, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி நிதியளிப்புக்கான பல்வேறு அதிமுக்கியத்துவம் வாய்ந்த கருத்திட்ட முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன. தற்பொழுது நாடு எதிர்நோக்கியுள்ள அரசிறை நெருக்கடி நிலைமையினைக் கவனத்திற்கொண்டு இலங்கை அரசாங்கத்திற்கு மிகவும் சாதகமான நியதி நிபந்தனைகளுடன் இக்கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கான கலந்துரையாடல்கள் முதலீட்டு வங்கிக்கும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திற்குமிடையில் இடம்பெற்று வருகின்றது.

## செயற்பாட்டிலுள்ள கருத்திட்ட திட்டமிடல்

எக்சிம் வங்கி, சீன அபிவிருத்தி வங்கி மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி என்பவற்றிலிருந்து நிதியளிப்புக்கான திட்டமிடலில் சேர்த்துக் கொள்வதற்கு பின்வரும் கருத்திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன்

### சீன எக்சிம் வங்கி

- மத்திய அதிவேகப்பாதை கருத்திட்டம் – கடவத்தையிலிருந்து மீரிகம வரை பிரிவு - 1
- பொலநறுவை கிழக்கு நகரங்கள் நீர் வழங்கல் கருத்திட்டம்
- விவசாய அடிப்படை கைத்தொழில்கள் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி கருத்திட்டம்
- மாதுறு ஓயா வலதுகரை அபிவிருத்தி வங்கி

### சீன அபிவிருத்தி வங்கி

- பண்டாரவளை, தியத்தலாவ மற்றும் ஹப்புத்தளை நீர் வழங்கல் கருத்திட்டம்
- வாழைச்சேனை நீர் வழங்கல் கருத்திட்டம்

### ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி

- அநுராதபுர கழிவுநீரகற்றல் முறைமை அபிவிருத்திக் கருத்திட்டம் (ஏஎப்டி உடன் கூட்டு நிதியளிப்பு)
- கொழும்பு புற நகர புகையிரதக் கருத்திட்டம் (ஆ.அ வங்கியுடன் இணைந்த நிதியளிப்பு)
- சீத்தாவக்க கங்கை நீர் மின் உற்பத்தி கருத்திட்டம்

## சீன அரசாங்கத்திடமிருந்து மானிய உதவிகள்

இலங்கையில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு சீன மக்கள் குடியரசு அரசாங்கம் மானிய உதவிகளை வழங்கி வருகின்றது. இவ்வாறான மானியங்கள் சுகாதாரத் துறை போன்ற வருமானம் ஈட்டாத சுகாதாரத்துறை போன்ற அரசதுறை சேவைகள் அல்லது பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம், நெழும்பொக்கன தேசிய செயலாற்றுகை கலைகூடம் மற்றும் உயர் நீதிமன்ற கட்டிடத்தொகுதி போன்ற இரண்டு நாடுகளுக்கிடையிலும் நட்புறவைப் பேணுகின்ற மிக முக்கிய கருத்திட்டங்களான ஏனைய கருத்திட்டங்களுக்கும் நிதியளிக்கப்படுகின்றது.

இலங்கையின் வடமத்திய மாகாணத்தில் நீண்டகால சிறுநீரக நோய்க்கெதிரான இலங்கை அரசாங்கத்தின் முன்னுரிமை நடவடிக்கைகளுக்கு சீன அரசாங்கம் பொலநறுவையில் சிறுநீரக நோய்க்கான புதிய ஆய்வுகூடம் மற்றும் வைத்தியசாலை கட்டிடத்தொகுதியினை நிர்மாணிப்பதற்கான மானிய வசதியினை வழங்கியுள்ளதுடன் நீர் தொழில்நுட்பத்திற்கான சீன - இலங்கை இணைந்த ஆராய்ச்சி மற்றும் செய்துகாட்டல் நிலையத்திற்கும் மானியம் வழங்கப்பட்டுள்ளது. இந்த இரண்டு கருத்திட்டங்களும் தற்பொழுது செயற்படுத்தப்படுகின்றன. சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கான சிகிச்சை வசதிகள் ஆரம்பத்தில் வழங்கப்படுவதுடன் பின்னர் சிறுநீரக நோய்க்கான காரணங்களைக் கண்டறிதல் மற்றும் அதற்கான தீர்வுகளை காணுதல் என்பதற்கான ஆராய்ச்சிகள் என்பன முன்னெடுக்கப்படும். இலங்கை தேசிய வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவின் நிர்மாணப்பணியும் சீன மானிய உதவித்திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படுகின்ற மற்றுமொரு பிரதான கருத்திட்டமொன்றாகும்.

# கிழக்காசியப் பிரிவு

வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் கிழக்காசியப் பிரிவானது, அபிவிருத்திக் கருத்திட்டங்களையும் மற்றும் இயலளவு அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்துவதற்கான ஜப்பான், கொரியா, தாய்லாந்து, வியட்நாம், சிங்கப்பூர், மற்றும் மலேசியா ஆகிய நாடுகளிலிருந்தான உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியை ஒருங்கிணைப்பதற்குப் பொறுப்பாக உள்ளது. பல்வேறு துறைகளின் பாரிய அளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கான உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியை வழங்குவதில் ஜப்பானும், கொரியாவும் இலங்கையின் பிரதான பங்கேற்பாளர்களாக விளங்குகின்றன.

ஜப்பானிய உதவியானது, ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் ஊடாக வழங்கப்படுவதோடு, கொரியா அரசாங்கம் அதன் கடன் உதவியை கொரியா ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் (எக்சிம் வங்கியின்) பொருளாதார அபிவிருத்தி ஒருங்கிணைப்பு நிதியின் ஊடாகவும் மற்றும் அதன் நன்கொடை உதவியை கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் ஊடாகவும் வழங்குகின்றது.

ஏனைய நாடுகளிலிருந்து கிடைக்கப் பெறும் உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியானது, அடிப்படையில் அரச துறையின் இயலளவு அபிவிருத்திக்கே வழங்கப்பட்டுள்ளது.

# ஜப்பான்



## ஜப்பானுடனான அபிவிருத்திப் பங்கேற்பு

இலங்கையின் சமூக- பொருளாதார அபிவிருத்தித் தேவைகளுக்கு ஆதரவளிக்கும் நோக்குடன் ஜப்பானிய சர்வதேச ஒத்தழைப்பு நிறுவனத்தின் ஊடாக உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியை வழங்குவதன் மூலம் நாட்டின் உபாய ரீதியான அபிவிருத்தி முயற்சிகளுக்கு ஜப்பான் பங்களிப்புச் செலுத்துகின்றது.

ஜப்பானிய உதவியானது யென் கடன் பொதிகள், நன்கொடை உதவி, அபிவிருத்தி / சாத்திய வள ஆய்வுகள் மற்றும் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற பல்வேறு திட்டங்களின் ஊடாக வழங்கப்படுகின்றது. ஜப்பானிய யென் கடன் பொதிகள் சக்தியும் வலுவும், நீர் வழங்கலும், வடிகாலமைப்பும், துறை முகங்களும், வீதிகளும் பாலங்களும், போக்குவரத்தும், விமானப் போக்குவரத்தும், சுகாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம், அனர்த்த முகாமைத்துவம், தொலைத்தொடர்பு மற்றும் கிராமிய அபிவிருத்தி உள்ளடங்கலாக, பல்வேறு துறைகளை உள்ளடக்கியவாறு வருடாந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றது.

மேலும், தொழில்நுட்ப ஒத்துழைப்பானது உதவியைப் பெற்றுக் கொள்ளும் நாட்டின் சமூக, பொருளாதார தேவைகள் மற்றும் தொழில்நுட்பக் கண்டு பிடிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச கூட்டு ஆராய்ச்சி நிகழ்ச்சித் திட்டங்களை ஊக்குவிக்கும் நிலைபேறான அபிவிருத்திக்கான விஞ்ஞானம் தொழில்நுட்ப ஆராய்ச்சி பங்கேற்பினை உள்ளடக்குகின்றது.

மேலும், கொடைபெறும் நாடுகளின் சமூக பொருளாதார தேவைகள் மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் சர்வதேச இணைந்த ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஊக்குவிக்கும் நிலையான அபிவிருத்திக்கான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிகழ்ச்சித்திட்டங்களை தொழில்நுட்ப ஒத்துழைப்பு உள்ளடக்கியுள்ளது.

1965 இலிருந்து, ஐ.அ. டொலர் 1,392 மில்லியன் மானிய உதவியுடன் 120 அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் மிகவும் சலுகை விகிதத்தில் 15 நுகர்வுப் பொருட்களுக்கான கடனுக்காக ஐ.அ.டொ. 8,829 மில்லியன் தொகையான யப்பானிய உதவியினை அரசாங்கம் பெற்றுக் கொண்டது.

## 2018 இல் மொத்த அர்ப்பணிப்பு

ஜப்பானிய நிதி உதவியின் தற்போதைய கடன் தொகுதியானது சுகாதார மற்றும் மருத்துவ விருத்திக் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக 100 ஐ.அ.டொ மில்லியன் பெறுமதியான சலுகை அடிப்படையிலான கடன் ஒன்றைப் பெறுவதன் மூலம் 2018 ஆம் ஆண்டில் விருத்தி செய்யப்பட்டது. கொழும்பில் மென் ரயில் இட மாற்ற முறைமைக் கருத்திட்டத்தினை (ஐ) இனை நடைமுறைப்படுத்துவதற்கான முதலாவது கட்டமாக 2019 ஆம் ஆண்டில் ஜப்பானிய அரசாங்கத்திடமிருந்து 300 ஐ.அ.டொ மில்லியனைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் உத்தேசித்துள்ளது.


### சுகாதார மற்றும் மருத்துவ சேவை விருத்திக் கருத்திட்டம் - 100.25 ஐ.அ.டொ மில்லியன்

நாட்டில் வெளிப்படையான நோயியல், சமூக – பொருளாதார மாற்றங்கள் காரணமாக இலங்கையில் சமீப காலமாக இருதய நோய்கள் மற்றும் பெரு மூளை இரத்தக் குழாய் கோளாறுகள் போன்ற தொற்றாத நோய்கள் அதிகரித்துள்ளன.

இப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஜப்பானிய அரசங்கம் சகல இலங்கை பிரஜைகளுக்கும் பொருத்தமானதும், அணுகக் கூடியதுமான உயர் தரத்திலான நோயைக் குணப்படுத்தக் கூடிய பராமரிப்புகளை விநியோகிப்பதற்கு விஷேடமாக இருதய நோய் போன்ற தொற்றாத நோய்களுக்கான நோயைக் கண்டறிவதற்கான மருத்துவ சேவைகளையும் சிகிச்சைகளையும் விருத்தி செய்வதற்கு 10,639 ஜப்பானிய யென் மில்லியன்களை ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் ஊடாக தனது ஆதரவை வழங்கியுள்ளது.

இக்கருத்திட்டமானது அனுராதபுரம், கண்டி, குருநாகலை, பதுளை மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் 5 மூன்றாந்தர பராமரிப்பு மருத்துவ மனைகள் மற்றும் மருத்துவ ஊழியர்களுக்கான பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றில் மருத்துவ வசதிகளையும் மற்றும் உபகரணங்களையும் விருத்தி செய்வதன் மூலம் பிரதானமாக இருதய நோய்களை மையமாகக் கொள்ளும். இக்கருத்திட்டம் வினைத்திறனான பயன்பாட்டினை அதிகரிப்பதற்கும் மற்றும் நிலைபேறான தன்மையை உறுதிப்படுத்துவதற்கும் மருத்துவ உபகரணங்களை பராமரிப்பதனை பலப்படுத்துவதற்கான ஒத்துழைப்பையும் வழங்கும்.


### ஜப்பானிய கடன் உதவியின் துறைவாரியான விநியோகம் - 2013 – 2018




**துறைவாரியான கடன் அர்ப்பணிப்புக்கள் 2013-2018 (ஐ.அ.டொ மில்லியன்)**


2013 – 2018 காலப்பகுதியில் ஜப்பானிய அரசாங்கத்தினால் அர்ப்பணிக்கப்பட்ட மொத்த தொகை 1,896 ஐஅடொ மில்., கடன் நிதி மற்றும் 159 ஐஅடொ நன்கொடைகள் உள்ளடங்கலாக மொத்தத் தொகை 2,055 ஐஅடொ மில். கூடுதலான வருடாந்த அர்ப்பணிப்பான 569 ஐஅடொ மில். 2015 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்ததோடு, அது விமானப் போக்குவரத்துடனும், மற்றும் சக்தியும் வலுவும் துறைகளுடன் தொடர்புபட்டதாக இருந்தது.

## ஜப்பானிய நன்கொடை உதவியின் துறைவாரியான விநியோகம் 2013 – 2018




## 2018 இல் மொத்த அர்ப்பணிப்புகள்

2018 ஆம் ஆண்டிற்கான யப்பானிய உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவிக்கான மொத்த செலவிடல் ஐ.அ.டொ. 171.23 மில்லியனாகும்.




மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொத்தப் பகிர்வு வீதிகளும் மற்றும் பாலங்களுக்குமான 78.20 ஐஅடொ மில்லியனையும், சக்தியும் வலுவுக்குமான 47.53 ஐஅடொ மில்லியனையும், நீர் வழங்கல் மற்றும் துப்புரவாக்கலுக்கான 25.38 ஐஅடொ மில்லியனையும், கடலோரப் பாதுகாப்புக்கான 8.39 ஐஅடொ மில்லியனையும், கல்வியும் பயிற்சிக்குமான 6 ஐஅடொ மில்லியனையும், சுகாதாரமும், சமூக நலனுக்குமான 5.7 ஐஅடொ மில்லியனையும் உள்ளடக்கியுள்ளது.

## 2018 இல் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

| கருத்திட்டங்கள் | கடன் தொகை (ஐஅடொ மில்லியன்) |
|---|---|
| ளுடு ° – 101:<br>பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம் கட்டம் 2 | 390.97 |
| ளுடு ° – 105:<br>எழுச்சி பெற்று வரும் பிராந்தியங்களை இலக்காகக் கொண்ட அடிப்படை சமூக சேவைகளின் விருத்தி | 47.40 |

## பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம்

ஜப்பானிய அரசாங்கம் பாரிய தேசிய வீதிகளுக்கும், மற்றும் அதி வேகப்பாதைகளுக்கும் நிதி வழங்குவதன் மூலம் இலங்கையின் வீதி வலையமைப்பு அபிவிருத்திக்கான அர்ப்பணிப்பினை மேற்கொண்டுள்ளது. வெளிவட்ட சுற்றுவட்ட நெடுஞ்சாலையானது 29.1 கி.மீ நீளமானதாக உள்ளதோடு, சகல அதி வேகப்பாதைகளையும் இணைப்பதோடு, 'எ' வகுப்பு நெடுஞ்சாலைகள் கொழும்பு நகரத்திலிருந்து ஊடுருவிச் செல்கின்றன.

கொட்டாவையிலிருந்து கடுவலை வரையிலான 12 கி.மீ பிரிவின் நிர்மாணம் 186 ஜஅடா மில்லியன் ஜப்பானிய உதவியைத் திரட்டுவதன் மூலம் 2014 இல் பூர்த்தி செய்யப்பட்டது. கடுவலையிலிருந்து கடவத்தை வரையிலான 8.9 கி.மீ வீதிப் பிரிவின் நிர்மாணம் ஜப்பானிய உதவியுடன் பூர்த்தி செய்யப்பட்டது. கடுவலையிலிருந்து கடவத்தை வரையிலான வெளிவட்ட சுற்று வட்டப் பாதையிலிருந்தான வீதிப் பிரிவானது, கொழும்பு பெரு நகரப் பிரதேசத்தின் ோக்குவரத்து நெருக்கடியை இலகு படுத்துவதற்கும் மற்றும் அதிவேகப்பாதை வலையமைப்புடனான தொடர்பிற்கும் பங்களிப்புச் செலுத்தும்.



**வெளிவட்ட சுற்று வட்டப் பாதையின் அதிவேகப்பாதை**

மேலும், மாக்கும்புறை (கொட்டாவை,) கடுவலை, மற்றும் கடவத்தை பிரதேசங்களில் உள்ள மூன்று பிரதான நகரமயமாக்கங்கள் அதிக பட்ச உட்கட்டமைப்புகளுடன் அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன.

## எழுச்சி பெற்று வரும் பிரதேசங்களை இலக்காகக் கொண்ட அடிப்படை சமூக சேவைகளின் விருத்திக்கான கருத்திட்டம்

நாட்டின் வருடாந்த மருந்துப் பொருட்களின் தேவைப்பாட்டினைப் பூர்த்தி செய்வதற்கும் மற்றும் இரண்டாந்தர மருத்துவ மனைகளில் தற்போது உள்ள வசதிகளை விருத்தி செய்வதற்கும் அரச மருந்துப் பொருட் தயாரிப்புக் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தி இயலளவை விரிவாக்குவதற்காக அரசாங்கம் ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தினால் வழங்கப்பட்ட சுமார் 47.4 ஐ.அ.டொ மில்லியனை முதலீடு செய்துள்ளது.

*அத்துடன் கிராமியப் பிரதேசங்களிலுள்ள சமூகங்களின் சுகாதார நிலைமைகளை விருத்தி செய்யும் நோக்குடன் இப்பிரதேசங்களிலுள்ள துணை மருத்துவமனைகளாக தொழிற்படுவதற்காக தெல்தெனிய, வறக்காப்பொல, கல்கமுவை, மற்றும் களுவாஞ்சிக்குடி ஆகிய பிரதேசங்களிலுள்ள தெரிவு செய்யப்பட்ட இரண்டாந்தர மருத்துவமனைகள் தேவையான மட்டத்துக்கு தரமுயர்த்தப்பட்டன.*

*புற, மத்திய மற்றும் மாவட்ட மருத்துவமனைகளிலுள்ள இக்கட்டான நிலைமையிலுள்ள நோயாளிகளை அடிப்படை மற்றும் போதனா மருத்துவமனைகளுக்கு உடனடியாகக் குணப்படுத்தக் கூடிய சிகிச்சையை மேற்கொள்வதற்காக விரைவாக மாற்றல் செய்வதனை உறுதிப்படுத்துவதற்காக மத்திய, சப்ரகமுவா, வட மேல், வட மத்திய, ஊவா, கிழக்கு, மற்றும் வட மாகாணங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கு 124 நோயாளர் ஊர்திகள் (அம்பியுலன்ஸ்) வழங்கப்பட்டுள்ளன*



**மருந்துப் பொருட்களின் தயாரிப்பு**

## 2019 இல் பூர்த்தி செய்யப்படவுள்ள அபிவிருத்திக் கருத்திட்டங்கள்

### கொழும்பில் மென் ரயில் இடமாற்றத் திட்டத்தை ஸ்தாபிப்பதற்கான கருத்திட்டம் (ஐ) (கொழும்புக் கோட்டை - மாலபை) – 300 ஐஅடொ மில்லியன் முதலாவது கட்டம் (ஐஅடொ 1,800 மில்லியன் மொத்தச் செலவில்)

“தொலைநோக்கு 2025: விருத்தியுற்ற ஒரு நாடு” இன் மூலம் முன் மொழியப்பட்டது போலவும், அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கையிலும், மற்றும் 2030 மேற்பிராந்திய பெரு நகர் பிரதான திட்டத்திலும் முன் மொழியப்பட்டது போலவும், கொழும்பு நகரத்திலும் மற்றும் புற நகரங்களிலும் உள்ள பலத்த போக்குவரத்து நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்காக வினைத் திறனானதும் வசதிகள் வாய்ந்த பயணிகள் போக்குவரத்து முறைமை ஒன்றை உருவாக்குவதற்குத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

*புகையிரத வீதிக்கான சாத்திய வள ஆய்வானது ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தினால் நன்கொடை அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது. இக்கருத்திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்கான ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்திடமிருந்தான உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி கடன் நிதியளிப்பினைப் பெற்றுக் கொள்வதற்கு அவசியமான செயன்முறைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முன்மொழியப்பட்டுள்ள மென் ரயில் போக்குவரத்து முறைமையானது, மாலபையிலிருந்து கொழும்புக் கோட்டை வரையிலான முக்கியமான மற்றும் பிரதான ஊடறுப்புகளை உள்ளடக்கக் கூடிய வகையில் 16 நிலையங்களை உள்ளடக்கியவாறு 17 கி.மீ நீளமான உயர்த்தப்பட்ட ரயில் பாதைகளை நிர்மாணிப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.*



**மென் ரயில் முறைமைக்கான எண்ணக்கரு**

இக்கருத்திட்டம் 2026 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்படவுள்ளதோடு, பல நிர்வாகக் கட்டடத் தொகுதிகள், வர்த்தக மையங்கள், நகரத்தின் சனத்தொகை நெருக்கடியுள்ள வதிவிடப் பிரதேசங்களுக்கிடையிலான இணைப்புக்களும் ஸ்தாபிக்கப்படவுள்ளன.

முன்மொழியப்பட்டுள்ள மென் ரயில் திட்டத்தின் கீழ், 25 ரயில்கள் சேவைக்காக விடுவிக்கப்பட்டுள்ளதோடு, ஒவ்வொரு அலகும் 800 பயணிகளுக்கு இடமளிக்கக் கூடிய வகையில் நான்கு குளிரூட்டப்பட்ட பயணிகளுக்கான தனிப்பிரிவுகளை உள்ளடக்கியிருக்கும்.

### ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டையில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையமொன்றை நிர்மாணித்தல்

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை மற்றும் நுவரெலியா ஆகிய பிரதேசங்களில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையமொன்றை ஸ்தாபிப்பதற்கான இரண்டு சாத்திய வள ஆய்வுகள் உள்ளடங்கலாக இலங்கையின் கழிவு நீர்த்துறைக்கான பிரதான திட்டத்தின் தயாரிப்பு ஜப்பானிய நன்கொடை உதவியின் கீழ் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

ஜப்பானிய அரசாங்கத்தின் முன்மொழியப்பட்ட இக்கடன் உதவியின் கீழ் ராஜகிரிய, நுகேகொடை, தெல்கந்தை, தியவன்னா மற்றும் மாதிவளைப் பிரதேசங்களில் உள்ளடக்கப்படும் 07 பிரதான இறைக்கும் நிலையங்கள் உள்ளடங்கலாக ஏனைய 50 குழாய்களுடன் கொஸ்வத்தை சந்தியிலிருந்து கலபலுவாவை நெடுகிலும் அமைந்துள்ள ஹீனடிக்கும்புரயில் பிரதான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் ஸ்தாபிக்கப்படும்.

## பொதுஹறரயிலிருந்து கலகெதர வரையிலான மத்திய அதிவேகப்பாதையின் மூன்றாம் பிரிவின் நிர்மாணம்

பொதுஹறரயிலிருந்து கலகெதர வரையிலான மத்திய அதிவேகப்பாதையின் மூன்றாம் பிரிவானது பொல்கஹவலை மற்றும் ரம்புக்கனை ஆகிய இரண்டு பரிமாற்றல்களுடன் 32.5 கி.மீ. இற்குச் சமனான மொத்த நீளத்தில் நிர்மாணிக்கப்படும்.

இது தொடர்பான சாத்திய வள ஆய்வும், ஆரம்ப வடிவமைப்புக்களும் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதோடு, காணிக் கொள்வனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடன் தொகையானது 100 பில்லியன் ஜப்பானிய யென்னாக உள்ளதோடு, இவ்வசதியளிப்பின் நியதிகளும் நிபந்தனைகளும் தொடர்பாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், ஜப்பானிய டோக்கியோ மிட்சுபிசி வங்கியுடன் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றது.

## 2018 இல் செயற்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்

| கருத்திட்டம் | தொகை (ஐஅடொ மில்லியன்) |
|---|---|
| **கடன்கள்** | |
| கண்டி நகர் கழிவு நீர் முகாமைத்துவ கருத்திட்டம் | 152.38 |
| பாரிய கொழும்பு நகரப் போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் ஐஐ | 390.97 |
| களு கங்கை அபிவிருத்தி விரிவாக்கக் கருத்திட்டம் ஐ | 114.30 |
| எழுச்சி பெற்று வரும் பிராந்தியங்களில் கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் | 114.30 |
| ஹபரணை – வேயங்கொடை பரிமாற்ற விரிசைக் கருத்திட்டம் | 115.33 |
| பாரிய கொழும்பு பரிமாற்ற மற்றும் விநியோக இழப்புக் கருத்திட்டம் - கட்டம் ஐஐ | 166.38 |
| தேசிய வீதி வலையமைப்பில் பிரதான பாலங்களை நிர்மாணிப்பதற்கான கருத்திட்டம் | 129.23 |
| தேசிய வீதி வலையமைப்பில் நிலச்சரிவு அனர்த்த பாதுகாப்புக் கருத்திட்டம் | 79.52 |
| அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் ஐ | 53.92 |
| அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் ஐஐ | 212.16 |
| பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைய அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் ஐஐ நிலை ஐ | 272.89 |
| பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைய அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் ஐஐ நிலை ஐஐ | 427.94 |
| களனி ஆற்றின் மீதான புதிய பாலத்தின் நிர்மாணக் கருத்திட்டம் | 342.85 |
| புவிக்குரிய தொலைக்காட்சி ஒளிபரப்பினை டிஜிடல்மயமாக்கும் கருத்திட்டம் | 132.10 |
| தேசிய பரிமாற்றமும் மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தியும் வினைத் திறன் விருத்திக் கருத்திட்டம் | 200.07 |
| எழுச்சி பெற்று வரும் பிராந்தியங்களை இலக்காகக் கொண்ட அடிப்படை சமூக சேவைகளின் விருத்தி | 47.40 |
| சுகாதார மற்றும் மருத்துவ சேவைகள் விருத்திக் கருத்திட்டம் | 100.25 |
| **நன்கொடைகள்** | |
| யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக் கட்டடத் தொகுதி | 15.70 |
| இலங்கை கடலோரக் காவற்படைக்கான கடலோரப் பாதுகாப்பு இயலளவு விருத்திக்கான கருத்திட்டம் | 17.05 |
| திருகோணமலைத் துறைமுகத்துக்கு வழிகாட்டல் உதவிகளுக்கான கருத்திட்டமல்லாத நன்கொடை உதவிகள் | 9.42 |
| டாப்ளர் காலநிலை டேடார் வலையமைப்பை ஸ்தாபிப்பதற்கான கருத்திட்டம் | 23.58 |

# கொரிய குடியரசு

## கொரியக் குடியரசுடனான அபிவிருத்திக் கூட்டுறவு

கொரியக் குடியரசானது இலங்கைக்கு சலுகை மற்றும் மானியக் கடன்களை வழங்கல், தொழில்நுட்ப உதவிகள், அறிவுப் பகிர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் (முழெடயனபந ளுாயசபைெ ீசழபசயஅஅந) கலாச்சார பரிமாற்றத் திட்டங்கள், நிபுணத்துவ ஒத்துழைப்புச் சேவைகள் மற்றும் தொண்டர்கள் பரிமாற்ற திட்டங்கள் போன்ற பல்வேறுபட்ட அபிவிருத்தி உதவித் திட்டங்களை வழங்கி, இலங்கையின் முன்னணி இரு தரப்பு அபிவிருத்தி பங்காளியாக மாறியுள்ளது. மேலும் அரச பணி அதிகாரிகளின் கல்வி மற்றும் தொழில்சார் திறன்களை அதிகரிப்பதற்காக வருடந்தோறும் அதிக எண்ணிக்கையிலான கல்வி மற்றும் பயிற்சி வாய்ப்புகளையும் கொரிய குடியரசு வழங்கிவருகிறது.

## பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம்

கொரியாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியின் (கொரிய எக்ஸிம் வங்கி) பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தினூடாக கொரிய அரசாங்கம் இலங்கைக்கு சலுகைக் கடன்களை வழங்கிவருகிறது. அரசாங்கத்தின் அபிவிருத்தி முன்னுரிமைகளுடன் இணைந்த வகையில், இரு நாடுகளுக்குமிடையிலான நாட்டு கூட்டுறவு மூலோபாயத் திட்டத்தின் கீழ் நிதியளிப்புச் செய்வதற்காக போக்குவரத்து, நீர் முகாமை, துப்பரவாக்கல், கல்வி, போன்ற துறைகளை முன்னணித் துறைகள் என அடையாளங்கண்டுள்ளது.

| இலங்கைக்கான பொ.அ.ஒ.நி கடன்களின் தற்போதைய நியதிகள், நிபந்தனைகள் | | | |
|---|---|---|---|
| **நியதிகள், நிபந்தனைகள்** | **சாதாரண நிபந்தனைகள்** | **கொரியாவின் மதியுரை பெறப்படுகின்றது** | **கொம்பகட் கடன்[1]** |
| வட்டிவிகிதம் | 0.20மு | 0.15மு | 0மு |
| மீள்கொடுப்பனவு | 30 வருடங்கள் | 40 வருடங்கள் | 30 வருடங்கள் |
| சலுகைக் காலம் | 10 வருடங்கள் | | |
| கடன் பெறுமதி | மொத்த கருத்திட்டச் செலவினத்தின் 100 சதவீதம் வரையில் | | |
| நாணயம் | கொரிய வோன் | | |
| சாத்தியப்பாட்டு ஆய்வு | சாத்தியமான கருத்திட்டங்களுக்காக சலுகை அடிப்படையிலான ஒத்துழைப்பு | | நியமப் படிவம் |

## அறிவு பகிர்வு நிகழ்ச்சித் திட்டங்கள்


கடந்த தசாப்தங்களுக்கு மேலாக கொரியாவினால் திரட்டப்பட்ட அபிவிருத்தி தொடர்பிலான அறிவு மற்றும் அனுபவங்களை பங்குதார நாடுகளுடன் பகிர்ந்து கொள்வதற்காக கொரியாவின் நிதி மற்றும் மூலோபாய அமைச்சினால் வழங்கப்படுகின்ற விசேட தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித் திட்டமாக அறிவு பகிர்வு நிகழ்ச்சித் திட்டம் காணப்படுகிறது.

2018 ஆம் ஆண்டில் தென் கொரியாவின் சியோல் நகரில் மேம்பட்ட வரித் தகவல் முறைமையினைத் தாபிப்பதற்கான அனுபவப் பகிர்வினை வழங்குவதன் மூலம் எதிர்காலத்தில் கொழும்பு மாநகர சபை வரி நிருவாக முறைமை அபிவிருத்திசெய்வதனை ஊக்குவிப்பதற்கும் கொள்கை விதப்புரைகளை வழங்குவதற்கும் அறிவுப் பறிமாறல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் மதியுரை நிகழ்ச்சித் திட்டமொன்றினை வெற்றிகரமாக நடாத்தப்பட்டது.

---

*[1]கொம்பக்ட் கடன் திட்டமானது கொரியாவின் சிறிய, நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளிலிருந்தான பெறுகை முறைமை ஊடாக செயற்படுத்தப்பட்ட இயந்திர சாதனம் மற்றும் உபகரணம் என்பனவற்றின் வழங்கலினை உள்ளடக்குகிறது.*

## கொரியாவின் கடனுதவிப் பகிர்வு பற்றிய விபரம் 2014-2018 (ஐ.அ.டொ மில்லியன்)




## இலங்கையில் திண்மக் கழிவு முகாமைக்கான கொரிய அரசாங்கத்தின் உதவி

வளர்ந்துவரும் திண்மக் கழிவுப் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வொன்றினை சிறந்த நடைமுறைகளுடன் அறிமுகப்படுத்துவதனையும் புதிய தொழில்நுட்பத்துடன் திண்மக் கழிவு முகாமைத்துறையில் தலையிடுவதன் அவசியத்தினையும் இலங்கை அரசாங்கம் உணர்ந்துள்ளது. நகர்ப்புறப் பகுதிகளில் திண்மக் கழிவுகளை திறந்த வெளியில் கொட்டும் உள்ளூராட்சி மன்றங்களின் தற்போதைய செயற்பாடானது பல்வேறுபட்ட சுற்றாடல் மற்றும் சுகாதாரம் சார் அச்சுறுத்தல்களையும் தோற்றுவித்துள்ளன.

இலங்கையில் திண்மக் கழிவு முகாமைத்துறைக்காக கொரிய அரசாங்கம் குறிப்பிடத்தக்க பங்களிப்பினைச் செய்துள்ளது கொரிய சர்வதேச ஒத்துழைப்பு முகவர் நிறுவனத்தின் நிதி மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புத் திட்டத்தின் கீழ் இலங்கையின் மேல் மாகாணத்தில் தொம்பே பிதேசத்தில் முன்னோடி சுகாதார ரீதியான நிலம் நிரப்பும் தளமொன்று தாபிக்கபபட்டு செயற்படுத்தப்படுகிறது. மேலும், பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் நிதியுதவித் திட்டத்தின் கீழ் அநுராதபுரம், காலி, யாழ்பாணம் மற்றும் பொலன்நறுவைப் மாவட்டங்களிலும் திண்மக் கழிவு நிலம் நிரப்பும் நான்கு நிலம் நிரப்பும் தளங்கள் மேலதிகமாக தாபிக்கப்பட்டு செயற்படுத்தப்படுகிறது.

## இலங்கை உள்ளூராட்சி சபைகளுக்கு 190 குப்பை வண்டில்கள்

நாட்டின் திண்மக் கழிவு முகாமையினை மேலும் பலப்படுத்தும் வகையில் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் பூச்சி வட்டி காம்பெகட் கடன் திட்டத்தின் கீழ் இலங்கை அரசாங்கத்திற்கு 190 குப்பை வண்டில்களை வழங்குவதற்கு பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம் உடன்பட்டுள்ளது. உள்ளூராட்சி சபைககளின் திண்மக் கழிவுகளைத் திரட்டுவதற்கும் அவற்றினை இடப் பெயர்ப்பதற்குமாக இலங்கை அரசாங்கம் மேற்குறித்த 190 குப்பை வண்டில்களையும் 9 மாகாணங்களிலுள்ள உள்ளூராட்சி சபைகளுக்கு பகிர்ந்தளிக்கவுள்ளது.



## பொ.அ.ஒ.நி ஆல் நிதியளிக்கப்பட்டு தற்போது இடம்பெறுகின்ற கருத்திட்டங்கள்

| துறை | கருத்திட்டம் | அங்கீகரிக்கப்பட்ட திகதி | பெறுமதி (ஐ.அ.டொ.மில்லியன்) |
|---|---|---|---|
| சுற்றாடல் | திணமக் கழிவகற்றல் வசதிக் கருத்திட்டத்தினை நிர்மாணித்தல் | 2010 | 33.54 |
| கல்வி | கொழும்பு மத்திய தெரிற்பயிற்சி நிலையத்தினைத் தாபித்தல் மற்றும் கம்பஹா தொழில்நுட்பக் கல்லூரியினை தரமுயர்த்தல் | 2011 | 26.05 |
| நீர் வழங்கல் | தெதுறு ஓயா நீர் வழங்கல் கருத்திட்டம் | 2013 | 58.16 |
| நீர் வழங்கல் | ருவண்வெல்ல நீர் வழங்கல் கருத்திட்டம் | 2014 | 20.53 |
| சுற்றாடல் | திண்மக் கழிவுகளை திரட்டும் கொம் பெக்டர்களை தென் மாகாண சபைக்கு வழங்கல் | 2017 | 7.00 |
| சுற்றாடல் | திண்மக் கழிவுகளை திரட்டும் கொம்பெக்டர்களை வட மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கு வழங்கல் | 2017 | 7.00 |
| | | மொத்தம் | 152.28 |

### கொரிய மானிய உதவித் திட்டம்

மானிய உதவிக் கருத்திட்டங்களுக்கு நிதியளிப்புச் செய்வதற்காகவும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள், அரச பணி உத்தியோகத்தர்களுக்காக கொள்திறன் அபிவிருத்தி பயிற்சித் திட்டங்கள் என்பனவற்றினை நடாத்துவதற்கும் மற்றும் தொழில் வல்லுநர்கள் மற்றும் வேர்ட் பிரண்ட்ஸ் கொரியா தன்னார்வளர்களை அழைத்து வருதல் என்பனவற்றினை நடாத்துவதற்காகவும் கொரியா சர்வதேச ஒத்துழைப்பு முகவர் அமைப்பினூடாக கொரிய அரசாங்கத்தின் மானிய உதவிகள் இலங்கைக்கு பிரதானமாக விரிவுபடுத்தப்படுகின்றன.

### கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளை அபிவிருத்திசெய்தல்

கிளிநொச்சி மாவட்டத்தில் கல்விச் சூழல் மேம்பாட்டிற்கான அதன் முயற்சியின் மற்றுமொரு கட்டமாக கிளிநொச்சியிலுள்ள பாடசாலைகளைப் புதுப்பிப்பதற்காக கொரிய சர்வதேச கூட்டு முகவர் அமைப்பானது ஐ.அ.டொ.7.5 மில்லியன் பெறுமதியான உதவுதொகையொன்றினை வழங்குகிறது. கருத்திட்டத்திற்காக இரண்டு நாடுகளிகளுக்கிடையிலான உடன்படிக்கையானது 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாத்தில் கைச்சாத்திடப்பட்டது.

குறித்த கருத்திட்டம் மாவட்டத்தின் கல்வித் திறனினை மேம்படுத்துவதில் கவனஞ்செலுத்துவதோடு மாத்திரமன்றி உட்கட்டமைப்பு அபிவிருத்தி, ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் மற்றும் சமூக விழிப்புணர்வுச் செயற்பாடுகள் என்பன போன்ற பிரிவுகளை உள்ளடக்கி பல்துறைச் செயற்பாடாக அமையப்பெறும் என்பதோடு மாத்தரமல்லாது கருத்திட்டத்தின் குறிக்கோளானது உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு அப்பால் பிள்ளைகளின் கல்வி நடவக்கைகளில் பெற்றோரின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படும் என்பதனை உறுதிப்படுத்துகிறது என்பதோடல்லாது இக்கருத்திட்டம் தொடர்பில் பெற்றோருக்கும் விழிப்புணர்வொன்றினையும் வழங்குகிறது.

## தற்போது இடம்பெறுகின்ற கருத்திட்யங்கள்

| பங்குதாரர்.'.நிறுவனம் | கருத்திட்டப் பெயர், காலம் மற்றும் செலவு |
|---|---|
| கல்வி அமைச்சு | • தேசிய கல்விக் கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பவியல் துறைக்கான ஆசிரியர் பயிற்றுவிப்பு முறைமையினைத் தாபித்தல். (2015-2022 ∴ ஐ.அ.டொ.13 மில்.)<br>• கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல்(2018-2022∴ ஐ.அ.டொ. 7.5 மில்) |
| சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு | • மாத்தறை மாவட்டத்தல் மகப்பேற்று மற்றும் சிசு நலன்பேணல் அலகினை வலுவூட்டல் கருத்திட்டம் (2016-2020 ∴ ஐ.அ.டொ.8.5 மில்) |
| திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சு | • இலங்கையின் சமுத்திரப் பல்கலைக்கழகத்திற்காக முதன்மைத் திட்டம் மற்றும் கொள்திறன் அபிவிருத்தித் திட்டம் என்பனவற்றைத் தாபித்தல் (2017-2021∴2.5 மில்) |


# உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியப் பிரிவு

உலக வங்கியானது நிலையான தீர்வுகளினூடாக உலகளாவிய ரீதியில் வறுமைக்கெதிராக போராடும் நோக்கத்துடன் உலகம் முழுவதிலுமுள்ள அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு நிதி மற்றும் தொழில்நுட்ப உதவியினை வழங்குகின்ற மிக முக்கிய சர்வதேச நிதி நிறுவனமொன்றாகும். உலக வங்கிக் குழுவானது ஐந்து நிறுவனங்களை உள்ளடக்கியுள்ளது. சர்வதேச அபிவிருத்தி அமைப்பு, மீள் கட்டமைப்பு மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி, சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனம், பல்தரப்பு முதலீட்டு உத்தரவாத முகவராண்மை மற்றும் முதலீட்டுப் பிணக்கு தீர்வுகளுக்கான சர்வதேச நிலையம் என்பன அவையாகும்.

2018 இன் இறுதியில் உலக வங்கி நிதி உதவியின் கீழ் ஐ.அ.டொ 1,957.6 மில்லியன் பெறுமதியான கடன் பல்வேறு முதலீட்டுத் துறைகளுக்கு விரிவாக்கும் வகையில் வழங்கப்பட்டது. வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் உலக வங்கிப் பிரிவானது உலக வங்கிக் குழுவிலிருந்து நிதி மற்றும் தொழில்நுட்ப உதவி தொடர்பான ஒருங்கிணைப்பினை முன்னெடுக்கின்றது.

## உலக வங்கிக் கடன் / மானியம் - 2018

| நிகழ்ச்சித்திட்டம்.்.கருத்திட்டம் | தொகை (ஐ.அ.டொ. மில்லியன்) |
|---|---|
| திறன் அபிவிருத்திக் கருத்திட்டம் | 101.5 |
| உபாய நகரங்கள் அபிவிருத்தி கருத்திட்டம் | 147.0 |
| காலநிலை தாக்க மேம்பாட்டுக் கருத்திட்டம் | 110.0 |
| காலநிலை தாக்க மேம்பாட்டுக் கருத்திட்டம் - மேலதிக நிதியளிப்பு | 42.0 |
| கல்வி மையத்தின் அடிப்படையாக பாடசாலை கல்வியினை மாற்றுதல் கருத்திட்டம் | 100.0 |
| மெற்றோ கொழும்பு நகர அபிவிருத்திக் கருத்திட்டம் | 213.0 |
| இளம் சிறுபராய அபிவிருத்திக் கருத்திட்டம் | 50.0 |
| நீர் வழங்கல் மற்றும் துப்பரவேற்பாட்டு மேம்பாட்டுக் கருத்திட்டம் | 165.0 |
| உபாய நகரங்கள் அபிவிருத்தி கருத்திட்டம் - மேலதிக நிதியளிப்பு | 55.0 |
| சூழலியல் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ கருத்திட்டம் | 45.0 |
| விவசாயத்துறை நவீனமயப்படுத்தல் கருத்திட்டம் | 125.0 |
| உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி கருத்திட்டத்தினை துரிதப்படுத்தல் | 100.0 |
| போக்குவரத்து இணைப்பு மற்றும் ஆதன முகாமைத்துவ கருத்திட்டம் | 125.0 |
| நிதித்துறை நவீனமயப்படுத்தல் கருத்திட்டம் | 75.0 |
| சமூக பாதுகாப்பு வலையமைப்பு கருத்திட்டம் | 75.0 |
| ஜி.பி.ஓ.பி.ஏ – துப்பரவேற்பாட்டுக்கான இலங்கை அடைவ கருத்திட்டம் | 5.1 |
| பொதுக்கல்வி நவீன மயப்படுத்தல் கருத்திட்டம் | 100.0 |
| நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு முன்னேற்பாடு | 4.0 |
| இரண்டாவது சுகாதாரத்துறை அபிவிருத்திக் கருத்திட்டம் | 200.0 |
| கல்வி மையத்தின் அடிப்படையாக பாடசாலை கல்வியினை மாற்றுதல் கருத்திட்டம் | 37.0 |
| அணைக்கட்டுப் பாதுகாப்பு மற்றும் நீர்வளங்கள் திட்டமிடல் கருத்திட்டம் - மேலதிக நிதியளிப்பு | 83.0 |
| **மொத்தம்** | **1,957.6** |





| துறைகள் | தொகை (ஐ.அ.டொ.மில்.) |
|---|---|
| நகர அபிவிருத்தி | 313.0 |
| அனர்த்த முகாமைத்துவம் | 254.0 |
| கல்வி, திறன் அபிவிருத்தி | 438.5 |
| நீர்ப்பாசனம், விவசாயம் | 291.0 |
| நீர் மற்றும் துப்பரவேற்பாடு | 87.1 |
| போக்குவரத்து, நெடுஞ்சாலை | 125.0 |
| நிதி | 75.0 |
| சமூக நலன்புரி | 125.0 |
| சுற்றாடல் | 45.0 |
| சுகாதாரம் | 200.0 |
| ஏனைய | 4.0 |

## உலக வங்கி நாட்டுப் பங்களிப்பு வேலைச்சட்டகம் 2018–2020

நிலைபேறான திட்டத்தின் அடிப்படையில் அதிகளவு வறுமையினை முடிவுறுத்தல் மற்றும் சுபீட்சத்தினை அதிகரித்தலென்ற இரண்டு இலக்குகளை உலக வங்கி மையமாகக் கொண்டுள்ளதுடன், உலக வங்கிக் குழுவின் நாட்டுப் பங்களிப்பு வேலைச் சட்டகமானது மிகவும் சிறந்த முறைமை, சான்று அடிப்படை, தெரிவு வழிமுறை என்பவற்றின் மூலம் அபிவிருத்தி செய்வதனை இலக்காகக் கொண்டுள்ளது. பேரண்ட நிதி நிலைத்தன்மை, போட்டித்தன்மையை மேம்படுத்துதல், அனைவருக்கும் சேர்த்துக்கொள்வது மற்றும் வாய்ப்புகள் ஆகியவற்றை மேம்படுத்துதல் மற்றும் பச்சை வளர்ச்சி வாய்ப்புகளை கைவிடுதல், சுற்றுச்சூழல் மேலாண்மை மேம்படுத்துதல் மற்றும் தழுவல் மற்றும் தணிப்பு திறன் ஆகியவற்றை மேம்படுத்துதல்.

## 2019 - 2020 ஆம் ஆண்டிற்கான உலக வங்கி கருத்திட்ட தயார்படுத்தல்


2019 - 2020 ஆம் ஆண்டிற்கான உலக வங்கி கருத்திட்ட தயார்படுத்தல், சர்வதேச அபிவிருத்தி முகவராண்மைக்கு வணிக ரீதியிலான கடன் வாங்குதலுக்கான சலுகையான சர்வதேச அபிவிருத்தி முகவராண்மைக் கடனளிப்பிலிருந்து இலங்கையின் எதிர்கால நிதி செலவினத்தை மேம்படுத்துவதற்கு தயாராக உள்ளது.



# அர்ப்பணிப்புகள்


இலங்கையானது 2018 இல் கடன் என்ற வகையில் உலக வங்கியிடமிருந்து 104 மில்லியன் ஐ.அ. டொலரைப் பெற்றுக்கொள்ள முடியுமாக இருந்தது.

## துறைரீதியான அர்ப்பணிப்புகள் 2013-2018




2013 இலிருந்து 2018 வரையான காலப்பகுதியின் போது உலக வங்கியின் ஆகக் கூடிய அர்ப்பணிப்பு கல்வி மற்றும் ஆற்றல் விருத்தித் துறையில் பதிவாகியுள்ளதுடன் மொத்த அர்ப்பணிப்பில் இது 22 சதவீதமாக காணப்பட்ட அதேவேளை இரண்டாவது அதிகூடிய நிதியளிப்பான 13 சதவீதம் அனர்த்த முகாமைத்துவ துறையில் அர்ப்பணிப்பினைக் காட்டியது.

## துறைரீதியான பகிர்வுகள் 2013-2018




2018 இல் உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்ட மொத்த அர்ப்பணிப்பு 153 பில்லியன் ஐ.அ.டொலராக பதிவாகியுள்ளதுடன் 29 சதவீத பங்களிப்புடன் நகர அபிவிருத்தி துறையில் பாரியதொரு பங்கு பதிவாகியுள்ளது. இரண்டாவது அதிகூடிய பங்களிப்பாக கல்வி மற்றும் திறன் அபிவிருத்தித் துறை காணப்படுவதுடன் மொத்த அர்ப்பணிப்புகளில் சுகாதாரம் மற்றும் சமூக நலன்புரித்துறைக்கான பங்களிப்பு 16 சதவீதமாகும்.

# புதிய அபிவிருத்தி முன்னெடுப்புகள்

## சூழலுக்கேற்ற நீர்ப்பாசனம் செய்யப்படும் விவசாயம்

*பண்ணை சமூகத்தின் காலநிலை தாக்குப்பிடிப்பினை மேம்படுத்தும் நோக்கத்துடன் நீர்ப்பாசனம் செய்யப்பட்ட விவசாயத்தின் உற்பத்தித் திறனானது இலங்கையில் மிகவும் உஸ்ணத்தினால் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் முன்னெடுக்கப்படுகின்றது. இது கால சூழ்நிலையினைக்கேற்ற விவசாய நடைமுறைகள், தொழில்நுட்பம், முன்னேற்றகரமான விவசாய உற்பத்தித்திறன் என்பவற்றினை பின்பற்றுவதனை அதிகரித்தல் மற்றும் இலக்கிடப்பட்ட சிறுபற்றுநில பண்ணை விவசாய நிலத்தில் சந்தை அடைவினை அதிகரித்தல் என்பவற்றின் மூலம் அடையப்பெற்றது.*

***2018 இல் பேச்சுவார்த்தை இடம்பெற்றது***
***கடன் தொகை:*** *ஐ.அ.டொலர் 125 மில்*
***செயற்படுத்துகைக் காலம்:*** *2018 – 2024*

## உள்ளாட்டு அபிவிருத்தி ஒத்துழைப்பு கருத்திட்டம்

*பொறுப்பு மற்றும் வகைகூறும் அடிப்படையில் உள்ளூராட்சி அரசாங்கங்களின் ஆற்றலினை சேவைகளை வழங்கும் வகையில் உறுதிப்படுத்தல் மற்றும் பங்குபற்றும் மாகாணங்களில் பொருளாதார உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு ஒத்துழைத்தல் என்பன இக் கருத்திட்டத்தின் நோக்கமாகும். இக்கருத்திட்டத்தினைச் செயற்படுத்துகின்ற மொத்தப் பொறுப்பு உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுடன் இணைந்ததாகும். வறுமையினால் அதிகளவு பாதிக்கப்பட்டவர்கள், பெண் தலைமைக் குடும்பங்கள், வேலை வாய்ப்பற்ற இளைஞர்கள், அங்கவீனமுற்றவர்கள் மற்றும் வயோதிபர்கள் போன்ற பாதிக்கப்பட்ட சனத்தொகையினை இலக்காகக் கொண்டு வடக்கு, கிழக்கு, வடமத்திய மற்றும் ஊவா மாகாணங்களிலுள்ள 134 உள்ளூராட்சி அதிகார சபைகளில் உள்ளூராச்சி திட்டமிடல் முறைமையினை வலுப்படுத்தல், உள்ளூர் சேவை வழங்கல் மற்றும் பொருளாதார சுற்று ஒத்துழைப்பு என்பவற்றினை மேம்படுத்துவதன் மூலம் உள்ளூர் சேவைகள் மற்றும் பொருளாதார உட்கட்டமைப்பினை மேம்படுத்தல், நிறுவன அபிவிருத்தி மற்றும் எதிர்பாரா அவசர பொறுப்பு என்பவற்றின் ஊடாக இக்கருத்திட்டம் முன்னெடுக்கப்படும்.*

***2019 இல் பேச்சுவார்த்தை இடம்பெற்றது***
***கடன் தொகை:*** *ஐ.அ.டொலர் 70 மில்*
***செயற்படுத்துகைக் காலம்:*** *2019 – 2024*

## ஆரம்ப சுகாதாரப் பராமரிப்பு முறைமை வலுப்படுத்தல் கருத்திட்டம்

*நாட்டின் தெரிவு செய்யப்பட்ட பிரதேசங்களில் உயர் ஆபத்து சனத்தொகை குழுக்களில் தொற்றாத நோய்களினை குறைத்தல் மற்றும் முகாமை செய்தலினை வலுப்படுத்தும் வகையில் ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவைகளின் பயன்பாடு மற்றும் தரத்தினை அதிகரிப்பது இக்கருத்திட்டத்தின் நோக்கமாகும். இலங்கையின் ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமையினை மீள் ஒழுங்குபடுத்தல் மற்றும் வலுப்படுத்தலுக்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கத்தினை அடைவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் நேரடிப் பயனாளிகள் நாட்டின் தெரிவு செய்யப்பட்ட சமூகங்களிலுள்ள ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிறுவனங்களைப் பயன்படுத்துகின்ற பொது மக்களாகும். ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிறுவனங்களை பயன்படுத்துகின்ற பொது மக்கள் பொதுவாக சனத்தொகையில் வறியவர்களாகக் காணப்படுகின்றார்கள். சமூகத்திலுள்ள இக்கருத்திட்டத்தினால் ஒத்துழைப்பு வழங்கப்படும் தொற்றாத நோய்களுக்குட்பட்ட பொது மக்கள் இதன் ஆரம்ப இலக்காகும். ஆரம்ப சுகார பராமரிப்பு சேவைகளை வலுப்படுத்துவதற்கான உபாயங்களை திட்டமிடுதல் மற்றும் நிறைவேற்றுவதற்குத் தேவையான வளங்கள் மற்றும் ஆற்றல்களினை வலுப்படுத்துவதன் மூலம் மத்திய மற்றும் மாகாண மட்ட சுகாதாரதுறை அலுவல்கள் நன்மையடையும் வகையில் இக் கருத்திட்டம் செயற்படுத்தப்படும்.*

***2018 இல் பேச்சுவார்த்தை இடம்பெற்றது***
***கடன் தொகை:*** *ஐ.அ.டொலர் 200 மில்*
***செயற்படுத்துகைக் காலம்:*** *2018 – 2024*

## உலக வங்கி தொழில்நுட்ப தூதுக் குழுக்கள் - 2018

| தொழில்நுட்ப தூதுக்குழு திகதிகள் | தூதுக்குழுத் திகதிகள் |
|---|---|
| இலங்கை சக்தி உட்கட்டமைப்புத்துறை மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்திற்கான தொழில்நுட்ப தூதுக்குழு | பங்குனி 16-30இ 2018 |
| அரசதுறை வினைத்திறன் வலுவூட்டல் கருத்திட்டம் - தொழில்நுட்ப தூதுக்குழு | பங்குனி 16-30இ 2018 |
| வெளிநாட்டு ஒதுக்குத்துறை ஆபத்து மற்றும் செயலாற்றுகை மீதான தொழில்நுட்ப உதவி தூதுக்குழு | பங்குனி 16-30இ 2018 |
| வடகிழக்கு உள்ளுர் சேவைகள் மேம்பாட்டுக் கருத்திட்டம் (நேடுளுஜீ) – தொழில்நுட்ப ஒத்துழைப்பு தூதுக்குழு | பங்குனி 16-30இ 2018 |
| முதலீட்டு ஊக்குவிப்புக்கான தொழில்நுட்ப உதவி தூதுக்குழு | பங்குனி 16-30இ 2018 |
| நகர போக்குவரத்துக்கான உட்கட்டமைப்பு மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்ட தூதுக்குழு – தொழில்நுட்பம் | பங்குனி 16-30இ 2018 |
| சுற்றாடல் தாக்க மேம்பாட்டுக் கருத்திட்டம் ஐஐ (ஊசுஜீ ஐஐ)இ முதலீட்டு வங்கியுடன் தொழில்நுட்ப தூதுக்குழு | பங்குனி 16-30இ 2018 |
| காலநிலை மாற்ற தணிப்பு செயற்பாட்டு ஒத்துழைப்பு கருத்திட்டம் (160552)இ தொழில்நுட்ப தூதுக்குழு | பங்குனி 16-30இ 2018 |
| சுற்றாடல் தாக்க மேம்பாட்டுக் கருத்திட்டம் ஐ (ஊசுஜீ ஐ)இ தொழில்நுட்ப தூதுக்குழு | பங்குனி 16-30இ 2018 |
| மெற்றோ கொழும்பு போக்குவரத்து தளமேடை – தொழில்நுட்ப தூதுக்குழு | பங்குனி 16-30இ 2018 |
| அணைக்கட்டுப் பாதுகாப்பு நீர் வளங்கள் திட்டமிடல் கருத்திட்டம்இ தொழில்நுட்ப தூதுக்குழு | பங்குனி 16-30இ 2018 |
| ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமை முன் மதிப்பீட்டு வலுப்படுத்தல் கருத்திட்டம் தூதுக்குழு | பங்குனி 16-30இ 2018 |
| அனர்த்த பாதுகாப்பு ஆபத்து நிதியளிப்பு மற்றும் காப்புறுதி, மூலதன சந்தை அபிவிருத்திக்கான சூழலினை உருவாக்குதல் மற்றும் இயலச் செய்தல் | பங்குனி 16-30இ 2018 |
| அரசதுறை வினைத்திறன் வலுவூட்டல் கருத்திட்டம் - தொழில்நுட்ப தூதுக்குழு | பங்குனி 16-30இ 2018 |
| தேசிய வெள்ள எதிர்வுகூறல் முன்னெச்சரிக்கை முறைமையினை தாபித்தல் - தொழில்நுட்ப தூதுக்குழு | பங்குனி 16-30இ 2018 |
| இலங்கையில் வர்த்தக மற்றும் போட்டித்தன்மை மேம்பாட்டுக்கான தொழில்நுட்ப உதவி தூதுக்குழு | பங்குனி 26-29இ2018 |
| இலங்கையில் தொழிற் சந்தை சவால்கள் மீதான கண்ணோட்டம் - தொழில்நுட்ப தூதுக்குழு | சித்திரை 2-7இ 2018 |
| இலங்கையில் அவசர உட்கட்டமைப்புத் துறை மதிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டம் - தொழில்நுட்ப தூதுக்குழு | சித்தி. 30- வைகாசி 11இ 2018 |
| சனத்தொகை மற்றும் வறுமை பற்றிய பி.செ. பிரிவு மதிப்பீடு இற்றைப்படுத்தல் தொழில்நுட்ப உதவி | வைகாசி 21 - ஆனி 1இ 2018 |
| தொழில்நுட்ப உதவி: வயது முதியோருக்கான வருமான ஒத்துழைப்பு மறுசீரமைப்பு தூதுக்குழு | வைகாசி 21 - ஆனி 1இ 2018 |
| இலங்கை சக்தி உட்கட்டமைப்பு சக்தி உட்கட்டமைப்பு - தொழில்நுட்ப தூதுக்குழு | வைகாசி 28 - ஆனி 11இ 2018 |
| பெருந்தோட்டத் துறை ஈடுபாடு – தொழில்நுட்ப உதவி | வைகாசி 31- ஆனி 5இ 2018 |
| காலநிலை மாற்ற தணிப்பு செயற்பாட்டு ஒத்துழைப்பு கருத்திட்டம் (160552)இ தொழில்நுட்ப தூதுக்குழுஇ | ஆடி 2-6இ 2018 |
| ஆரம்ப சுகாதார பராமரிப்பு முறைமை முன் மதிப்பீட்டு வலுப்படுத்தல் கருத்திட்டம் தொழில்நுட்ப உதவி | ஆடி 2-6இ 2018 |
| தொழில்நுட்ப உதவி நோக்கெல்லை எதிர்தாங்கலுக்கான கட்டிட ஒழுங்குவிதி தூதுக்குழு | ஆடி25-27இ 2018 |
| பெருந்தோட்டத் துறை ஈடுபாடு - தொழில்நுட்ப உதவி தூதுக்குழு | ஆவணி 1-7இ 2018 |
| சனத்தொகை மற்றும் வறுமை பற்றிய பி.செ. பிரிவு மதிப்பீடு இற்றைப்படுத்தல் தொழில்நுட்ப உதவி | ஆவணி 6-17இ 2018 |
| தேசிய வெள்ள எதிர்வுகூறல் முன்னெச்சரிக்கை முறைமையினை தாபித்தல் - தொழில்நுட்ப தூதுக்குழு | ஆவணி 6-17இ 2018 |
| வர்த்தக் கொள்கை மற்றும் வர்த்தக வசதி தொடர்பான தொழில்நுட்ப உதவி தூதுக்குழு | ஆவணி 13-16இ2018 |
| வயோதிபர் பராமரிப்பு கருத்திட்டம், தொழில்நுட்ப தூதுக்குழு | புரட்டாதி 10 - 17இ 2018 |
| காலநிலை எதிர்தாங்கல் மேம்பாட்டுக் கருத்திட்டம் (ஊசுஜீ) தொழில்நுட்ப தூதுக்குழு | புரட்டாதி 17-22இ 2018 |
| தேசிய இயற்கை அனர்த்த காப்புறுதித் திட்டம் - தொழில்நுட்ப தூதுக்குழு | புரட்டாதி 24-28இ 2018 |
| உள்நாட்டு அபிவிருத்தி ஒத்துழைப்பு கருத்திட்டம் – தொழில்நுட்ப தூதுக்குழு | ஐப்பசி 7-12இ 2018 |
| வர்த்தக் கொள்கை மற்றும் வர்த்தக வசதி தொடர்பான தொழில்நுட்ப உதவி தூதுக்குழு | ஐப்பசி 8-19இ 2018 |
| இலங்கை காலநிலை எதிர்கொள்ளல் பல்முக நிகழ்ச்சித்திட்டம் - தொழில்நுட்ப தூதுக்குழு | ஐப்பசி 20-26இ 2018 |
| உள்நாட்டு அபிவிருத்தி ஒத்துழைப்பு கருத்திட்டம் – தொழில்நுட்ப தூதுக்குழு | ஐப்பசி 26 – கார்த்தி. 2இ 2018 |

# மத்திய கிழக்கு மற்றும் தெற்காசிய பிரிவு

## மத்திய கிழக்கு

மத்திய கிழக்கைச் சேர்ந்த அபிவிருத்திப் பங்காளி நாடுகள் நாட்டின் முன்னுரிமைகளுக்கு முக்கியத்துவம் வழங்கும் வகையில் 1970 களின் மத்தியிலிருந்து நாட்டின் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்கு முக்கியமான பங்காற்றி வருகின்றன.

இருபக்க உதவி நிறுவனங்களான அபிவிருத்திக்கான சவூதி நிதியம், அரேபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியம் மற்றும் ஈரான் ஏற்றுமதி அபிவிருத்தி வங்கி அதேபோல், இருதரப்பு உதவி வழங்கும் நிறுவனங்களான சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் என்பன சலுகைக் கடன்கள், ஏற்றுமதிக் கடன்கள் மற்றும் பஹ்ரைன், கஸகஸ்தான், ஓமான் போன்ற நாடுகள் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்கான நன்கொடைகளைப் பெற்றுக் கொடுத்து மத்திய கிழக்கின் மூலமாக நிதியளிப்புத் துறைக்கு பங்களிப்புச் செய்துள்ளது.

1975 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை அரசாங்கமானது ஐ.அ. டொலர் 281 மில்லியன்களை பதினான்கு கடன்களாகப் குவைடிலிருந்து பெற்றுக் கொண்டுள்ளதோடு ஐ.அ. டொலர் 2 மில்லியன்களை மொரகஹகந்த நீர்ப்பாசன மற்றும் விவசாய அபிவிருத்தித் திட்டம் மற்றும் மொரகொல்ல நீர் மின் உற்பத்தித் திட்டம் என்பவற்றின் சாத்தியவள ஆய்வுகளுக்காக நன்கொடையாகப் பெற்றுக் கொண்டுள்ளது.

2018 ஆம் ஆண்டின் இறுதியின் போது அபிவிருத்திக்கான சவூதி நிதியானது மொத்தமாக ஐ.அ.டொ. 386 மில்லியன்களை கடனாகப் பெற்றுக் கொடுத்தது. அபிருத்திக்கான சவூதி நிதியமானது வீதி, சுகாதாம், நீர்ப்பாசனம், சமூக அபிவிருத்தி மற்றும் உயர்கல்வி போன்ற துறைகளுக்கு கடன் வழங்குவதற்கு முன்னுரிமை அளிக்கின்றது.


இதன் உருவாக்கத்தில் இருந்து இந்நிறுவனமானது இலங்கைக்கு ஐ.அ.டொ 333 மில்லியன்களை பொதுத் துறை கடனாகப் பெற்றுக் கொடுத்துள்ளது. இதில் பெரும்பகுதியானது வீதி அபிவிருத்திக்கே பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்தின் ஏனைய முன்னுரிமை நிதியளிப்புத் துறைகளானது கல்வி, நீர்ப்பாசம், மின் உற்பத்தி, தேயிலை அபிவிருத்தி மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் என்பனவாகும்.

ஊமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டம் மற்றும் 8ஆவது கிராமிய மின் மயமாக்கல் திட்டம் ஆகியன ஈரான் ஏற்றுமதி அபிவிருத்தி வங்கியின் ஐ.அ.டொ. 530 இரண்டு கடன்களின் மூலம் நிதியீட்டம் செய்யப்பட்டது. ஈரான் அரசாங்கமானது உமா ஓயா பல்நோக்கு அபிவிருத்தித் திட்டத்திற்கு ஐ.அ.டொ. 458 மில்லியன்களை பெற்றுக் கொடுப்பதற்கு இணங்கியுள்ளது. இது மொத்தச் செலவில் 85 சதவீதமாகும். எவ்வாறாயினும் ஈரானுக்கு விதிக்கப்பட்டுள்ள சர்வதேச உறவுகளுக்கான தடைகளின் காரணமாக இத்திட்டத்தின் மீதான நிதியீட்டத்தினை நிறுத்த வேண்டியேற்பட்டுள்ளது. எவ்வாறாயினும் இத்திட்டத்தின் மீது இதுவரை ஈரானினால் ஐ.அ.டொ. 51 மில்லியன்கள் நதியீட்டம் செய்யப்பட்டுள்ளன. ஏற்கனவே இத்திட்டத்தின் நிர்மான ஒப்பந்தக்காரராகவுள்ள ஈரானிய ஒப்பந்தக்காரரினூடாகவே இத்திட்டத்தினை உள்நாட்டு நிதியினைக் கொண்டு பூர்த்தி செய்வதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளதுடன், இது இரு நாடுகளுக்குமிடையிலான இருபக்க உறவுகளையும் உறுதிப்படுத்துவதுமாகவும் உள்ளது.


ஈரானின் நிதியீட்டத்தின் கீழ் "கிராமிய மின்மயமாக்கல் திட்டம் - 8" ஆனது யூரோ 77 மில்லியன் கிரயத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது மொத்தக் கிரயத்தில் 75 சதவீதமான யூரோ 58 மில்லியன்களை ஈரானினால் கடனாகப் பெற்றுத் தருவதற்கு இணங்கியுள்ளது. இதுவரை யூரோ 32 மில்லியன்கள் இத்திட்டத்திற்காக ஈரானினால் செலவிடப்பட்டுள்ளன.

மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து பெற்றுக் கொள்ளப்படும் கடன்களில் பகுதியானது நீர்ப்பாசனம், வீதிகள் மற்றும் பாலங்கள் மின் சக்தி, மற்றும் எரிபொருள் மற்றும் சுகாதாரத் துறைகள் மீதே முதலீடு செய்யப்பட்டுள்ளன. சலுகை மற்றும் நிலையான நிதி நிபந்தனைகள் நீண்டகால திருப்பிச் செலுத்தல் மற்றும் பெறுகை நடைமுறைகள் தொடர்பான நெகிழ்வான நிபந்தனைகள் என்பன மத்திய கிழக்கு நிதியளிப்பாளர்களின் சிறப்பம்சங்களாகும்.

## மத்திய கிழக்கு நாடுகளின் மூலமான மொத்த அர்ப்பனிப்புகள் (ஐ.அ.டொ. மில்லியன்)





## மத்திய கிழக்கு பங்காளர்களிடமிருந்து துறைரீதியான அர்ப்பணிப்பு (ஐ.அ.டொ. மில்லியன்)



## 2018 இல் பகிர்வு

குறித்த வருடத்தின் போது மத்திய கிழக்கு கொடை வழங்குநர்களிடமிருச்து மொத்த பகிர்வு 51 மில்லியன் ஐ.அ. டொலர்களாகும்.




## 2018 இல் மத்திய கிழக்கு அபிவிருத்தி கொடையாளர் மூலமாக நிதியீட்டு உடன்பாடுகள்.

2018 ஆம் ஆண்டில் பின்வரும் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக சவூதி அபிவிருத்தி நிதி மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் ஆகியவற்றுடன் இரண்டு கடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டன.



**சவூதி அபிவிருத்தி நிதி**

**ஐ.அ.டொ 16 மில்லியன்**

**களுகங்கை அபிவிருத்திக் கருத்திட்டம் - மேலதிக நிதியளிப்பு**

களுகங்கை அபிவிருத்தித் திட்டத்தில் ஏற்பட்ட எதிர்பார்க்காத புவியியல் தோற்றப்பாடுகளின் காரணமாக அதன் வடிவமைப்பானது திருத்தப்பட வேண்டியேற்பட்டது. இதன் காரணமாக அதிகரித்த செலவினை ஈடுசெய்யக் கூடிய வகையில் சவூதி அபிவிருத்திக்கான நிதியம், அரேபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியம் மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் என்பன மேலதிக நிதியீட்டத்தினைப் பெற்றுத் தருவதற்கு முன்வந்தது. இதற்கான கடன் ஒப்பந்தம் சவூதி அபிவிருத்தி நிதியத்துடன் 2018 ஜூலையில் கைச்சாத்திடப்பட்டது.

**சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம்**

**ஐ.அ.டொ. 50 மில்லியன்**

**தொழில்நுட்பக் கல்வி அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்**

பாடசாலைகளுக்கு அவசியமான தொழிநுட்ப ஆய்வு கூடங்களை நிர்மானித்தல் மற்றும் அவற்றிற்கு அவசியமான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கான இக்கருத்திட்டம் உதவுகின்றது. இதற்கான கடன் ஒப்பந்தமானது 2018 ஜூலை 3 இல் வியன்னாவிலுள்ள சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிறுவனத்தின் தலைமையகத்தில் கைச்சாத்திடப்பட்டது.



## 2018 இல் அமுல்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள்

| மத்திய கிழக்கு | கடன் தொகை (ஐ.அ.டொ. மில்லியன்) |
|---|---|
| **அபிவிருத்திக்கான சவூதி நிதியம்** | |
| காக்கை வலிப்பு சிகிச்சை கருத்திட்ட மேலதிக நிதியீட்டம் | 12.0 |
| களுகங்கை அபிவிருத்தக் கருத்திட்டம் - மேலதிக நிதியளிப்பு | 16.0 |
| வீதி வலையமைப்பு அபிவிருத்தித் திட்டம் | 60.0 |
| பேராதனை - பதுளை, செங்கலடி வீதி மேம்படுத்தல் திட்டம் | 60.0 |
| களுகங்கை இடது கரை அபிவிருத்தித் திட்டம் | 45.0 |
| வயம்ப பல்கலைக்கழக நகர அபிவிருத்தித் திட்டம் | 28.0 |
| **அரேபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியம்** | |
| தென்கிழக்கு பல்கலைக்கழக அபிவிருத்தித் திட்டம் 1பீ | 11.0 |
| களுகங்கை அபிவிருத்தக் கருத்திட்டம் - மேலதிக நிதியளிப்பு | 16.0 |
| பாலங்கள் புனரமைப்புக் கருத் திட்டம் | 35.0 |
| கிழக்குப் பல்கலைக்கழக சுகாதார நலநோம்பு விஞ்ஞான பீடத்திற்கான கட்டிடத் தொகுதி | 33.0 |
| **சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம்** | |
| வீதி அபிவிருத்தி கருத்திட்டம் | 40.0 |
| கொழும்பு தேசிய வீதி அபிவிருத்திக் கருதிட்டம் | 50.0 |
| மேல் மாகாண வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் | 17.0 |
| பதுளையிலிருந்து செங்கலடி வரை ஏ05 வீதி புனரமைப்பு | 60.0 |
| களுகங்கை அபிவிருத்தக் கருத்திட்டம் - மேலதிக நிதியளிப்பு | 18.0 |

## மத்திய கிழக்கு அபிவிருத்தி பங்காளர்களின் எதிர்கால உதவிகள்

மத்திய கிழக்கு நிதி உதவி வழங்கும் நிறுவனங்களிலிருந்து நிதியுதவி பெருவதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற மற்றும் 2019 இல் கடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் கருத்திட்டங்கள்

**சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம்**

- **ஏ 017 பாதை புனரமைப்புக் கருத்திட்டம் (ரக்வான - சூரியகந்த)**
- ஐ.அ.டொ. 40 மில்லியன்
- இக்கருத்திட்டத்தின் கீழ் 18 கிலோ மீற்றர் தூரத்தைக் கொண்ட பிரதேசங்களின் இயலளவை விஸ்த்தரித்தல். இது தென் மாகாணத்தையும் சப்ரகமுவை மாகாணத்தையும் இணைக்கும் ஏ தர வீதிப் பிரிவாகும்.

**அபிருத்திக்கான சவூதி நிதியம்**

- **சப்ரகமுவ பல்லைக்கழகத்தின் மருத்துவ பீடத்தினை உருவாக்குதல்.**
- ஐ.அ.டொ. 50 மில்லியன்
- இத்திட்டத்தின் மூலம் நாட்டின் மருத்துவ பீடங்களுக்கான அனுமதியை அதிகரிக்கலாம்.

- மேற்குறிப்பிட்ட கருத்திட்டங்களுக்கு மேலதிகமாக மொரட்டுவை பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடத்தினை உருவாக்குவதற்கான கருத்திட்டமானது அரேபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்தக் கிரயம் ரூபா. 8,011) மில்லியன் (அன்னளவாக 15 மில்லியன் குவைட் டினார்களாகும்.)

- பேராதனை போதனா வைத்தியசாலையின் பல்நோக்கு உயர் செயற்பாடுகளுக்கான மத்திய நிலையத்திற்கான 14 மாடிக் கட்டிட நிர்மானத் திட்டமானது சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதன் மொத்தக் கிரயம் ரூபா. 7,950 மில்லியன் (அன்னளவாக ஐ.அ.டொ. 46 பில்லியன்) ஆகும்.

# தெற்காசிய நாடுகள்

## இந்தியா

இந்தியாவின் அபிவிருத்தி உதவினகளானது கடன்கள், கொடைகள் மற்றும் தொழிநுட்ப உதவிகள் என்ற முறையில் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. இவற்றுள் பிரதானமாக பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு, வாழ்வாதார அபிவிருத்தி, கல்வி, சுகாதாரம், இயலளவுகளை கட்டியெழுப்புதல் மற்றும் பொருளாதார மீளெழுச்சி போன்ற துறைகளில் கவனம் செலுத்துகின்றது. இப்பின்னணியில் இந்திய அரசாங்கமும் ஏனைய மரபுரீதியான அபிவிருத்தி பங்காளர்களைப் போன்று முக்கியமாக அபிவிருத்திப் பங்காளர்களாக மாறியுள்ளது.

## 2018 இல் இந்தியக் கடன் திட்டம்

**வரையறுக்கப்பட்ட கடன்**

ஒரு வங்கியில் அல்லது ஒரு கடன் சங்கத்தின் கணக்கினூடாக தேவையான போது குறிப்பிட்ட எல்லைக்குள் கடனாகப் பெற்றுக் கொள்வதற்கு உறுதியளிக்கின்றது. இதன் கீழ் பெற்றுக் கொண்ட தொகைக்கே வட்டி அறவிடப்படுகின்றது.

- முப்படைகளுக்குமானது/ மற்றும் இலங்கைப் பொலீசிக்கு அவசியமான உபகரணங்களை கொள்வனவு செய்தல். பெறுகைகள் - ஐ.அ.டொ. 100 மில்லியன்
- வடக்கு புகையிரதப் பாதை - ஐ.அ.டொ. 416 மில்லியன் மற்றும் ஐ.அ.டொ. 382 மில்லியன்
- புகையிரத்துறை அபிவிருத்தி - ஐ.அ.டொ. 318 மில்லியன்.
- காங்கேசன் துறை துறைமுக அபிவிருத்திக்கான வரையறுக்கப்பட்ட கடன். ஐ.அ.டொ. 45.27 மில்லியன்


**கொள்வனவுக் கடன்**

பொருட்கள் அற்ற சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்காக வெளிநாட்டு கொள்வனவாளர் பெற்றுக் கொள்ளும் கடன்.

- பாரிய தம்புள்ள நீர் விநியோகத் திட்டம் ஐ.அ.டொ. 60.69 மில்லியன்
- இலங்கை கடற்படைக்கு இரு கப்பல்களை கொள்வனவு செய்தல். ஐ.அ.டொ. 124 மில்லியன்
- அலவ்வ, பொதுஹெர மற்றும் பொல்கஹவெல ஒன்றிணைந்த நீர் விநியோகத் திட்டம் ஐ.அ.டொ. 91.8 மில்லியன்
- அளுத்கமை, மத்துகமை மற்றும் அகலவத்தை ஒன்றிணைந்த நீர் விநியோகத் திட்டம். ஐ.அ.டொ 164.9 மில்லியன்

## கடன் நிதியின் கீழான அர்ப்பணிப்புக்களும் செலவுகளும்

இவ்வருட காலப்பகுதியில் காங்கேசன்துறை துறைமுக கருத்திட்டத்திற்காக ஐ.அ.டொ. 45 மில்லியன் கடன் உதவிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. 2018 ஆம் ஆண்டில் ஐ.அ.டொ. 49 மில்லியன் செலவிடப்பட்டுள்ளது.




## இந்திய நன்கொடை முன்னெடுப்புகள்

இந்திய அரசாங்கத்தின் நன்கொடை உதவிகளானது விசேட கருத்திட்டம் மற்றும் சிறியளவிளான அபிவிருத்தித் திட்டம் என்ற அடிப்படையில் பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.

| விசேட அபிவிருத்தித் திட்டம் | சிறிய அபிவிருத்தித் திட்டம் |
|---|---|
| விசேட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் 50,000 வீடுகளை நிர்மாணிப்பதற்காக ஐ.அ.டொ. 270 மில்லியன்களை நன்கொடை உதவியாகப் பெற்றுக் கொள்வதற்காக இத்திட்டம் ஆனது ஐ. நாடுகளின் ஹபிடாட் நிறுவனம், சர்வசேத செஞ்சிலுவை பெடரேசன், மனிதாபிமானத்திற்கான குடியிருப்பு தேசிய வீடமைப்பு அதிகார சபை என்பவற்றின் பங்களிப்புடன் அமுல்படுத்தப்பட்டது. வடக்கு கிழக்கு மாகாணங்களில் திட்மிடப்பட்ட வகையில் 131 வீடுகள் மாத்திரம் நீங்கலாக 46,000 வீடுகள் நிர்மானிக்கப்பட்டுள்ளது. மிகுதி 4,000 வீடுகளும் ஊவா மற்றும் மத்திய மாகாணங்களுள் நிர்மாணிக்கப்படவுள்ளன. இவற்றில் 1,000 வீடுகள் கட்டி முடிக்கப்படும் தறுவாயிலுள்ளன. மிகுதி 3,000 வீடுகளும் 2019ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பூரணப்படுத்தப்படவுள்ளன. | சிறிய அபிவிருத்தித் திட்ட நன்கொடைத் திட்டத்தின் கீழ் இந்திய அரசாங்கமானது அதிகபட்சமாக ரூபா. 300 மில்லியன்களை ஒரு திட்டத்திற்காக பெற்றுக் கொடுகின்றது. இத்திட்டத்தின் கீழ் மீள் குடியமர்த்தல், வாழ்வாதார அபிவிருத்தி, தொழில் வாய்ப்பு, பெண்கள் வலுவூட்டல், தொழில் பயிற்சி, கல்வி மற்றும் ஆராய்ச்சி, கலாசார நடடிவக்கைகள், விளையாட்டு, கைத்தொழில் அபிவிருத்தி, வைத்தியசாலை கட்டமைப்பு அபிவிருத்தி மற்றும் உபகரணங்கள் பெற்றுக் கொடுத்தல் போன்ற பல துறைகளை உள்ளடக்கும் வகையில் பல கருத்திட்டங்கள் தற்போது அமுல்படுத்தப்படுகின்றன. |

## இலங்கையில் முன்வைத்திய சேவை அம்புலன்ஸ் சேவையை உருவாக்குதல்

இலங்கையில், வீதி விபத்துக்கள், மாரடைப்பு, நஞ்சூட்டல் மற்றும் அனர்த்தங்கள் போன்ற பல்வேறுபட்ட காரணங்களினால் அவசர மருத்துவப் பராமரிப்பு சேவைகளின் தேவையானது அதிகரித்துச் சென்றுளளதைக் காணலம். இதன்போது, உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு உடனடி முன் மருத்தவ உதவிகளைப் பெற்றுக் கொடுப்பது இன்றியமையாததாகும். உடனடி மருத்துவ சேவையின் அவசியத்தைக் கருத்திற் கொண்டு இலங்கை அரசாங்கமானது வைத்தியசாலைகளுக்கு அனுமதிப்பதற்கு முன்னதான உடனடி மருத்துவ சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கான அம்புயலன்ஸ் சேவையினை இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் அறிமுகப்படுத்துதவற்காக நடவடிக்கைகளை மேற்கொண்டது. நாடு பூராகவும் பரந்த வகையில் 297 அம்புயலன்ஸ் வண்டிகளைப் பெற்றுக் கொடுத்துள்ளது. 2018 ஆம் ஆண்டில் இத்திட்டம் பூரணப்படுத்தப்பட்டது. இக்கருத்திட்டமானது நாட்டின் பின்தங்கிய கிராமங்களில் வாழும் மக்களின் முக்கியமான உடனடித் தேவையைப் பூர்த்தி செய்துள்ளது. இந்திய அரசாங்கமானது இத்திட்டத்தினை அமுல்படுத்துவதற்ாக ஐ.அ.டொ. 22.06 மில்லியன்களை நன்கொடையாக பெற்றுக் கொடுத்துள்ளது.

“1990 சுவசெரிய மன்றம்” ஆனது பாராளுமன்றத்தில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு அமைப்பாகும். இந்தியக் கொடைத்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நடவடிக்கைகள் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டுள்ளன. 297 அம்புயலன்ஸ் உட்பட அனைத்து சொத்துக்களும் சுவசெரிய மன்றத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன. இது அரசாங்கத்திள்கு சொந்தமான அமைப்பாகும். தற்போது கருத்திட்டமானது இவ்வமைப்பினால் முன்னெடுத்துக் செல்லப்படுகின்றன.

## நடைமுறையிலுள்ள நன்கொடைத் திட்டங்கள்

| கருத்திட்டத்தின் பெயர் | (ரூபா. மில்லியன்) |
|---|---|
| முன்வைத்திய சேவை இலவச அம்புயுலன்ஸ் சேவை | 3,530 (ஐ.அ.டொ.22மில்) |
| 50000 இந்திய கொடை வீடமைப்புத் திட்டம | 43,200 (ஐ.அ.டொ.270மில்) |
| 10000 இந்தியக் கொடை வீடமைப்புத் திட்டம் | 11,200 (ஐ.அ.டொ.70 மில்) |
| யாழ்ப்பாணம் புதிய கலாசார மண்டபம் | 1,800 (ஐ.அ.டொ.11.35மில்) |
| வட மாகாணத்தில் 27 பாடசாலைகளை புணரமைத்தல். | 250 |
| மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு மருத்துவப் பிரிவுக் கட்டிடம் மற்றும் மருத்துவ உபகரணங்களை பெற்றுக் கொடுத்தல | 275 |
| தளதா மாளிகைக்கான பயிற்சிப் பாடசாலை கண்டி பல்லேகல | 145 |
| யாழ் பல்கலைக்கழகத்துடன் விவசாயம் மற்றும் பொருளியல் பீடத்திற்கான கட்டிடத் தொகுதி | 600 |
| மட்டக்களப்பு மாவட்டத்தில் 3400 மலசல கூடங்களை நிர்மாணித்தல். | 300 |
| 300 இடைத் தங்கல் விடுதிகளை மன்னார் மடுவில் நிர்மாணத்தில் | 300 |
| மாதிரிக் கிராம வீடமைப்புத் திட்டத்தின் கீழ் 25 மாவட்டங்களில் 600 வீடுகளை நிர்மாணித்தல் | 300 |
| பொலன்நறுவையில் பல் கலாச்சார மும்மொழி பாடசாலையை நிர்மானித்தல் | 300 |
| ஹட்டன் தொண்டமான தொழிற் பயிற்சி நிலையத்தினை மேம்படுத்தல் | 199 |
| 3000 மழை நீர் சேகரிப்பு அலகுகளை நிர்மாணித்தல் | 294 |
| மட்டக்களப்பு, கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அழகியல் கற்கைகளுக்கான சுவாமி விபுலாநந்தர் கல்லூரியினை மேம்படுத்தல் | 275 |
| அநுராதபுரம் சோபித தேரர் கிராமத்துல் 153 வீடுகளை நிர்மாணித்தல | 300 |
| புசல்லாவை சரஸ்வதி வித்தியலாயத்தினை மேம்படுத்தல். | 95 |
| தென் மாகாண கிராம-சக்தி வீடமைப்புத் திட்டம் | 300 |
| வட மாகாண கிராம-சக்தி வீடமைப்புத் திட்டம் | 300 |
| தம்புள்ளையில் வெப்பநிலைக் கட்டுப்பாட்டுடன் கூடிய களஞ்சிய சாலை நிர்மாணம் | 300 |

# பாகிஸ்தான்

பாகிஸ்தானிடமிருந்தான முதலாவது கடன் உதவியானது 1991 ஆம் ஆண்டு ஐ.அ.டொ. 5 மில்லியன் புகையிரத களஞ்சிய வண்டிகளைப் பெற்றுக் கொள்வதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்டது. பாகிஸ்தான் அரசாங்கமானது 2006 இல் ஒரு வரிசைக் கடன் உதவியாக ஐ.அ.டொ. 50 மில்லியன்களை இராணுவ உபகரணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக பங்களித்துள்ளது. இதற்கு மேலதிகமாக ஐ.அ.டொ. 10 மில்லியன் வரிசைக் கடனாக 2017 இல் பெற்றுக் கொள்ளப்பட்டது.

உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்களை மீள் குடியேற்றுவதற்கான வீடுகளை நிர்மாணிப்பதற்காக பாகிஸ்தான் அரசாங்கம் ஐ.அ.டொ. 1 மில்லியனை 2014 ஆம் ஆண்டில் நன்கொடையாகப் பெற்றுக் கொடுத்துள்ளது. இதற்கு மேலதிமாக 2014 ஆம் ஆண்டில் இருந்து 06 கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக ஐ.அ.டொ. 350,000 பெற்றுக் கொடுத்துள்ளது.

பாகிஸ்தான் அரசாங்கமானது ஐ.அ.டொ. 200 மில்லியன்களை கடனாகப் பெற்றுத் தருவதற்கு இணங்கியுள்ளது. வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் பாகிஸ்தான் அதிகாரிகளுடன், கடன் நிபந்தனைகள் மற்றும் விதி முறைகள் தொடர்பான கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளது.

# முன்னேற்றப் பொருளாதாரங்களின் பிரிவு

## முன்னேற்றப் பொருளாதாரங்களுடன் அபிவிருத்தி பங்குடமை

மேற்கு நாடுகளான அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ரஷ்யா போன்ற நாடுகளிலிருந்து இலங்கைக்கான நிதி உதவி வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் வளர்ச்சியடைந்த பொருளாதாரங்கள் பிரிவினூடாக திரட்டப்படுகின்றது. இலங்கைக்கு நிதியுதவி வழங்குகின்ற பிரதான கடன் வழங்குநர்களில் ஜேர்மனி, நெதர்லாந்து, ஐரோப்பிய யூனியன், ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், ஸ்பெயின், அவுஸ்திரியா, பெல்ஜியம், ரஷ்யா, அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், ஹங்கேரி மற்றும் பின்லாந்து, ஆகிய நாடுகள் காணப்படுகின்றன.


2010 இல் இலங்கை நடுத்தர வருமானமட்ட பொருளாதாரமாக வளர்ச்சியடைந்ததன் விளைவாக அரசாங்கங்கள் மற்றும் இந்நாடுகளின் கடன் வழங்கும் முகவர்களிடமிருந்து வெளிநாட்டு நிதியாக பெறப்படுகின்ற உதவி தொகையானது குறிப்பிடத்தக்களவு மாற்றமடைந்துள்ளது. சலுகை நிதியளிப்பு அல்லது குறைந்த வட்டி விகிதத்துடனான இலகுக் கடன் என்பன குறைவடைந்ததன் காரணமாக இந்நாடுகள் மற்றும் முகவர்களிடமிருந்து பெறப்பட்ட அபிவிருத்தி உதவி சலுகை மற்றும் சலுகை அல்லாத நிதியாகவும் ஏற்றுமதி கடன் வசதிகளாகவும் பண்முகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிதியளிப்புகளானது பிரதானமாக ஏற்றுமதிக் கடன்கள, வர்த்தகக் கடன்கள், சலுகைக் கடன் உதவி, மானிய உதவி ஆகிய வடிவங்களில் பெற்றுக் கொள்ளப்படுகின்றன. மேற்கு நாடுகளிலிருந்து பெறப்படும் பெரும்பாலான சலுகையல்லாத கடன்களானவை, பாதைகள், பாலங்கள், மற்றும் நீர்வழங்கல், சமூக உட்கட்டமைப்பு போன்ற துறைகளில் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்ட அவசர தேவைகளுக்கான உதவியாகப் பயன்படுத்தப்படுவதுடன் மக்களுக்கு தரமான உயர் தொழில்நுட்ப மற்றும் நம்பகமான சுகாதார வசதிகளை வழங்கும் நோக்கத்துடன் சுகாதார பராமரிப்பு வசதிகளை மேம்படுத்தல் மற்றும் வைத்தியசாலைகளின் அபிவிருத்தி என்பன முன்னெடுக்கப்பட்டுள்ளன.

## அர்ப்பணிப்புகளும் பகிர்ந்தளிப்பும்

2017-2018 உயர் பொருளாதாரங்களிலிருந்து அர்ப்பணிப்புகளும் பகிர்வும் (ஐ.அ.டொ. மில்லியன்)

| | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அர்ப்பணிப்புகள் | 337 | 439 | 138 | 547 | 124 | 234 | 488 | 370 | 224 | 713 | 177.27 | 349 |
| பகிர்ந்தளிப்புகள் | 264 | 313 | 295 | 361 | 202 | 223 | 312 | 246 | 307 | 233 | 188.61 | 196 |




## 2018 இல் இடம்பெற்ற வெளிநாட்டு நிதியளிப்பு அர்ப்பணிப்புகள்

பின்வரும் கருத்திட்டங்களை செயற்படுத்தும் வகையில் நிதி ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்கு 2018 இல் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதுடன் ஏற்றுமதி கடன் வசதிகளின் கீழ் சலுகைக் கடனாக வழங்கப்படுவதுடன் முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களிலிருந்து மானிய உதவியாக வழங்கப்படும்.

## அர்ப்பணிப்புகள் - 2018

| அபிவிருத்தி பங்களிப்பு | கருத்திட்டத்தின் பெயர் | தொகை (ஐ.அ.டொ மில்லியன) |
|---|---|---|
| அபிவிருத்திக்கான பிரான்ஸ் முகவர் (ஏஎப்டி) | பசுமை வலு அபிவிருத்தி மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - கட்டம் 2 | 34.7 |
| நெதர்லாந்தின் ஐஎன்ஜி வங்கி என்வீ | ஹெம்மாதகம நீர் வழங்கல் கருத்திட்டம் | 96.5 |
| அவுஸ்திரேலிய அரசாங்கம் | வளர்ச்சி நிகழ்ச்சித்திட்டத்திற்கான ஆளுகை | 25.0 |
| நெதர்லாந்து ராபோ வங்கி | கிராமிய பாலங்கள் கருத்திட்டம் மீள்கட்டமைப்பு | 59.01 |
| பிரான்ஸ் அரசாங்கம் | சிறிய பாற்பொருள் கூட்டறவுச்சங்கங்கள் அபிவிருத்தி | 16.02 |
| அவுஸ்திரியா வங்கி | சத்திரசிகிச்சைக் கூடங்கள் மற்றும் ஐசீயு உபகரணம் தரமுயர்த்தல் | 11.3 |
| அவுஸ்திரிய யுனிகிரடிட் வங்கி | ரஜரட்ட மற்றும் கிழக்கு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடங்கள் மற்றும் பேராதணைப் பல்கலைக்கழகத்தின் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் பீடத்தின் மருத்துவ உபகரணங்கள் வழங்கல். | 6.1 |
| அவுஸ்திரிய யுனிகிரடிட் வங்கி | ஒருகொடவத்த – அம்பத்தல வீதி அபிவிருத்திக் கருத்திட்டத்துடன் இணைந்த நீர் குழாய்கள் அபிவிருத்தி. | 62.7 |
| அவுஸ்திரிய யுனிகிரடிட் வங்கி | ஒருங்கிணைந்த கிராம – கடுவானா நீர் வழங்கல் கருத்திட்டத்தினைச் செயற்படுத்தல். | 13.0 |
| ஐக்கிய அமெரிக்கா | எம்சீசீ மானியம் (மேலதிக நிதியளிப்பு) | 2.6 |
| யுஎஸ்எய்ட் | சனநாயக ஆளுகை மற்றும் சமூக ஒற்றுமைக்கான பங்குடமையினை வலுவூட்டல் | 9.7 |
| யுஎஸ்எய்ட் | நிலையான மற்றும் பிரத்தியேக பொருளாதார வளர்ச்சி | 12.4 |



## 2018 இல் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்

வளர்ச்சியடைந்த பொருளாதாரங்களிலிருந்து நிதி உதவியின் கீழ் 2018 இன் போது பேச்சுவார்த்தை நடாத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்களின் பட்டியல்.

| அபிவிருத்தி பங்காளி | கருத்திட்டம் | தொகை (ஐ.அ.டொ மில்லியன்) |
|---|---|---|
| அவுஸ்ரியா | கொழும்பு மாநகர சபைக்கான தீயணைப்பு வாகனங்கள் / உபகரணங்கள் வழங்கல். | 11.93 |
| அவுஸ்ரியா | புகையிரத பாலங்கள் மற்றும் சுற்று மேசைகள் வழங்கல் மற்றும் புகையிரத வலையமைப்பு பராமரிப்பு மற்றும் விரிவாக்கஞக்கு துணை வழங்கல்கள் | 8.64 |
| அவுஸ்ரியா | பழைய களனி புகையிரத பாலம் கருத்திட்ட நிர்மாணம் மற்றும் இடமாற்றல் | 10.23 |
| பிரேசில் | இலங்கை புகையிரத சேவைக்கான மலைநாட்டுப் பாதை தொழிற்பாட்டுக்காக 12 லொகமொடிவ் கொள்வனவு. | 49.00 |
| ஐக்கிய அமெரிக்கா | மில்லேனிய சவால் கொம்பெக்ட் நிகழ்ச்சித்திட்டம். | 480.00 |
| பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் (ஏஎப்டி) | இரத்மலானை – மொரட்டுவை கழிவு நீர் முகாமைத்துவ கருத்திட்டத்தை நிர்மாணித்தல். | 86.00 |
| பிரான்ஸ் அபிவிருத்தி முகவர் (ஏஎப்டி) | முன்தெனி ஆறு ஒருங்கிணைந்த நீர்ப்பாசனக் கருத்திட்டம் | 172.00 |
| லண்டன் | கிராமிய பாலங்கள் கருத்திட்ட நிர்மாணம் | 63.00 |
| பிரான்ஸ் | சொய்ஸா பிரசவ வைத்தியசாலைக் கருத்திட்டத்திற்கான குழந்தைப் பிரசவ மற்றும் மகப்பேறியல் உசாவுகை நிலையத்தினைச் செயற்படுத்தல். | 30.00 |
| நெதர்லாந்துகள் | வடமாகாணத்தில் சுகாதார வழங்கல் சேவையினை வலுப்படுத்தல் | 60.00 |
| நெதர்லாந்துகள் | பொலனறுவை தொழில் பயிற்சி நிறுவகத்தினை அபிவிருத்திசெய்தல். | 33.00 |
| நெதர்லாந்துகள் | கிராமிய பாலங்கள் கருத்திட்ட நிர்மாணம் | 54.00 |
| ஜேர்மன் | பாணந்துறை தள வைத்தியசாலை மீள்நிர்மானம் | 120.00 |
| | **மொத்தம்** | **1,178.00** |

## 2018 இல் செயற்படுத்தப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்

### ஹெம்மாத்தகம நீர் வழங்கல் கருத்திட்டம்

நாடொன்றின் சிறந்த சுகாதார மற்றும் சமூகப் பொருளாதார அபிவிருத்திக்கு பாதுகாப்பான குடிநீர் அத்தியவசியமான ஒன்றாகும். தற்பொழுது, நாட்டில், பாதுகாப்பான குடிநீர் கிடைப்பனவானது மொத்த சனத்தொகையில் ஏறக்குறைய 86 சதவீதமாகக் காணப்படும் அதேவேளை சனத்தொகையில் குழாய் நீர் வழங்கல் வசதியானது ஏறக்குறைய 46 சதவீதமாகக் கருதப்படுகின்றது. நாடு தேசிய மட்டத்தில் பாதுகாப்பான குடிநீர்ப்பெறுகைக்கு குறிப்பிடத்தக்களவு முன்னேற்றத்தினைக் கண்டிருக்கின்ற போதிலும் நாடு முழுவதிலுமுள்ள மாவட்ட, பிரதேச செயலக மற்றும் கிராம சேவையாளர் பிரிவு மட்டத்தில் பாதுகாப்பான குடிநீர் பெறுகையில் பிராந்திய மட்டத்தில் முரண்பாடுகள் காணப்படுகின்றன. நுவரெலியா, பதுளை மற்றும் மொனராகலை போன்ற மாவட்டங்களில் பாதுகாப்பான குடிநீர் தேசிய சராசரியினைவிட குறைவாகக் காணப்படுகின்றது. நாடு முழுவதிலும் குழாய் நீர் வசதிகளுடன் ஒப்பிடுகையில் ஊவா, சப்பிரகமுவ, வடமேல் மற்றும் வடமாகாணம் என்பன தேசிய சராசரியினைவிட பின்னடைவாகக் காணப்படுகின்றன.

மேற்குறித்த பின்னணியில், சப்பிரகமுவ மாகாணத்தின் கேகாலை மாவட்டத்தில் ஹெம்மாத்தகம மற்றும் அறநாயக பிரதேசங்களிலுள்ள மக்களுக்கு குழாய் நீர் வசதிகளை வழங்குவதற்கு ஹெம்மாத்தகம நீர் வழங்கல் கருத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஹெம்மாத்தகம பிரதேசத்தில் வாழ்கின்ற ஏறக்குறைய எழுபது சதவீதமான குடும்பங்கள் அவர்களது குடிநீர்த் தேவைகளுக்காக தரைக்கீழ் நீர் மூலங்களில் தங்கியிருக்கின்றனர். பெரும்பாலான இத்தரைக்கீழ் நீர் மூலங்கள் வரட்சிக் காலங்களின் போது வற்றிவிடுவதுடன் இக்காலப்பகுதியில் தமது வீட்டுக் குடிநீர்த் தேவையினை நிவர்த்தி செய்வதற்கு மக்கள் அதிக நேரத்தினை

செலவிட வேண்டியுள்ளது. அறநாயக்க மற்றும் ஹெம்மாத்தகம பிரதேசத்தில் காணப்படும் தரைக்கு மேலுள்ள நீர் மூலங்கள் தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களுக்கு மிக நெருக்கமாகக் காணப்படுவதனால் இம் மூலங்களில் காணப்படும் நீர் பெருமளவு மாசடைந்திருப்பதனால் குடிநீர் நோக்கத்திற்கு உகந்ததாகக் காணப்படுவதில்லை. அப் பின்னணியில், இப்பிரதேசங்களில் வாழும் பெரும்பாலான மக்கள் அவர்களது குடும்பத் தேவைக்காக பாதுகாப்பான குடிநீரைப் பெற்றுக் கொள்வதில் அதிக கஷ்டத்தினை எதிர்நோக்குகின்றனர். மேற்குறித்த நிலைமையினைக் கவனத்திற் கொண்டு இப்பிரதேசத்தில் வாழுகின்ற ஏறக்குறைய 197,000 மக்கள் சனத்தொகைக்கு குடிநீர் வசதியினை வழங்குவதற்கு மேற்குறித்த கருத்திட்டத்தினை செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தின் மொத்த ஒப்பந்தச் செலவினம் 81.9 மில்லியன் யூரோக்களாகும். நெதர்லாந்தின் ஐஎன்ஜி வங்கி என்.வீ. ஆனது இக்கருத்திட்டத்திற்கு 81.9 மில்லியன் யூரோக்களை வழங்குவதற்கு இணங்கியுள்ளது.

## கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவகத்தினை தரமுயர்த்தல் மற்றும் புதுப்பித்தல் கருத்திட்டம்

இலங்கையின் கைத்தொழிற்றுறை மற்றும் வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தொழிலாளர்களின் தொடர்ந்தேர்ச்சியான வெற்றியினை உறுதிப்படுத்துவதற்கு மனிதவள காரணியானது மிக முக்கிய பங்காளியாகக் காணப்படுகின்றது. நாட்டிலும் வெளிநாடுகளிலும் தொழில்வாய்ப்புகளை உறுதிப்படுத்தல் மற்றும் பொருளாதார வளர்ச்சியினை அதிகரித்தல் மற்றும் ஸ்திரப்படுத்தலுக்கான நாட்டின் முதலீட்டு உபாயங்களின் பிரதான பகுதியொன்றாக கல்வி மற்றும் பயிற்சி காணப்படுகின்றது.

இக்கருத்திட்டம் 1985 இல் ஆரம்பிக்கப்பட்டது என்ற வகையில், கைத்தொழிற் சமூகத்திற்குத் தேவையான தகைமை பெற்ற மனித வளத்தினை உற்பத்தி செய்வதில் கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவகம் மிகவும் வினைத்திறனுடன் ஈடுபட்டது. எதிர்காலத்தில் கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் பங்களிப்பானது பொறியியல் துறைக்கான மனிதவள உருவாக்கம் மற்றும் மனிதவள அபிவிருத்தி என்பவற்றில் மிக முக்கிய விடயமாகக் காணப்படும். தற்பொழுது மாணவர் அனுமதியானது ஏறக்குறைய வருடத்திற்கு 1,500 ஆக காணப்படுகின்ற அதேவேளை சராசரியாக 2,000 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறுவதுடன் 450 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். தேசிய டிப்ளோமாவுக்கு சமமான என்விகியூ மட்டம் 6 இனைக் கொண்டுள்ள நடுத்தர மட்ட தொழில்நுட்பவியலாளர்களுக்கான தேவை அதிகளவு காணப்படுவதாக அறிக்கைகள் வெளிப்படுத்தியுள்ளன.

கடந்த பல வருடங்களாக இந்நிறுவனத்தின் மாணவர் அனுமதி அதிகரிக்கப்பட்ட போதிலும் அதன் வசதிகள் முன்னேற்றமடையவில்லை. இதன் விளைவாக, வகுப்பறை வசதி உபகரணம் மற்றும் தேவையான விரிவுரையாளர்கள் போதியளவு காணப்படாமையினால் பல்வேறு பிரச்சனைகள் ஏற்பட்டுள்ளன. மேற்குறித்த காரணிகளைக் கருத்திற் கொண்டு அரசாங்கம் கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவகத்திற்கான வசதிகளை மேம்படுத்துவதுடன் தரமுயர்த்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. இக்கருத்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட செலவினம் 9.5 மில்லியன் யூரோக்களாகும். அரசாங்கம் அவுஸ்திரிய வங்கியினூடாக மேற்குறித்த கருத்திட்டத்திற்கு நிதியளிப்பதற்கு வட்டியல்லாத இலகுக்கடனை வழங்குவதற்கு அவுஸ்திரிய அரசாங்கம் இணங்கியுள்ளது.

## அரசாங்க வைத்தியசாலைகளுக்கு 100 அம்புலன்ஸ் கார்களை வழங்கல் கருத்திட்டம்

சுகாதாரப் பராமரிப்பு முறைமையில் முன்னோடியாக அவசர மருத்துவ சேவைகள் தாபிக்கப்பட்டுள்ளன. சர்வதேச ஆராய்ச்சிகளின் அடிப்படையில், நோயாளி ஒருவரின் மிகவும் சிக்கலான நேரம் அவசர நிலைமை ஏற்பட்டு முதல் 4 மணித்தியாலங்களாகுமென வைத்தியர்கள் நிரூபித்துள்ளதுடன் அது ‘‘தங்க மணித்தியாலங்கள்’’ எனவும் அறியப்பட்டுள்ளது. இதனால், நோயாளி ஒருவரினை வைத்தியசாலை சேவைகளின் நடமாடும் சேவைக்கு போக்குவரத்து வாகனமொன்றிலிருந்து அம்புலன்ஸ் வாகனமாக மாற்றுவது அம்புலன்ஸ் சேவையின் பிரதான பங்காகும்.

நோயாளி ஒருவரை வைத்தியசாலை முன்பராமரிப்புக்கு அல்லது எவ்வித பாதிப்புமற்ற வகையில் இடம் மாற்றம் செய்வது என்பதற்காக 100 அம்புலன்ஸ்களை வழங்குகின்ற கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதுடன் குறிப்பீடு செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்கள் சிறுவர் பராமரிப்பு என்பன முன்னெடுக்கப்பட்டதுடன், வைத்தியசாலைகளில் மருத்துவர் அல்லது தாதிமாரிடம் குறித்த நோயாளி பாரம்படுத்தப்பட்டு உயர் தொழில் முறைமையில் அவருக்கான சிகிச்சை வழங்கப்படுவதுடன் சமூகத்தில் பங்களிப்புச் செய்யும் ஒருவராகவும் மாற்றப்படுகின்றார். இக்கருத்திட்டத்தில் வழங்கப்பட்ட அம்புலன்ஸ்கள் வசதியானவையாகவும் சுகாதார பராமரிப்புச் சிகிச்சைக்காக நோயாளியினை எடுத்தச் செல்ல முடியுமான வகையிலும் அவசர மருத்துவ உதவியாளர் இந்நாட்டில் சிறுவர் மரணத்தினைக் குறைப்பதற்கும் உதவியாகவுள்ளது.

இக்கருத்திட்டத்திற்கான மொத்தச் செலவினம் 9.8 மில்லியன் யூரோக்களாகும். இக்கருத்திட்டத்திற்கான நிதியானது அவுஸ்திரிய மென் கடன் திட்டத்தின்கீழ் பூச்சிய வட்டி வீதத்தில் வழங்கப்பட்டுள்ளது.

# ஐக்கிய நாடுகள் மற்றும் தொழிநுட்ப உதவிகள் பிரிவு

## ஐக்கிய நாடுகள் முகவராண்மைகள்

வெளிநாட்டு வளத் திணைக்களத்தின் ஐக்கிய நாடுகள் சபை மற்றும் தொழில்நுட்ப உதவிகள் பிரிவானது திணைக்களத்தில் காணப்படும் பல பிரிவுகளில் மிகவும் பல்வகைக்குட்பட்ட ஒரு பிரிவாகும். இது ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் காணப்படும் பல நிறுவனங்களினூடாக நாட்டின் அபிவிருத்தி முயற்சிக்கு உதவும் முகமாக பல்வேறுபட்ட கருத்தரங்குகள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்கள் அமுல்படுத்துவதற்குத் தேவையான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளை பெற்றுக் கொள்வதால் ஒருங்கிணைந்து செயற்படுகின்றது. இதற்கு மேலதிகமாக வெளிநாட்டுப் பயிற்சி நெறிகளை பெற்றுக் கொடுத்தல் மற்றும் அபிவிருத்திப் பங்குகளினால் பெற்றுக் கொடுக்கப்படும் தொண்டர் சேவைகளையும் பெற்றுக் கொள்வதில் பங்களிப்புச் செய்கின்றது.

ஐக்கிய நாடுகள் சபையானது அதன் இலங்கையிலுள்ள வதிவிடக் காரியலயத்தினூடாக இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து ஒவ்வொரு ஐந்து வருடங்களுக்குமாக தயாரிக்கப்படுகின்றது. "அபிவிருத்தி உதவிகள் வேலைத்திட்டத்தின்" கீழ் அடையாளம் காணப்படும் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதினூடாக இலங்கை அரசாங்கத்துடன் ஆதரவளிக்கின்றது. இவ்வேலைச் சட்டகமானது ஐக்கிய நாடுகளின் கீழ் உள்ள ஒவ்வொரு தனிப்பட்ட நிறுவனங்களும் தமது குறித்த நாட்டுக்கான நிகழச்சித் திட்டத்தினை பொருத்தமான இலக்குகள் மற்றும் விரிவான அமுல்படுத்தல் திட்டத்துடன் தயாரிப்பதற்கு வழிகாட்டுவதோடு, திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் படுத்தும் போது இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கான உபாய வழிகாட்டலையும் வழங்குகின்றது.

ஐக்கிய நாடுகள் மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கும் இடையிலான தற்போதைய பங்குபற்றுதலானது ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி வேலைச் சட்டகத்தின் (ருளேனுகு 2018-2022) அடிப்படையில் அமைந்துள்ளது. இது ஐக்கிய நாடுகளுக்கு இலங்கை அரசாங்கத்துடன் தேசிய முன்னுரிமைகளுக்கு உட்பட்டதாக செயற்படுத்துவதற்கான முழுமையான வேலைச் சட்டகத்தை வழங்குகின்றது.

### இலங்கை அரசாங்கத்திற்கும் ஐக்கிய நாடுகளுக்கும் இடையே பின்வரும் சட்டங்கள் 2018 இல் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

| ஐ.நா. நிறுவனம் | திட்டம் | ஐ.அ.டொ. (மில்லியன்) |
|---|---|---|
| உலக உணவுத் திட்டம் | நாட்டுக்கான உபாயத்திட்டம் 2018-2022 | 46.83 |
| விவசாய அபிவிருத்தி சர்வதேச நிதியம் | சிறியளவிலான விவசாய வியாபார பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்தினை அமுல்படுத்தல். | 6.18 |
| ஐ.நா. சனத்தொகை நிதியம் | நாட்டுக்கான நிகழ்ச்சித் திட்டம் 2018-2022 | 4.00 |
| உணவு விவசாய நிதியம் | இலத்திரனியல் விவசாயத்திற்கான சூழலை உறுதிப் படுத்துதல், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினூடாக விவசாயத்திற்கான தீர்வுகள் | 0.10 |
| அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் காரியாலயம் | கிளிநொச்சி, புத்தளம் மற்றும் மன்னார் மாவட்டங்களில் மீள் திரும்பும் அகதிகள் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியளித்தல். | 0.01 |


இவற்றிற்கு மேலதிகமாக ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியம் மற்றும் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதியம் என்ற நாட்டிற்கான நிகழ்ச்சித்திட்ட நடவடிக்கைத் திட்டம் 2018-2022 ஐக்கிய நாடுகளின் உபாய அபிவிருத்தி வேலைச்சட்டகத்திற்கு அமைவாக இலங்கை அரசாங்கத்திற்கும் ஐக்கிய நாடுகளின் துணை அரசாங்கத்திற்குமிடையில் 2017 கைச்சாத்திடப்பட்டதாகும். 2018-2022 காலப் பகுதியில் உணவு மற்றும் விவசாய அமைப்பின் மூலம் நிதியளிக்கப்படும் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை அமுல் படுத்துவதற்கான நாட்டுக்கான நிகழ்ச்சித் திட்ட வேலைச் சட்டகமானது உணவு மற்றும் விவாசய அமைப்பு மற்றும் இலங்கை அரசாங்கத்திற்குமிடையில் கைச்சாத்திடப்பட்டது. இந்நாட்டுக்கான நிகழ்ச்சித்திட்ட வேலைச் சட்டகத்தை அமுல்படுத்துவதற்கு ஐக்கிய அமெரிக்க டொலர் 28 மில்லியன் தேவைப்படுகின்றது.





நாட்டுக்கான உபாயத் திட்டம் 2018-2022 இலங்கை அரசாங்கம் மற்றும் உலக உணவுத் திட்டத்திற்கும் இடையே 2018.07.19 இல் நிதி அமைச்சில் கைச்சாத்திடப்பட்டது. ஐக்கிய நாடுகள் நிலைபேரான அபிவிருத்தி இலக்குகளை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் அரசாங்கத்தின் தூர நோக்கு 2025 மற்றும் பொது முதலீட்டுத் திட்டம் 2017-2020 குறிப்பிடப்பட்டுள்ள அரச முன்னுரிமைகளை அமுல் படுத்துவதற்கு இது உதவும். நாட்டுக்கான உபாயத் திட்டமானது பின்வரும் நான்கு உபாயகரமான வெளியீடுகளை அடைந்து கொள்வதற்கு எதிர்பார்க்கின்றது.

## அர்ப்பணிப்புகள் மற்றும் செலவுகள்

2018 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகளினால் கிடைக்கப் பெற்ற உதவிகளானது பிரதானமாக நிவாரணங்கள் புனர்வாழ்வுகள் மற்றும் மீள் கட்டமைப்பு நடவடிக்கைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. விவசாய உற்பத்தித்திறன் மேம்பாடு, மீன்பிடி அபிவிருத்தி நோக்காய்க் கொண்ட கருத்திட்டங்களினூடாக சமூகம் மற்றும் மக்கள் நலங்களில் கவனம் செலுத்தி முதலீடு செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் கிராமிய மக்களின் வாழ்வாதார மேம்பாடு, சிறுவர் மற்றும் தாய் சேய் நல மேம்பாடு, ஆரம்ப குழந்தைப் பருவ அபிவிருத்தி மற்றும் ஆரம்பக் கல்வி, கிராமிய அபிவிருத்தி, அணர்த்த நிவாரனம் பெற்றுக் கொடுத்தல், சூழல் பாதுகாப்பு மற்றும் பெண்கள் விவகாரங்களில் கவனம் செலுத்தப்பட்டன. கிடைக்கப் பெறும் தகவல்களின் படி மொத்த செலவுகளில் பிரதானமாக விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம், சிறுவர் நிதியம் மற்றும் உலக உணவுத் திட்டம் என்பன கூடிய பங்களிப்பினை பதிவ செய்துள்ளன. விசேடமாக சிறுவர் மற்றும் தாய் சேய் நலன் கழிவு நீர் மற்றும் துப்பரவு ஏற்பாடுகளில் கூடுதல் செலவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.




***குறிப்பு –*** *1. வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தினூடாக மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட அர்ப்பணிப்பு, பகிர்வு உள்ளடங்களாக*


*2.. ஐ.நா. சனத்தொகை நிதியம் மற்றும் உலக உணவுத் திட்ட மாணியம் என்பவற்றின் தாமத அர்ப்பணிப்பும் உள்ளடக்கப்பட்டுள்ளது.*

## 2018 இல் அமுல்படுத்தப்படுகின்ற முக்கியமான கருத்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள்/நடவடிக்கைகள்

| ஐ.நா. நிறுவனம் | திட்டம் | மானியம் /கடன் |
|---|---|---|
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | சிறியளவிலான விவசாய வியாபார பங்குடமை நிகழ்ச்சித்திட்டத்தினைச் (ளுஅயடடாழடனநச யுபசழைரளவைநைளள ீயசவநெசளாip -ளுயுீ) செயற்படுத்தல் | கடன் |
| | சிறியளவிலான தேயிலை மற்றும் இறப்பர் தோட்டங்களை புத்துயிராக்குதல் | கடன் |
| உலக உணவு நிகழ்ச்சித்திட்டம் | நாட்டுக்கான உபாயத் திட்டம் 2018-2020 | மானியம் |
| | இலங்கை மகாவலி ஆற்றுப் படுக்கையில் வசிக்கும் வாழ்விழந்த விவசாய சமூகச் சீர்கேடு நிலை மாற்றங்களினால் ஏற்படும் தாக்கங்களில் இருந்து பாதுகாத்தல். | மானியம் |
| ஐ.நா. அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் | உயிரியல் பல்வகைத்தன்மையின் பாதுகாப்பினை மேம்படுத்தல். | மானியம் |
| | உலக சுற்றாடல் அக்கறைகள் மற்றும் சிறந்த நடைமுறைகளை உறுதிப்படுத்தல். | மானியம் |
| ஐ.நா. கைத் தொழில் அபிவிருத்தி நிறுவனம் | மினிமடா சமவாய ஆரம்ப மதிப்பீடு | மானியம் |
| | இலங்கையில் பொலிகுளோரீன் கழிவுகள் அசுத்தமடைந்துள்ள உபகரணங்கள் சுற்றாடலுக்கு பொருத்தமான முறையில் முகாமை செய்தல் மற்றும் ஒழித்தல். | மானியம் |
| உணவு விவசாய நிதியம் | இலத்திரனியல் விவசாய சூழல் மற்றும் தகவல் தொழில்நுட்ப விவசாய தீர்வுகளை உறுதிப்படுத்துதல். | மானியம் |
| | விவசாய பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டம். | மானியம் |
| | உற்பத்தித் திறன் குறைவடைந்த விவசாயக் காணிகளை புனரமைத்தல். | மானியம் |
| | தேசிய உயிரியல் பாதுகாப்பு வேலைச் சட்டகத்தினை அமுல்படுத்துதல். | மானியம் |
| | நிலத்திற்குப் பொருத்தமான உர முகாமை அபிவிருத்தி | மானியம் |
| | புதுமையான நல்-மீன் பன்னை முகாமையினை ஊக்குவித்தல் | மானியம் |
| | வடிவமைப்பதற்கான தொழில்நுட்ப உதவி | மானியம் |
| ஐ.நா. சிறுவர் நிதியம் | 2018 ஆம் ஆண்டிற்கான வேலைச் சட்டகம் | மானியம் |
| ஐ.நா. சிறுவர் நிதியம் | 2018 ஆம் ஆண்டிற்கான வேலைச் சட்டகம் | மானியம் |
| அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் காரியாலயம் | கிளிநொச்சி, புத்தளம், மன்னார் மாவட்டங்களில் மீள் திரும்புவர்களுக்கு அவர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு உதவுதல் | மானியம் |

# தொழில்நுட்ப உதவி

வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகளை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கான வசதிகளை வழங்கி, அதன் மூலம் அரச துறையில் மனிதவள மேம்பாட்டுக்கு பங்களிப்புச் செய்வது, தொழில்நுட்ப உதவிப் பிரிவின் பிரதான பொறுப்பாகும். அதன்பிரகாரம், வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகளை வெளிப்படைத் தன்மையுடன் நிர்வகிப்பதற்காக அபிவிருத்திப் பங்குதாரர்கள் மற்றும் நிரல் அமைச்சுக்கள்.்.முகவர் நிறுவனங்கள் என்பனவற்றினை ஒருங்கிணைத்து தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான மையப் புள்ளியாக இப்பிரிவு செயல்படுகிறது.





அதற்கமைய, 2018 ஆம் ஆண்டில் ஏறத்தாள 1,734 வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புகளை பெற்றதன் மூலம் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் உயர்ந்த செயலாற்றுகையினை அடைந்து வெற்றி பெற்றுள்ளதோடு முன்னைய ஆண்டைவிட இது ஏறக்குறைய 11 சதவிகித அதிகரிப்பினைப் பிரதிபலிக்கிறது. சுகாதாரம், விவசாயம், கால் நடை வளர்ப்பு, கைத்தொழில், உட்கட்டமைப்பு, சுற்றுச் சூழல், கல்வி, அனர்த்தமுகாமை, பொதுநிர்வாகம் போன்ற பரந்தளவிலான பல்வேறு துறைகளை இப் பயிற்சித் திட்டங்கள் உள்ளடக்கியுள்ளன.

**அபிவிருத்திப் பங்காளர்களினால் வழங்கப்பட்ட வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்களின் எண்ணிக்கை - 2018**


| பங்குதாரர் | நிகழ்ச்சித் திட்டங்களின் எண். | | பெறப்பட்ட பரிந்துரைகளின் எண் | | தெரிவுசெய்யப்பட்ட அலுவலர்களின் எண். | |
|---|---|---|---|---|---|---|
| | குறுங்கால | நெடுங்கால | குறுங்கால | நெடுங்கால | குறுங்கால | நெடுங்கால |
| சீனா | 243 | 1 | 1,217 | 2 | 1,038 | 2 |
| இந்தியா | 166 | 1 | 524 | 1 | 183 | - |
| கொரியா | 33 | 25 | 191 | 66 | 135 | 11 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 55 | - | 174 | - | 131 | - |
| யப்பான் | 73 | 12 | 309 | 46 | 93 | 17 |
| சிங்கப்பூர் | 26 | - | 245 | | 29 | - |
| மலேசியா | 15 | - | 58 | | 22 | - |
| தாய்லாந்து | 27 | 19 | 149 | 6 | 21 | - |
| கொழும்புத் திட்டம் | 10 | - | 26 | | 15 | - |
| அவுஸ்திரேலியா | - | 1 | - | 36 | - | 36 |
| இஸ்ரேல் | 2 | - | 3 | | 1 | - |
| மொத்தம | 650 | 59 | 2,896 | 157 | 1,668 | 66 |

2018 ஆம் ஆண்டில் அதிகளவிலான குறுங்காலப் பயிற்சி வாய்ப்புக்களை சீன அரசாங்கம் வழங்கியுள்ளது. இது மொத்தப் பயிற்சி வாய்ப்புக்களில் கிட்டத்தட்ட 62 சதவிகிதமாகும். அதனைத் தொடர்ந்து முறையே இந்தியா (11 சதவிகிதம்), கொரியா மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன (8 சதவிகிதம்) என வழங்கியுள்ளது.




## அபிவிருத்திப் பங்காளர்களின் பங்களிப்புக்கள்


### சீன அரசாங்கம்





அதிகளவிலான பாடவிதானங்களுடன் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்கி, அரச துறை அலுவலர்களைப் பயிற்றுவிப்பதற்காக சீன அரசாங்கம் படிப்படியாக அதன் ஒத்துழைப்பினை அதிகரித்துள்ளது. சீனாவில் வெளிநாட்டுப் பயிற்சியினைப் பெற்றுக் கொள்வதற்காக 2018 ஆம் ஆண்டில் 1,000 இற்கும் அதிகமான அலுவலர்கள் தெரிவுசெய்யப்பட்டனர். இது முன்னைய வருடத்தினை விடவும் 15 சதவீத அதிகரிப்பாகும்.

## கொரிய அரசாங்கம்

2013 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரையில் கொரியாவின் சர்வதேச ஒத்துழைப்பு அமைப்பு (KOIKA) மூலம் கொரிய அரசாங்கம் ஏறத்தாள 753 வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்கியுள்ளது.




## யப்பானிய அரசாங்கம்





யப்பான் அரசாங்கம், யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனமான (JICA) மூலம் ஆண்டுதோறும் குறுகிய கால மற்றும் நீண்ட கால பயிற்சித் திட்டங்களை வழங்குகின்றது. இதன் மூலம் அவர்களது அபிவிருத்தி அனுபவத்திலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்வதற்கு இயலுமாக்கும் வகையில் பயிற்சிகளை வழங்குவதற்கும், ஆக்கபூர்வமான தீர்மானங்களை எடுப்பதற்காகவும், சிறந்த, தரமான, வினைத்திறனான சேவைகளை வழங்குவதற்கும் பயிலுநர்களை பயிற்றுவிக்கிறது.

### விஞ்ஞானத்தில் யப்பான் - ஆசிய இளைஞர் பரிமாற்று நிகழ்ச்சித்திட்டம் (சகுரா)


யப்பானிய பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் தனியார் கம்பனிகளில் சிறந்த யப்பானிய விஞ்ஞான தொழில்நுட்பத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு ஆசிய இளைஞர்களின் ஆர்வத்தினை அதிகரிக்கும் நோக்கத்துடன் யப்பானிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகவராண்மையானது 2018 இல் சகுரா விஞ்ஞான நிகழ்ச்சித்திட்டத்தில் பங்குபற்றுவதற்கு உயர் கல்லூரி மாணவர்கள் பத்து பேர் மற்றும் இரண்டு மேற்பார்வையாளர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கியுள்ளது.

## இந்திய அரசாங்கம்

சுகாதாரம், விவசாயம், தொழில்முயற்சி மற்றும் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள், நிதி மற்றும் கணக்கீடு, ஆங்கில மொழி, தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஏனைய பிற துறைகளோடு சம்பந்தப்பட்ட பல பயிற்சிதிட்டங்களை இந்திய அரசாங்கம் வழங்குகிறது.



## அவுஸ்திரேலிய அரசாங்கம்




அவுஸ்திரேலியாவிலுள்ள முக்கிய பல்கலைக்கழகங்களில் முதுகலை பட்டப்படிப்புகளை பின் தொடருவதற்காக இலங்கையிலுள்ள அரச மற்றும் தனியார் துறை அதிகாரிகளுக்கு ஆஸ்திரேலிய அரசாங்கம் வாய்ப்புகளை வழங்கிவருகிறது. அதற்கமைய, பொருளாதார அபிவிருத்தி, நல்லாட்சி மற்றும் பாலினம் போன்ற துறைகளில் அவுஸ்திரேலிய அரசாங்கம் 2018 ஆம் ஆண்டில் 36 வாய்ப்புகளை வழங்கியுள்ளது.

## ஆசிய அபிவிருத்தி வங்கி

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் (யுனுடீ) ஏற்பாடுசெய்யப்பட்ட வெளிநாட்டு பயிற்சிகள் 2-8 நாட்கள் கருத்தரங்குகள் மற்றும் கருத்துக்களங்களாக அமையப்பெற்றதோடு அவை முக்கியமாக சிரேஷ்ட நிலை அதிகாரிகளை இலக்காக கொண்டமைந்திருந்தன. பதிவுகள் அடிப்படையில், 2018 ஆம் ஆண்டில் சுற்றுச்சூழல், வணிகம், நிதி, மூலதனச் சந்தை, படுகடன் முகாமை, பொதுத்துறை சவால்கள் மற்றும் சமூக பாதுகாப்பு போன்ற துறைகளில் 131 அதிகாரிகளுக்கு வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இலங்கையில் நிபுணத்துவம் பெற்றுள்ள நிபுணர்களின அறிவினை ஆசிய அபிவிருத்தி வங்கி வளவாளராகப் பயன்படுத்துகிறது.


## தன்னார்வலர்களின் சேவைகள்

தொழில்நுட்ப உதவிப் பிரிவானது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு அப்பால் அமைச்சுக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கையினை அடிப்படையாகக் கொண்டு நிரல் அமைச்சுக்களுக்கான வெளிநாட்டு நிபுணர்கள் மற்றும் தன்னார்வலர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கான ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளையும் வசதிகளையும் வழங்குகிறது. அதற்கமைய, பொருத்தமான நிபுணர்கள் மற்றும் தன்னார்வலர்கள் அடையாளங்காணப்பட்டுள்ளதோடு அவர்களை ஆட்சேர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளும் தற்பொழுது இடம்பெறுகின்றன. 2018 ஆம் ஆண்டில் கொரியா, யப்பான், கனடா மற்றும் அவுஸ்திரேலியா போன்ற நாடுகளிலுருந்து முறையே 69,33,14, மற்றும் 5 தன்னார்வலர்களின் சேவைகளை இலங்கை அரசாங்கம் பெற்றுக்கொண்டுள்ளது.

## சர்வதேச தன்னார்வலர்கள் மீதான வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பங்களிப்பு

- பல்வேறுபட்ட முகவர் நிறுவனங்களுக்கு சர்வதேச தன்னார்வலர்களைப் பெற்றுக் கொள்வதற்காக ஒருங்கிணைப்புச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.
- அடையாளங் காணப்பட்ட தன்னார்வலர்களுக்கு நுளைவு விசாவினை வழங்கல்.
- தன்னார்வலர்களுக்கு வதிவிட விசாக்களை வழங்கல்.
- தன்னார்வலர்களின் சேவைகள தேவையேற்படின் நீடித்தல்.
- தன்னார்வலர்களின் பணிகளை கண்காணித்தல்.
- தன்னார்வலர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குதல்.

## 2018 ஆம் ஆண்டில் பெறப்பட்ட தன்னார்வலர்களின் சதவீதம்




## முக்கிய குறிப்புக்கள் - 2018

### *யப்பான் அபிவிருத்தி புலமைப்பரிசில் நிகழ்ச்சித்திட்டம் (JDS)*

- மனிதவள அபிவிருத்தி புலமைப்பரிசிலுக்கான யப்பானிய மானிய உதவித் திட்டத்திற்கான (துனுளு) மூன்றாவது வேலைச் சட்டகம் (2018-2021) ஆனது 2018 ஆம் ஆண்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அதற்கமைய, முதலாவது குழுவிற்கு வசதிவாய்ப்புக்களை ஏற்படுத்திக்கொடுக்கும் வகையில் மனிதவள அபிவிருத்தி புலமைப்பரிசிலுக்கான யப்பானிய மானய உதவித் திட்டத்திற்கான (துனுளு) அமைப்பானது யென் 265 மில்லியனினை (கிட்டத்தட்ட ரூபா 374 மில்லியன்) மானிய உதவியாக வழங்கியுள்ளது.

### *இன்டர்நெசனல் சாயிமவுல் போரம்*

- இன்டர்நெசனல் சாயிமவுல் போரம் 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 12 ஆம் திகதி இலங்கையில் நடைபெற்றது.

### *அறிக்கையிடல் அமர்வுகள்*

- துனுளு மற்றும் முமுஜஊயு உதவியின் கீழ் முதுகலைமானிப் பட்டத்தினைப் பூர்த்திசெய்து விட்டு நாடு திரும்புபவர்களுக்கான அறிக்கையிடல் அமர்வுகள் இரண்டு 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 23 ஆம் திகதியும் மற்றும் 2018 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14 ஆம் திகதியும் இடம்பெற்றன.

### *தகவல் அமர்வுகள்*

- 2019 ஆம் ஆண்டுக்காக அவுஸ்திரேலியப் புலமைப்பரிசில்கள் தொடர்பாக அலுவலர்களை விழிப்பூட்டுவதற்கான தகவல் அமர்வொன்று 2018 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 09 ஆம் திகதி நடைபெற்றது.

### *தன்னார்வலர் கூட்டு ஒத்துழைப்பு*

- சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் பிரதிநிதிகளுடன் 2018 ஆம் ஆண்டில் ஜைக்கா தன்னார்வலர்களாக வருகை தந்தவர்களுக்காக 12 உத்தியோகபூர்வ வைபவங்கள் இடம்பெற்றன.
- "இலங்கையில் தன்னார்வலர் நிகழ்ச்சித் திட்டங்களில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பங்களிப்பு" என்ற தலைப்பில் கொய்க்கா தன்னார்வலர்களுக்காக 04 விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்டங்கள் 2018 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டன.
- ஜைக்கா மற்றும் கொய்க்கா தன்னார்வலர்களுக்காக 100 அடையாள அட்டைகளை விநியோகித்தல்.

### *இன் கன்டிரி பெலோசிப் நிகழ்ச்சித் திட்டம்*

- சீன அரசாங்கத்துடன் கூட்டிணைந்து கொழும்பு நகரில் 'தொழிற் கல்வி' என்ற தலைப்பிலும் 'சுதந்திர வர்த்தக வலய முகாமை' என்ற தலைப்பிலும் இரண்டு இன் கன்டிரி பெலோசிப் நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டுள்ளன.

# மூலதனச் சந்தை மற்றும் முதலீட்டுப் பிரிவு

அபிவிருத்திக் கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக உள்நாட்டு வங்கிகளிடமிருந்து நிதியளிப்புக்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் சர்வதேச சந்தைகளிலிருந்து வெளிநாட்டு நாணயக் கடன்களைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் என்பன மூலதனச் சந்தைப் பிரிவின் பிரதான பொறுப்பாகக் காணப்படுகிறது. மேலும், அரசாங்கத்தின் நிதித் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்காக சர்வதேச சந்தையினை அணுகுவதற்கான மிகப் பொருத்தமான சந்தர்ப்பத்தினை அடையாளங்காணல் மற்றும் சர்வதேச படுகடன் மூலதனச் சந்தை நிலவரங்களைக் கண்காணித்தல் என்பனவும் இப்பிரிவின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற முக்கிய பணிகளாகக் காணப்படுகின்றன.

## உள்நாட்டு வங்கிகளிடமிருந்து நிதி திரட்டுதல்

முன்னுரிமைப் பாதைகளைப் புனரமைத்தல், மற்றும் அவற்றினை மேம்படுத்தல் போன்ற நடவடிக்கைகளுக்காக 64 கருத்திட்டங்களுக்கு நிதியளிப்புச் செய்வதற்காக ரூபா 151.7 பில்லியன் வரையில் உள்நாட்டு வங்கிகளிடமிருந்து நிதிகளைத் திரட்டுவதற்காக வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது. அதன் பிரகாரம், 2018 ஆம் ஆண்டின் இறுதியிளவில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு ரூபா 149.6 மில்லியன் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதோடு, அதற்கமைய 64 வீதி புனரமைப்பு மற்றும் மேம்பாட்டுக் கருத்திட்டங்களும் பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. அத்துடன், வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்ற இம்முன்னுரிமை வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு மேலதிகமாக 3 வெளிநாட்டு நிதியளிப்புக் கருத்திட்டங்களுக்கு நிதியளிப்புச்செய்வதற்காக உள்நாட்டு வங்கிகளிடமிருந்து நிதி திரட்டுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டது. கொழும்பு கட்டுநாயக்க அதிவேகப் பாதைக் கருத்திட்ட செயற்பாட்டு பரப்பெல்லையில் ஏற்பட்ட மாற்றங்களைச் செயற்படுத்துவதற்கான நிதி வசதிகள் என்றடிப்படையில் ஐ.அ.டொ. 44.7 மில்லியனினை வழங்குதல், வெளிச் சுற்றுவட்ட அதிவேகப் பாதை கட்டம் ஐஐஐ இனை கடவத்தை முதல் கெரவலபிட்டிய வரையில் நிர்மானிப்பதற்கான மேற்பார்வைப் பணிக்காக மதியுரைச் சேவைகளை வழங்குவதன் பேரில் நிதி வசதிகளை வழங்கவதற்காக ரூபா 1,810 மில்லியனினைப் வழங்குதல் மற்றும் மத்திய அதிவேகப் பாதைக் கருத்திட்டத்தின் ஐ ஆம் கட்டத்திற்கான மதியுரைச் சேவைகளை வழங்குவதற்காக நிதிளிப்பச்செய்வதற்காக ரூபா 2,551 மில்லியனினை வழங்குதல் என்பனவும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மத்திய அதிவேகப் பாதைக் கருத்திட்டம் அரசாங்கத்தின் முன்னணிக் கருத்திட்டங்களில் ஒன்றாகக் காணப்படுவதன் காரணமாக அதன் இரண்டாம் கட்டத்திற்கு நிதி திரட்டுவதற்காக உள்நாட்டு வங்கிகள் அணுகப்பட்டன. மீரிகம முதல் குருணாகல் வரையான அதிவேகப் பாதைக் கருத்திட்டத்தின் ஐஐ ஆம் கட்டத்தின் முழு மொத்த நீளம் 39.3 கிலோ மீற்றறாகும். மத்திய அதிவேகப் பாதைக் கருத்திட்டத்தில் நுளைவதற்கான மீரிகம, நாகலகமுவ, பொதுஹர, தம்பொக்க மற்றும் குருணாகல் போன்ற பரதேசங்களில் கட்டணம் அறவிடும் நிலையங்கள் உள்ளடங்கலாக 5 இடைமாறல் நிலையங்கள் தாபிக்கப்படவுள்ளன. கருத்திட்டத்தின் ஒப்பந்தச் செயற்பாடானது 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளதோடு, ஒவ்வொரு ஒப்பந்தப் பிரிவுக்குமான தூரம் ஏறத்தாள 10 கிலோ மீற்றறாக வரையறைசெய்யப்பட்டள்ளது. மேலே குறிப்பிடப்பட்ட இரண்டாம் கட்டத்தின் நிருமாணப் பணிகள் 15 ஒப்பந்தக்காரர்களை உள்ளடக்கிய 04 உள்நாட்டு கூட்டுமுயற்சி ஒப்பந்தக்காரர்களின் இணைநிலை நிறுவனங்கள் மூலம் மேற்கொள்ளப்படுவதோடு காணி சுவீகரித்தல், சிவில் நிருமாணப் பணிகள் மற்றும் மேற்பார்வைக்கான மதியுரை சேவைகளை வழங்கல் என்பனவற்றிற்காக நிதியளிப்புச்செய்வதற்காக 2018 ஆம் ஆண்டின் இறுதியில் ரூபா 52.3 பில்லியன் கடன் நிதியானது மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, சம்பத் வங்கி மற்றும் இலங்கை வங்கி என்பனவற்றிடமிருந்து பெறப்பட்டுள்ளது. 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாத இறுதியில் கருத்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 55.2 சதவீதமாகக் காணப்பட்டதோடு, அதன் நிதி முன்னேற்றம் 44.3 சதவீமாகவும் பதியப்பட்டிருந்தது. மத்திய அதிவேகப் பாதைக் கருத்திட்டம் ஐஐ இன் நிருமாணப் பணிகளை 2019 ஆம் ஆண்டின் இறுதிளவில் பூர்த்திசெய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகிறது.

பாதுகாப்பான குடிநீர் வசதிகளை வழங்குதல் என்பதனை அரசாங்கம் முன்னுரிமைச் செயற்பாடு என அடையாளங் கண்டுள்ளதனால் 2014 ஆம் ஆண்டு முதல் தேசிய நீழ் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் 18 நீர் வழங்கல் கருத்தட்டங்களுக்கு நிதியளிப்புச் செய்வதற்காக உள்நாட்டு வங்கிகளிடமிருந்து ரூபா 71.5 பில்லியனினைக் கடனாகப் பெற்றுக்கொள்வதற்காக கடன் உடன்படிக்கைகளிலும் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

மேலும், மேலே குறிப்பிடப்பட்ட முன்னணி நீர்வழங்கல் கருத்தட்டங்களுக்கு மேலதிகமாக, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையானது, இந்தியாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வங்கியினால் நிதியளிப்புச்செய்யப்படுகின்ற அழுத்கம, மதுகம மற்றும் அகலவத்தை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம், பொலகஹவெல, பொதுஹர மற்றும் அலவ்வ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம், மற்றும் குண்டாசைலை, ஹாரகம் ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் போன்ற மூன்று நீர் வழங்கல் கருத்திட்டகளுக்குத் தேவையான நிதியினைத் திரட்டுவதற்காக உள்நாட்டு வங்கிகளை அணுகியுள்ளன.

## உள்நாட்டு வங்கிகளினால் நிதியளிப்புச் செய்யப்பட்ட நீர் வழங்கல் கருத்திட்டம் பற்றிய விபரம்

| நீர் வழங்கல் கருத்திட்டம் | ஒப்பந்தக்காரர் | வங்கி | செலவு *(ரூபா. மில்லியன்))* |
|---|---|---|---|
| கொழும்பு நகர் நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் ஐ இனைச் செயற்படுத்தல் | V.V. Karunaratne & Company | இலங்கை வங்கி | 2,792.07 |
| கொழும் நகர் கிழக்கு – பெகேஜ் ஐ (தியகம, பாதுக்க மற்றும் அண்டிய பகுதிகள்) | Access Engineering PLC | இலங்கை வங்கி | 5170.00 |
| பெந்தோட்டை நீர் வழங்கல் கருத்திட்டம் | K.D.A.Weerasinghe & Co (Pvt) Ltd | தேசிய சேமிப்பு வங்கி | 1239.47 |
| ருஹுணு புற நீர் விநியோகக் கருத்திட்டம் | K.D.A.Weerasinghe & Company (pvt) Ltd | கொமர்சல் வங்கி | 1,929.61 |
| அம்பாறை நீர் விநியோக வலையமைப்பு நீழ் வழங்கல் கருத்திட்டம் | Sunpower Construction (pvt)Ltd | தேசிய அபிவிருத்தி வங்கிஇஇலங்கை வங்கி,டி.எப்.சி.சிவங்கி | 6,848.06 |
| நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பச் சபையினால் வழங்கப்படுகின்ற குழாய் நீர் வழங்கல் சேவை பரப்பெல்லையினை விஸ்தரிப்பதற்காக 22 நீர் வழங்கல் கருத்திட்டங்களைச் செற்படுத்தல் | National Water Supply & Drainage Board | இலங்கை வங்கி | 3,499.00 |
| லக்கல நீர் வழங்கல் கருத்திட்டம் | Hovael, CML-MTD Joint Venture | ஹட்டன் நசனல் வங்கி | 4,495.87 |
| வில்கமுவ நீர் வழங்கல் கருத்திட்டம் | Hovael, CML-MTD Joint Venture | ஹட்டன் நசனல் வங்கிஇதேசிய அபிவிருத்தி வங்கி | 3,580.42 |
| கொழும்ப மாவட்டத்தின் நகர் கிழக்கு பகுதிக்கான நீர் வழங்கல் கருத்திட்டத்தின் ஐஐஐ ஆம் கட்டத் திட்டமான ஹோமாகம, பாதுக்க மற்றும் சீதாவக்க பிரதேச செயலகப் பிரிவின் கீழ் நீர் விநியோகத்திற்காக ர்னுீபு.்.னுஐ நீரக் குழாய்களைப் நிலக் கீழ் பதிக்கும் கருத்திட்டம் | Sierra Construction (Pvt) Ltd | இலங்கை வங்கி | 10,049.41 |
| ஊரகஸ்மங்ஹந்திய, கோணபிணுவல,திக்கும்புர மற்றும் வெலிகம நீர் வழங்கல் கருத்திட்டம் | Squire Mech Engineering (Pvt) Ltd | இலங்கை வங்கி, மக்கள் வங்கி | 1,754.78 |
| கொழும்பு மாவட்ட நகர் கிழக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் கட்டம் ஐஐ | Maga Engineering Ltd | இலங்கை வங்கி | 4,822.96 |
| கலகெதர ∴ மாவத்த கம நீர் வழங்கல் கருத்திட்டம் | Maga Engineering (pvt) Ltd | டி.எப்.சி.சி வங்கி | 3,126.24 |
| கொஸ்கம, அவிசாவெல்ல ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் | International Construction Consortium (pvt) Ltd | இலங்கை வங்கி | 1,382.43 |
| மெதிரிகிரிய நீர் வழங்கல் கருத்திட்டம் | Sanken Construction (Pvt) Ltd | இலங்கை வங்கி | 1,500.03 |
| எட்டம்பிடிய நீர் வழங்கல் கருத்திட்டம் | Tudawe Brothers (Pvt) Ltd. | மக்கள் வங்கி | 2,243.89 |
| இரத்தினபுரி பாரிய நீர் வழங்கல் கருத்திட்டம் | Subasinghe Contractors & Earth Movers-Finite Lanka (Pvt) Ltd. | இலங்கை வங்கி | 1,528.98 |
| கிறிதர நீர் வழங்கல் கருத்திட்டம் | Squire Mech Engineering (Pvt) Ltd | மக்கள் வங்கி | 513.28 |
| குண்டசாலை, ஹாரகம ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் | Pratibha Industries Limited | இலங்கை வங்கி | 3,378.00 |
| மாத்தறை கட்டம் ஐஏ நீர் வழங்கல் கருத்திட்டம் | Kolon-Samsung C&T JV | தேசிய அபிவிருத்தி வங்கி | ஐ.அ.டொ.76.83 மில்லியனுக்கு நிகரான ரூபா பொறுமதி ¸ ரூபா 2,448.81 மில்லியன் |
| அழுத்கம, மதுகம மற்றும் அகலவத்தை ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் | Ion Exchange India Limited | இலங்கை வங்கி | ஐ.அ.டொ.29.10 மில்லியனுக்கு நிகரான ரூபா பொறுமதி |
| பொல்கஹவெல, பொதுஹர மற்றும் அலவ்வ ஒருங்கிணைந்த நீர் வழங்கல் கருத்திட்டம் | Va Tech Wabag Limited | இலங்கை வங்கி | ஐ.அ.டொ.16.20 மில்லியனுக்கு நிகரான ரூபா பொறுமதி |

*மூலம்: வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை*

மேலே குறிப்பிடப்பட்ட கருத்திட்டங்களில் பெரும்பாலானவை நிதியளிப்புச் செய்வதற்காக நிறையளித்த சராசரி முதனிலைக் கடன் வீதத்திற்கு சேர்க்கப்பட்ட 2.25 வருடாந்த வட்டி சதவிகிதத்தின் பேரில் 2 ½ வருட சலுகைக் காலத்துடன் 14 ½ வருடங்களில் திருப்பிச் செலுத்தப்படுதல் வேண்டும் என்ற நிபந்தனையுடன் உள்நாட்டு வங்கிகளினால் நிதியளிப்புச் செய்யப்பட்டுள்ளன. இதில் சிறுநீரக நோயினால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களை உள்ளடக்குகின்ற நீர் வழங்கல் கருத்திட்டங்களுக்கு முன்னுரிமையளிக்கப்பட்டுள்ளது.

நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் நிதி நிலமையினைக் கவனத்திற்கொண்டு, அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு, 2016 ஆம் ஆண்டு சனவரி மாதத்தின் பின்னர் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் கிராமிய மட்டத்திலான கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகையின் 75%நகர மட்டத்திலான கருத்திட்டங்களைச் செயற்படுத்துவதற்கதக பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தொகையின் 50% என்பன சேவையாற்றல் செயற்பாடுகளுக்காக அரசாங்கத்தினால் மீள்கொடுப்பனவுசெய்யப்படவுள்ளன.

மேலும் 2018 ஆம் ஆண்டில் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையினால் வெளிநாட்டு நிதியளிப்பு மூலம் செயற்படுத்தப்படுகின்ற கருத்திட்டகளில் இலங்கை அரசாங்கத்தினால் பொறுப்பேற்கப்படவுள்ள எதிர்தரப்பு நிதியினைப் பொறுப்பேற்பதன் பேரில் மக்கள் வங்கியிடமிருந்து ரூபா 9,613 மில்லியன் கடனாகப் பெறப்பட்டது. அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டவாறு, மேற்குறித்த கடன் தொகையானது கருத்திட்டத்தின் பெறுமதியின் பேரில் பெறுமதிசேர் வரி மற்றும் சுங்கத் தீர்வைகள் என்பனவற்றினைச் செலுத்துவதற்காக பயன்படுத்தப்பட்டது.

அவ்வாறே, இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ள எதிரத்தரப்பு நிதியத்தின் பேரில் ரூபா 11,510 மில்லியன் பெறுமதியான கடனொறினைப் பெற்றுக்கொள்வதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் மக்கள் வங்கி அணுகப்பட்டுள்ளது.

**உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக அரசுடமைத் தொழில்முயற்சிகளுக்கு உள்நாட்டு வங்கிக் கடன்களை வங்கிக் கடன்வழங்கல் *(ரூபா பில்லியன்)***

| **அரசுடமைத் தொழில்முயற்சி, கருத்திட்டப் பெயர்** | வங்கி | 2018.12.31 அர்ப்பணிப்பு | 2018.12.31 அன்று மொத்தப் பகிர்வு |
|---|---|---|---|
| வீதி அபிவிருத்தி அதிகார சபை – முன்னுரிமை வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | இலங்கை வங்கி | 36.66 | 35.78 |
| | மக்கள் வங்கி | 14.59 | 14.45 |
| | தேசிய சேமிப்பு வங்கி | 55.37 | 55.27 |
| | ஹட்டன் நசனல் வங்கி | 28.26 | 27.63 |
| | கொமர்சல் வங்கி | 7.21 | 7.11 |
| | டி.எப்.சி.சி வங்கி | 1.33 | 1.31 |
| | தேசிய அபி. வங்கி | 8.35 | 8.13 |
| வீதி அபிவிருத்தி அதிகார சபை - கொழும்பு கட்டுநாயக்க அதிவேகப் பாதைக் கருத்திட்டம் | மக்கள் வங்கி | ஐ.அ.டொ 44.7 மில் | ஐ.அ.டொ 43.56 மில் |
| வீதி அபிவிருத்தி அதிகார சபை - வெளிச் சுற்றுவட்ட அதிவேகப் பாதைக் கருத்திட்டம் கட்டம் (நிர்மாண மேற்பார்வைப் மதியுரைச் சேவை நிதியளிப்பு) | இலங்கை வங்கி | 1.81 | 0.98 |
| வீதி அபிவிருத்தி அதிகார சபை - மத்திய அதிவேகப் பாதைக் கருத்திட்டத்தின் கட்டம் ஐ, நிருமாண மேற்பாரவைக்கான மதியுரைச் சேவைகள் | இலங்கை வங்கி | 2.55 | 0.23 |
| வீதி அபிவிருத்தி அதிகார சபை - மத்திய அதிவேகப் பாதைக் கருத்திட்டத்தின் கட்டம் ஐஐ, (காணி சுவீகரிப்பு உள்ளடங்கலாக) | மக்கள் வங்கிஇ தேசிய சேமிப்பு வங்கிஇ சம்பத் வங்கிஇ இலங்கை வங்கி | 52.33 | 52.33 |
| இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் - வேரஸ் கருத்திட்டம் | தேசிய சேமிப்பு வங்கி | 14.2 | 2.80 |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பச் சபை | தேசிய சேமிப்பு வங்கிஇ இல. வங்கி, மக்கள் வங்கி, ஹட்டன் நசனல் வங்கிஇ தேசிய அபிவிருத்தி வங்கிஇ டிஎப்சி.சி வங்கி, கொமர்சல் | 79.53 | 41.45 |
| நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மண்ட் (ளேடீஆ) – நஷனல் ஸ்கூல் ஒப் பிஸ்னஸ் மனேஜ்மண்ட் லிமிட்டெட் இற்கான உத்தேசப் பல்கலைகழக கட்டிடத் தொகுதியினை ஹோமாகமையில் நிர்மாணித்தல் | இலங்கை வங்கி | 8.60 | 8.59 |
| கொத்தலாவளை பாதுகாப்புப் பல்கலைக்கழகம் | தேசிய சேமிப்பு வங்கி | ஐ.அ.டொ. 201.6 மில். | ரூபா. 3.16 பில். அ.டொ.177.33 மில். |
| சிலோன் சிப்பிங் கோபரேசன் லிமிட்டெட் - 02 கப்பல்களைக் கொளவனவு (02 பனாமா பல்கர்ஸ்) | மக்கள் வங்கி | ஐ.அ.டொ. 80.7 மில். | ஐ.அ.டொ.80.7 மில் |
| உயர்கல்வி அமைச்சு – மொரட்டுவ பல்கலை தொழில்நுட்பவியல் நிறுவகத்தினை வேரொரு டிடத்திற்கு இடமாற்றல் மற்றும் அபிவிருத்தி செய்தல் | கொமர்சல் வங்கி ஹட்டன் நசனல் வங்கி | 10.29 | 10.26 |

*மூலம் : இலங்கை வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, ஹட்டன் நசனல் வங்கி, கொமர்சியல் வங்கி, டி.எப்.சி.சி வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி*

## சர்வதேச மூலதனச் சந்தையிலிருந்து வெளிநாட்டு நாணய நியதிக் கடன் வசதிகள்

2018 ஆம் ஆண்டில் குறித்த ஆண்டுக்காக இலங்கை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கடன் பெறுகை எல்லையினுள் வெளிநாட்டு நாணய நியதிக் கடன் வசதித் திட்டத்தின் கீழ் ஐ.அ.டொ.1,000 மில்லியன் பெறுமதியான கடன் தொகையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது. இக்கடன் பெறுகைக்கான ஏற்பாடுகள் வெற்றிகரமாகப் பூரணப்படுத்தப்பட்டதன் பின்னர் சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து 2018 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதத்தில் ஐ.அ.டொ.1,000 மில்லியன் பெறுமதியான கடன் வழங்கப்பட்டது

ஐ.அ.டொ. 1,000 மில்லியன் பெறுமதியான கடன் ஆறு மாத லண்டன் வங்கியிடை வட்டி விகித அடிப்படையில் நூற்றுக்கு 2.56 சதவீத வரையறையில் வருடாந்த வட்டியின் பேரிலும் நூற்றுக்கு 1.25 சதவீத முற்கொடுப்பனவுக் கட்டணம் மற்றும் மூன்று வருட சலுகைக் காலம் உள்ளடங்கலாக 8 வருட கால முதிர்ச்சிக் காலத்துடன் பெற்றுக்கொள்ளப்பட்டது. இக்கடன் வசதிகளுக்காக போட்டிச் சந்தையில் விலைமனு கோரப்பட்டதோடு, 04 உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வங்கிகள் மற்றும் நிதி முதலீட்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட 10 மாற்று நிதி முன்மொழிவுகள் மற்றும் தேர்வுகள் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டதன் பின்னர் சீன அபிவிருத்தி வங்கி இதற்காகத் தெரிவுசெய்யப்பட்டது.

## சர்வதேச அரசிறைமை முறிகளை விநியோகித்தல்

2018 ஆண்டு ஏப்ரல் மாதத்தில் 5 வருட முதிர்ச்சிக் காலத்துடன் கூடிய ஐ.அ.டொ.1,250 மில்லியன் மற்றும் 10 வருட முதிர்ச்சிக் காலத்துடன் கூடிய ஐ.அ.டொ. 1,250 மில்லியன் பெறுமதியான சர்வதேச அரசிறைமை முறிகள் வெளியிடப்பட்டன. இம்முறிகள் சம மதிப்புடன் 5.75% மற்றும் 6.75% என விலையிடப்பட்டது. இம்முறி விநியோகமானது 2007 ஆம் ஆண்டு முதல் இலங்கையினால் சர்வதேச நாணய முறிச் சந்தையில் விநியோகிக்கப்பட்ட பன்னிரெண்டாவது ஐக்கிய அமெரிக்க டொலர் முறி விநியோக தரநிலைக் குறியீடு என அடையாளப்படுத்தப்பட்டதோடு. இது வரையில் விநியோகிக்கப்பட்டுள்ள முறிகளில் இதுவே பாரியளவிலான கரைகடந்த முறி விநியோகமாகவும் கருதப்படுகின்றது.

மிகவும் சிறந்த பூகோள ரீதியான பன்முகத்தன்மையொன்றினை வெளிக்காட்டி 5 வருட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்ட, 66% முறிகள் ஐக்கிய அமெரிக்க மதலீட்டாளர்களுக்கும், 24% முறிகள் ஐரோப்பிய முதலீட்டார்களுக்கும் எஞ்சிய 10% மறிகள் ஆசிய முதலீட்டாளர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, 10 வருட முதிர்ச்சிக் காலத்தினைக் கொண்ட 65% முறிகள் ஐக்கய அமெரிக்க முதலீட்டாளர்களுக்கும் 29% முறிகள் ஐரோப்பிய முதலீட்டாளர்களுக்கும் எஞ்சிய 6% முறிகள் ஆசிய முதலிட்டார்களுக்கும் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டள்ளது.

**இலங்கை அரசிறைமை முறிகள் விநியோகம் பற்றிய விபரம்**

| பெயர் | விநியோகிக்கப்பட்ட திகதி | தரப்படுத்தல் | பெறுமதி (ஐ.அ.டொ. மில்) | கூப்பன் பெறுமதி (சதவீதத்தில்) | முதிர்வுக் காலம் (வருடங்கள்) | முதிர்வடையும் திகதி | 2018.12.31 அன்று விலை | 2018.12.31 அன்று விளைவு (சதவீதம் வீதம்) |
|---|---|---|---|---|---|---|---|---|
| SL'19 | 06/01/2014 | B1/B+/B+ | 1,000.0 | 6.000 | 5 | 14/01/19 | 100.00 | 5.83 |
| SL'19 | 07/04/2014 | B1/B+/B+ | 500.0 | 5.125 | 5 | 11/04/19 | 99.62 | 6.51 |
| SL'20 | 30/10/2010 | B1/B+/B+ | 1,000.0 | 6.250 | 10 | 04/10/20 | 97.88 | 7.57 |
| SL'21 | 27/07/2011 | B1/B+/B+ | 1,000.0 | 6.250 | 10 | 27/07/21 | 96.50 | 7.78 |
| SL'22 | 25/07/2012 | B1/B+/B+ | 1,000.0 | 5.875 | 10 | 25/07/22 | 94.62 | 7.77 |
| SL'22 | 11/07/2016 | B1/B+/B+ | 500.0 | 5.750 | 5.5 | 18/01/22 | 94.12 | 7.80 |
| SL'23 | 11/04/2018 | B1/B+/B+ | 1,250.0 | 5.750 | 5 | 18/04/23 | 92.75 | 7.77 |
| SL'25 | 28/05/2015 | B1/B+/B+ | 650.0 | 6.125 | 10 | 03/06/25 | 90.50 | 8.05 |
| SL'25 | 27/10/2015 | B1/B+/B+ | 1,500.0 | 6.850 | 10 | 03/11/25 | 93.62 | 8.08 |
| SL'26 | 18/07/2016 | B1/B+/B+ | 1,000.0 | 6.825 | 10 | 18/07/26 | 93.00 | 8.08 |
| SL'27 | 04/05/2017 | B1/B+/B+ | 1,500.0 | 6.200 | 10 | 11/05/27 | 88.75 | 8.08 |
| SL'28 | 11/04/2018 | B1/B+/B+ | 1,250.0 | 6.750 | 10 | 18/04/28 | 91.00 | 8.15 |

***மூலம்:*** *பாக்லேஸ் வங்கி, ஏச்எஸ்பிசி மறறும் சிடி வங்கி (விநியோகத்திற்கான இணை ஒழுங்குபடுத்தல் முகாமையானர்கள்)*

*மூ 2015 சனவரியில் இளைப்பாறல்*

# படுகடன் முகாமைத்துவப் பிரிவு

## படுகடன் முகாமைத்துவப் பிரிவின் பங்கு

- பொதுநலவாயச் செயலகப் படுகடன் முகாமைத்துவ பதிவு முறைமை (CS-DRMS) தரவு அடிப்படை என அழைக்கப்படும் படுகடன் முகாமைத்துவ முறைமைக்கான புதிய அர்ப்பணிப்புக்களின் விபரங்களைப் பதிவு செய்தல், படுகடன் / நன்கொடை அர்ப்பணிப்புக்களின் இரத்துச் செய்தல்கள், விரிவாக்கம், பெற்றுக் கொள்ளும் காலப்பிரிவுகளின் நீடிப்பு போன்ற தொடர்புடைய இன்னோரன்ன விபரங்களைப் புதுப்பித்தல்.

- கடன் உடன்படிக்கைகள் தொடர்பான பகிர்வுகள், கடன் மீள் கொடுப்பனவுகள், வட்டிக் கொடுப்பனவுகள், மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை பொதுநலவாயச் செயலகக் கடன் முகாமைத்துவ பதிவு முறைமைக்கு உட்படுத்தல்.

- பொதுநலவாயச் செயலகப் படுகடன் முகாமைத்துவ பதிவு முறைமையின் மதிப்பீடுகளுடன், நன்கொடை நிறுவனங்களினால் கோரப்பட்ட கொடுப்பனவுகளை ஒப்பிட்டுப் பார்த்தலும், இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்த வேண்டிய தொகையினை உரிய நேரத்தில் செலுத்துவது தொடர்பாக அவசியமான பரிந்துரைகளை முன் வைத்தலும்.

- கடன் உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட பொது நலவாய செயலகப் படு கடன் முகாமைத்துவ பதிவு முறைமை மதிப்பீடுகளுக்கும் மற்றும் நன்கொடையாளர்களின் கோரிக்கைகளுக்கும் இடையில் வேறுபாடுகள் இருக்கும் பட்சத்தில் குறிப்பிட்ட நன்கொடையாளர் பிரிவின் ஊடாக நன்கொடையாளர் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுக் கோரிக்கைகளுக்கு அவசியமான விளக்கங்களைப் பெற்றுக்கொள்ளலும்.

- புதிய கடன் அர்ப்பணிப்புக்களின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான சுருக்கத்தினைத் தயாரித்தலும், மற்றும் அவற்றை கடன் உடன்படிக்கைகளின் பிரதிகளுடன் இலங்கை மத்திய வங்கியின் பொருளியல் ஆய்வுத் திணைக்களத்துக்குச் சமர்ப்பித்தலும், கடன் / நன்கொடை உடன்படிக்கைகளின் பட்டியல் ஒன்றைப் பிரசுரித்தல்.

- படுகடன் புள்ளி விபரங்களைத் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்துக்கும் ஏனைய தொடர்புடைய நிறுவனங்களுக்கும் வழங்குதலும், பகிர்வுகள் தொடர்பாக (கருத்திட்ட வாரியான) பொதுநலவாயச் செயலகப் படுகடன் முகாமைத்துவ பதிவு முறைமையிலிருந்து தயாரிக்கப்பட்ட 814 அறிக்கைகளை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பொது இணையத்தளத்தில் வெளியிடல்.

- வெளிநாட்டுப் படு கடன் தொடர்பான செயலாற்ற அறிக்கை, வருடாந்த அறிக்கை, வரவு செலவுத்திட்ட வெளியீடு மற்றும் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு மற்றும் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் ஏனைய வெளியீடுகளைத் தயாரித்தல்.

- வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஏனைய பிரிவுகளினாலும், மற்றும் ஏனைய திறைசேரித் திணைக்களங்களினாலும் கோரப்பட்ட மத்திய அரசின் வெளிநாட்டுப் படு கடன் தொடர்பான அவசியமான பொருளாதார ஆய்வு ரீதியான அறிக்கைகளையும், தரவுகளையும் உரிய நேரத்திலும் திருப்திகரமான மட்டத்திலும் கிடைக்கச் செய்தலும்.

- மத்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் தொடர்பாக பாராளுமன்றத்தினால் கேட்கப்படும் கேள்விகளுக்கான பதில்களைத் தயாரித்தலும், கணக்காய்வாளர் நாயகத்தினால் கணக்காய்வு விசாரணைகளின் ஊடாக வெளிநாட்டுப் படுகடன் தொடர்பாக கேட்கப்படும் பிரச்சினைகளுக்கான விளக்கங்களை வழங்குதலும்.

- கௌரவ தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சருக்கும், மற்றும் கௌரவ நிதி அமைச்சருக்குமான வெளிநாட்டுப் படுகடனுடன் தொடர்புடைய அமைச்சரவை அவதானங்களைத் தயாரித்தல்.

- வெளிநாட்டுப் படு கடன் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பான விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் குறிப்பிட்ட பிரிவின் ஒத்துழைப்புடன் குறிப்பிட்ட அபிவிருத்திப் பங்காளர் நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு செயற்படல்.

- வெளிநாட்டு நிதியீடு மற்றும் படுகடன் தொடர்பாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் திறைசேரியின் செயலாளரிடம் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து மேற்கொள்ளப்படும் கோரிக்கைகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல்.

- நாட்டின் படுகடன் முகாமைத்துவத்தின் இயலளவினை விருத்தி செய்யும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கியின் வேண்டுகோளின் பேரிலும் பொதுநலவாயச் செயலகத்தின் சார்பில் வருகை தரும் தூதுவர் குழுக்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்

- உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் படுகடன் தரவுகளை பிரசுரிக்கும் நோக்குடன் காலாண்டு வெளிநாட்டுப் படுகடன் புள்ளி விபரங்களின் முன்னெடுப்புக்களின் ஊடாக உலக வங்கியினாலும், சர்வதேச நாணய நிதியத்தினாலும் கோரப்பட்ட தனிப்பட்ட படிவங்களில் வருடாந்த அடிப்படையில் வெளிநாட்டுப் படுகடன் தொடர்பான தரவுகளை வழங்கல்.

## 2018 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

- 2018 ஆம் ஆண்டு தொடர்பான பொதுநலவாயச் செயலகப் படு கடன் முகாமைத்துவ பதிவு முறைமை (CS-DRMS) தரவு அடிப்படையில் 57 புதிய அர்ப்பணிப்புக்கள் பதிவு செய்யப்பட்டதோடு, தொடர்ச்சியான திருத்தங்களுக்கு ஏற்ப திருத்தம் செய்யப்பட்டது.

- 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கடன் உடன்படிக்கைகள் தொடர்பான பகிர்வுகள், கடன் மீள் கொடுப்பனவுகள், வட்டிக் கொடுப்பனவுகள், மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை பொதுநலவாயச் செயலகக் கடன் முகாமைத்துவ பதிவு முறைமையில் பதிவு செய்தல்.

- நிலுவையாகவுள்ள மீள் கொடுப்பனவுகளையும், மற்றும் ஏனைய கட்டணங்களையும் உரிய நேரத்தில் மேற்கொள்ளும் நோக்குடன் பொதுநலவாயச் செயலகக் கடன் முகாமைத்துவ பதிவு முறைமையின் மதிப்பீட்டுப் பெறுமதிகள் மற்றும் கடன் உடன்படிக்கையின் ஏற்பாடுகளுடனும் ஆண்டு முழுதும் அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தும் மற்றும் ஏனைய கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளுக்கான பெறுமதிகளை ஒப்பிட்டுப் பார்த்து, வேறுபாடுகள் தொடர்பாக குறிப்பிட்ட பிரிவின் மூலம் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- நன்கொடையாளர்களின் கோரிக்கைகளுக்கும் எமது பதிவுகளுக்கும் இடையில் வேறுபாடுகள் இருக்கும் பட்சத்தில் குறிப்பிட்ட நன்கொடையாளர் பிரிவின் ஊடாக நன்கொடையாளர் நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுக் கோரிக்கைகளுக்கு அவசியமான விளக்கங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.

- 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட புதிய கடன் அர்ப்பணிப்புக்களுக்கான தவணைகள் மற்றும் நிபந்தனைகளுடன் கடன் மற்றும் நன்கொடை உடன்படிக்கைகளின் பட்டியலொன்றை தயாரித்தலும், வெளியிடலும்.

- தேவைப்படும் போது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஏனைய பிரிவுகளுக்கும், திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்துக்கும், மற்றும் ஏனைய திணைக்களங்களுக்கும் தேவையான படுகடன் புள்ளி விபரங்கள் வழங்கப்பட்டன

- பகிர்வுகள் தொடர்பாக (கருத்திட்ட வாரியான) பொதுநலவாயச் செயலகக் படுகடன் முகாமைத்துவ பதிவு முறைமையிலிருந்து தயாரிக்கப்பட்டு 814 அறிக்கைகளை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பொது இணையத் தளத்தில் பிரசுரிக்கப்பட்டன.

- 2018 ஆம் ஆண்டு காலப்பகுதியில், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு மற்றும் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு ஆகிய அமைச்சுக்களின் கீழ் வெளியிடப்பட்ட வெளிநாட்டுப் படுகடன் தொடர்பான செயலாற்ற அறிக்கைகள், வருடாந்த அறிக்கைகள், வரவு செலவுத் திட்ட வெளியீடுகள் மற்றும் ஏனைய வெளியீடுகள், தொடர்பான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டன.

- வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஏனைய பிரிவுகளினாலும் மற்றும் ஏனைய திறைசேரித் திணைக்களங்களினாலும் கோரப்பட்ட பல்வேறு பொருளாதார ஆய்வு அறிக்கைகளும் மற்றும் வெளிநாட்டுப் படுகடன் தொடர்பான தரவுகளும் உரிய நேரத்தில் தயாரிக்கப்பட்டு தொகுக்கப்பட்டன.

- அரசாங்கப் படுகடன் தொடர்பான 3 பாராளுமன்றக் கேள்விகளுக்கு பதில்கள் தயாரிக்கப்பட்டதோடு, வெளிநாட்டுப் படுகடன் தொடர்பான 9 கணக்காய்வு விசாரணைகளுக்கும் விளக்கங்கள் தயாரிக்கப்பட்டன.

- வெளிநாட்டுப் படுகடன் தொடர்பான பிரச்சினைகளுக்கான விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கும், மற்றும் சமர்ப்பிப்பதற்கும் வெளி நாட்டு வளங்கள் திணைக்களத்தின் குறிப்பிட்ட நன்கொடையாளர்களின் பிரிவுகளின் ஒப்புதலுடன் நன்கொடை நிறுவனங்களுடன தொடர்பு கொள்ளப்பட்டன.

- வெளிநாட்டு நிதியீடு மற்றும் படுகடன் தொடர்பாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் திறச்சேரிச் செயலாளருக்குக் குறிப்பிடப்பட்ட வெளிவாரியான நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு கோரிக்கைகளுக்கு உரிய நேரத்தில் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- நாட்டின் படுகடன் முகாமைத்துவத்தின் இயலளவினை விருத்தி செய்யும் நோக்குடன் பொதுநலவாயச் செயலகத்திலிருந்தும், உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியிலிருந்தும் 3 தூதுவர் குழுக்கள் வருகை தந்தன.

- சர்வதேச நாணய நிதியம் / உலக வங்கியினாலும் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைகளுக்கிணங்க, வருடாந்த அடிப்படையில் வெளிநாட்டுப் படு கடன் தொடர்பான தேவையான தரவுகள் வழங்கப்பட்டன.

- பதிப்பு 1.3 இலிருந்து விருத்தியுற்ற படுகடன் முகாமைத்துவ வசதிகளை வழங்கும் பதிப்பு 2 இனைக் கொண்ட படுகடன் முகாமைத்துவ முறைமைக்கு தரமுயர்த்தும் நடவடிக்கையானது பூர்த்தி செய்யப்பட்டது. அரசாங்கத்தின் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டுப் படுகடன்களை உள்ளடக்கிய ஒருமுகப்படுத்தப்பட்ட படுகடன் தரவு அடிப்படை ஒன்றை வெளிநாட்டு வளங்கள் திணைக்களமும் மற்றும் இலங்கை மத்திய வங்கியும் பேணுவதற்கேற்ற வகையில் முழுமையான படுகடன் முகாமைத்துவத்தின் வினைத்திறனைன இது விருத்தி செய்யும்.

# துறை ஒருங்கிணைப்பு மற்றும் செயலாற்றுகை கண்காணிப்புப் பிரிவு

இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கை வேலைச்சட்டகத்திற்கேற்ப இனம் காணப்பட்ட முன்னுரிமைக் கருத்திட்டங்களை செயற்படுத்துவதற்கான வெளிநாட்டு உதவி ஒருங்கிணைப்பு, நிதி திட்டமிடல், வெளிநாட்டு உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி என்பவற்றை மேம்படுத்துவது இந்த பிரிவின் பொறுப்பாகும்.

இப்பிரிவானது திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளையும் ஒருங்கிணைப்பதுடன், 2018 இன் போது பின்வரும் நடவடிக்கைகளில் வெற்றிகரமாக ஈடுபட்டது.

## 2018 செயற்பாடுகள்

- அரசாங்கத்தின் அபிவிருத்தி முன்னெடுப்புக்களாக செயற்படுத்தப்படவுள்ள அபிவிருத்தி கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களுக்கான தேவையான நிதியளிப்பு வசதிகளை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நிதியளிப்பு வசதிகளை பெற்றுக் கொள்வதற்கு அமைச்சுக்களிலிருந்து பெறப்பட்ட 62 கருத்திட்ட முன்மொழிவுகளை மீளாய்வு செய்தது.
- சமர்ப்பிக்கப்பட்ட 19 கருத்திட்ட முன்மொழிவுகள், ளெிநாட்டு நிதியினைப் பெற்றுக் கொள்வதற்கு அபிவிருத்திப் பங்காளர்களுக்கு தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் விடுவிக்கப்பட்டது.
- திணைக்களத்தின் அபிவிருத்திப் பங்காளர் கருமபீடத்துடன் கலந்துரையாடி வெளிநாட்டு உதவியுடன் செயற்படுத்தப்பட வேண்டிய கருத்திட்ட தயார் நிலைத்திட்டங்கள் தயாரிக்கப்பட்டன
- 2017 வருடத்திற்கான திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைக்கான உள்ளீடுகள் வழங்கப்பட்டன.
- திணைக்களத்தின் அபிவிருத்திப் பங்காளர் பிரிவுகளினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கமைய 2019 இற்கான செயற்படுத்தலோடும் மற்றும் புதிய கருத்திட்ட முன்மொழிவுகளுக்கான வெளிநாட்டு நிதியளிப்பு வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.
- 2018 இற்கான திணைக்களத்திற்கான செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டதுடன், திணைக்களத்தின் அனைத்து பிரிவுகளினதும் ஒத்துழைப்புடன் 2017 இல் செயற்பாட்டுத்திட்ட முன்னேற்ற அறிக்கை 2017 தயாரிக்கப்பட்டது.
- வெளிநாட்டு நிதியளிப்பு கருத்திட்டங்கள், அவற்றினது முன்னேற்றம், மீள் கொடுப்பனவு முறைமை, கொள்வனவு தாமதங்கள் தொடர்பான பல்வேறு நடவடிக்கைகள் பற்றி திறைசேரியின் அலுவலகத்திற்கு பாராளுமன்றம், சனாதிபதிச் செயலகம், பிரதமரின் அலுவலகம், கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம், திறைசேரி திணைக்களங்கள் மற்றும் பிரதிச் செயலாளர்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற 38 கோரிக்கைகளுக்கு இற்றைப்படுத்தப்பட்ட தகவல்கள் சமாப்பிக்கப்பட்டது.

# நிர்வாகம் மற்றும் நிதிச் செயலாற்றுகை

## நிருவாகம்

நிருவாக மற்றும் கணக்குக் கிளைகள் என்பன திணைக்களத்தினை சுமூகமாகவும் வினைத்திறனுடனும் நடாத்திச்செல்வதற்குத் தேவையான ஒத்துழைப்புச் சேவைகளை வழங்குகின்றன. அச்சேவைகளின் கீழ் பிரதானமாக பௌதீக மற்றும் மனிதவள அபிவிருத்திச் சேவைகள் பிரதானமானவைகளாகும். திணைக்களத்தின் செயற்பாடுகளை உச்சமட்டத்தில் வழங்குவதற்காக பௌதீக மற்றும் மனித வளங்களைப் பயன்படுத்துவதற்காகவும் மற்றும் திணைக்களத்தின் வேலைச் சட்டகத்தினுள் வளங்களை முறையாகப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.

### தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளை செயற்படுத்தல்

இலங்கைப் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஏற்பாடுகளை செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. அதற்கமைய, திணைக்களத்தில் தகவல் பிரிவு தாபிக்கப்பட்டுள்ளதுடன், திணைக்களத்தின் பெயர் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தராக பணிப்பாளர் நாயகம் திரு.ஆர்.எம்.பி ரத்நாயக்க அவர்கள் பணியாற்றுகின்றார். மேலதிக பணிப்பார் நாயகம் டி.ஏ.பி அபேசேகர அவர்களும் மற்றும் பணிப்பாளர், சி.டப்யு.கே.தர்மசேன அவர்களும் தகவல் உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேற்குறித்த சட்டததின் கீழ் 2018 ஆம் ஆண்டில் தகவல் பிரிவிற்கு தகவலறியும் நோக்கில் 08 கோரிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டதோடு, அனைத்துக் கோரிக்கைகளுக்குமான தகவலகள் உரிய காலத்தில் வழங்கப்பட்டுள்ளன.

### பதவியணி திறன் அபிவிருத்தி மற்றும் பயிற்சி

திணைக்களப் பதவியணியின் திறன் அபிவிருத்திக்காக 2018 ஆம் ஆண்டில் விசேட கவனஞ்செலுத்தப்பட்டது. அதற்கமைய, திணைக்களப் பதவியணியினரின் திறன் மற்றும் வினைத்திறன் என்பனவற்றினை அபிவிருத்திசெய்வதற்காக அவர்களுக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன. 2018 ஆம் ஆண்டில் பதவியணியினர்களுக்காக வழங்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள்,கருத்தரங்குகள் மற்றும் மாநாடுகள் பற்றிய விபரம் பின்வருமாறு:

#### பதவியணியினர்களுக்காக வழங்கப்பட்ட உள்நாட்டுப் பயிற்சிகள்

| நிகழ்ச்சித் திட்டம் | பயிற்றப்பட்டோர் எண். |
|---|---|
| மருந்து கொள்வனவுப் பெறுகை நடைமுறைக்கான ஒரு சாதனம் என்ற வகையில் வேலைச் சட்டக உடன்படிக்கை | 1 |
| நாடளாவிய ரீதியான சேவைகளிலுள்ள விசேட தர உத்தியோகத்தர்களுக்காக டோஸ்மாஸ்டர்ஸ் இன்டர் நெசனல் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற பேச்சுப் பயிற்சி | 2 |
| நாடளாவிய ரீதியான சேவைகளிலுள்ள தரம் - I உத்தியோகத்தர்களுக்காக டோஸ்மாஸ்டர்ஸ் இன்டர் நெசனல் நிறுவனத்தினால் வழங்கப்படுகின்ற பேச்சுப் பயிற்சி | 5 |
| MS Access இல் தரவுத்தள முகாமை | 1 |
| அட்வான்ஸ் எக்ஸெல் (Advanced Excel) | 6 |
| இலங்கைத் திட்டமிடல் சேவையின் தரம் - I உத்தியோகத் தர்களுக்கான திறன் அபிவருத்தி நிகழ்ச்சித் திட்டம். | 4 |

| நிகழ்ச்சித் திட்டம் | பயிற்றப்பட்டோர் எண். |
|---|---|
| யுஎஸ்ஏட் (USAID) கருத்திட்டத்தினால் நிதியளிப்புச் செய்யப்பட்ட திறன் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் | 5 |
| அறிக்கை எழுதுவதற்கான திறன் | 2 |
| கருத்திட்ட முகாமை மற்றும் முன்மொழிகளை எழுதுவதற்கான திறன் | 10 |
| முன்வைத்தல் தொழில்நுட்பம் மற்றும் பொதுப் பேச்சு ஆற்றல்கள் | 5 |
| உயர் பதவியினருக்கான ஆங்கில டிப்ளோமா (DEP) 2018 | 3 |
| உள்ளீட்டு மற்றும் வெளியீட்டு பகுப்பாய்வுகள் தொடர்பான ஒத்துழைப்பு வழங்கல் உபாய அறிவுத் தீர்வுகள் - பகுதி 1 | 3 |
| புதிய சிகாஸ் நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான பயிற்சி | 2 |
| தொழில் நோக்கத்திற்கான ஆங்கிலத்தில் சான்றிதழ் (CEEP) | 5 |

## பதவிநிலை உத்தியோகத்தர்களுக்காக வழங்கப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சிகள்

| நிகழ்ச்சித் திட்டம் | நாடு | பயிற்றப்பட்டோர் எண். |
|---|---|---|
| பொருளாதாரம் மற்றும் அரச கொள்கை தொடர்பிலான முதுமானிக் கற்கை நிகழ்ச்சித்திட்டம் | அவுஸ்திரேலியா | 1 |
| பொதுநலவாய அமைப்புச் செயலகத்தின் படுகடன் அறிக்கையிடல் மற்றும் முகாமைத்துவ முறைமை (CS-DRMS) தொடர்பிலான பயிற்சி | ஐக்கிய இராச்சியம் | 1 |
| இலங்கையில் சுதந்திர வர்த்தக வலயத்தினை முகாமைசெய்வதற்கான கருத்தரங்கு - 2018 | சீனா | 1 |
| முதலீட்டுக் கருத்திட்டங்களில் பொருளாதார பகுப்பாய்வு | கொரியா | 1 |
| IMF –SARTIAC அரசிறைப் பகுப்பாய்வு மற்றும் எதர்வுகூறல் | இந்தியா | 1 |
| அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான ஒரே வழி ஒரே பாதை என்ற அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தினை முன்னெடுப்பதற்கான கருத்தரங்கு | சீனா | 1 |
| ஆட்புல எல்லைப் பிணக்குகளைத் தீர்த்துவைத்தலும் சர்வதேசமயமாக்கலும் | சீனா | 2 |
| அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான நிதி மூலோபாயம் | சீனா | 1 |
| பொதுநிதி முகாமை அல்லது அரச படுகடன் முகாமை தொடர்பிலான நிறைவேற்று நிகழ்ச்சித் திட்டம். | யப்பான் | 1 |
| உள்நாட்டு உத்தியோகத்தர்களுக்காக ஒரே வழி ஒரே பாதை என்ற முன்னெடுப்புத் திட்டத்தின் கீழ வீதி நிர்மாணம் தொடர்பிலான கரத்தரங்கு | சீனா | 5 |
| அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கான தெற்கு – தெற்கு ஒத்துழைப்பு தொடர்பிலான கருத்தரங்கு | சீனா | 4 |
| இரண்டாம் சுகாதாரத்துறை அபிவிருத்திக் கருத்திட்டத்தினால் நிதியளிக்கப்பட்டு, மெலோதா நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட பொதுத்துறைப் பெறுகை மற்றும் ஒப்பந்த நிருவாக டிப்ளோமா பாடநெறிக்கான வெளிநாட்டுப் பயிற்சி | இந்தியா | 2 |
| இலங்கை நிருவாக சேவை( தரம் -I) உத்தியோக த்தர்களுக்கான திறன் அபிவிருத்திக் கருத்திட்டத்தின் வெளிநாட்டுப் பயிற்சி | மலேசியா | 1 |
| சோயா பேஞ்சி உற்பத்தி, பதப்படுத்தல் தொழில்நுட்பவியல் மற்றும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்காக விவசாய கொள்திறன் அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு | சீனா | 1 |
| நிறைவேற்று அபிவிருத்தி ஒத்துழைப்பிற்கான பூகோள பங்குடமை மற்றும் 2018 ஆம் ஆண்டுக்கான கொரிய கற்றல் மற்றம் துரிதப்படுத்தல் நிகழ்ச்சித்திட்டம் | கொரியா | 1 |
| சீமோல் தலைமைத்துவ மற்றும் மிரும்ஸ் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | கொரியா | 1 |
| ஆசிய நாடுகளுக்கான தகவல் இணைப்பு ஊக்குவிப்பு தொடர்பான செயலமர்வு | சீனா | 2 |

# நிதி மீளாய்வு

## செலவினம் பற்றிய தகவல்கள்

இத்திணைக்களமானது வருமானம் திரட்டும் ஒரு முகவர் நிறுவமென அடையாளங் காணப்படாமையினால் 2018 ஆம் ஆண்டில் வரவுசெலவுத்திட்ட தலைப்பு இல.239 இன் கீழ் இத்திணைக்களத்தின் ஆளுக்குரிய வேதனாதிகள், ஏனைய நடைமுறைச் செலவினம், மூலதனச் செலவினம் மற்றும் முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் என்பனவற்றிற்கெதிராக செலவினம் தொடர்பிலான நிதிசார் தகவல்களை பின்வரும் அட்டணை விபரிக்கிறது.

| ஆளுக்குரிய வேதனாதிகள் | |
|---|---|
| | (ரூபா) |
| ஆரம்ப ஏற்பாடு | 80,985,000.00 |
| **கூட்டுக:** | |
| மேலதிக ஏற்பாடு | |
| நி.பி 66 மற்றும் 69 இன் கீழான மாற்றல்கள் | 1,745,000.00 |
| **கழிக்க:** | |
| நி.பி 66 இன் கீழான மாற்றல்கள் | |
| மொத்த ஏற்பாடு | 82,730,000.00 |
| ஆண்டின் செலவினம் | 82,470,025.44 |

| ஏனைய நடைமுறைச் செலவினம் | |
|---|---|
| | (ரூபா) |
| ஆரம்ப ஏற்பாடு | 372,360,000.00 |
| **கூட்டுக:** | |
| மேலதிக ஏற்பாடு | 11,100,000.00 |
| நி.பி 66 மற்றும் 69 இன் கீழான மாற்றல்கள் | |
| **கழிக்க:** | |
| நி.பி 66 இன் கீழான மாற்றல்கள் | 1,745,000.00 |
| மொத்த ஏற்பாடு | 381,715,000.00 |
| ஆண்டின் செலவினம் | 380,911,635.92 |

| மூலதன செலவினம் | |
|---|---|
| | (ரூபா) |
| ஆரம்ப ஏற்பாடு | 3,601,700,000.00 |
| **கூட்டுக:** | |
| மேலதிக ஏற்பாடு | 345,200,000.00 |
| நி.பி 66 மற்றும் 69 இன் கீழான மாற்றல்கள் | 940,000.00 |
| **கழிக்க:** | |
| நி.பி 66 இன் கீழான மாற்றல்கள் | 940,000.00 |
| மொத்த ஏற்பாடு | 3,946,900,000.00 |
| ஆண்டின் செலவினம் | 3,890,313,442.32 |

## மூலதன செலவினம்

| விடய குறியீடு | விடய தலைப்பு | 2018 மதிப்பீடுகள் (ரூபா) | 2018 தேறிய ஏற்பாடு (ரூபா) | செலவினம் (ரூபா) |
|---|---|---|---|---|
| 2001 | கட்டிடங்கள், கட்மைப்புக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு | 50,000.00 | 50,000.00 | 3,840.00 |
| 2002 | பொறித்தொகுதி, இயந்திரசாதனம், உபகரணங்கள் என்பனவற்றின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு | 200,000.00 | 200,000.00 | 69,837.50 |
| 2003 | வாகனங்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு | 1,000,000.00 | 1,190,000.00 | 1,182,807.30 |
| 2102 | தளபாடம் மற்றும் அலுவலக உபகரண கொள்வனவு | 1,000,000.00 | 60,000.00 | 28,900.00 |
| 2103 | பொறித்தொகுதி, இயந்திரசாதனம் மற்றம் உபகரணக் கொள்னவு | 1,000,000.00 | 1,750,000.00 | 1,712,325.00 |
| 2204 (21) | ஆசிய உட்கட்மைப்பு முதலீட்டு வங்கி | 3,443,200,000.00 | 3,634,400,000.00 | 3,578,579,569.94 |
| 2205 (17) | அரச நிறுவனங்கள் அல்லாதவைகளுக்கான மூலதன மானியங்கள் | 250,000.00 | 250,000.00 | 19,618.00 |
| 2401 | பதவியிணர் பயிற்றுவிப்பு | 5,000,000.00 | 5,000,000.00 | 4,982,607.78 |
| 2401 (13) | பதவியிணர் பயிற்றுவிப்பு-ஜேடிஎஸ் | 150,000,000.00 | 304,000,000.00 | 303,733,936.80 |
| | **மொத்தம்** | **3,601,700,000.00** | **3,946,900,000.00** | **3,890,313,442.32** |

## வரவுசெலவுத் திட்டப் பயன்பாட்டின் சுருக்கம்

| செலவின விபரம் | 2018 மதிப்பீடுகள் (ரூபா) | 2018 தேறிய ஏற்பாடு (ரூபா) | 2018 மெயச் செலவினம் (ரூபா) |
|---|---|---|---|
| நடைமுறைச் செலவினம் | 453,345,000.00 | 464,445,000.00 | 463,381,661.36 |
| மூலதனச் செலவினம் | 3,601,700,000.00 | 3,946,900,000.00 | 3,890,313,442.32 |
| **மொத்தம்** | **4,055,045,000.00** | **4,411,345,000.00** | **4,353,695,103.68** |

## அரச பணி ஊழியர்களுக்கான முற்பணக் கணக்கு

2018 ஆம் ஆண்டுக்காக இத்திணைக்களத்தின் அரச பணி ஊழியர்களின் முற்பணக் கணக்கு தொடர்பிலான விபரம் கீழே தரப்பட்டுள்ளது.

| விபரம் | அங்கீகரிக்கப்பட்ட எல்லை (ரூபா) | மெய்ச் செலவினம் (ரூபா) |
|---|---|---|
| அதிகூடிய செலவின எல்லை | 7,500,000.00 | 5,262,180.00 |
| ஆகக் குறைந்த பெறுகை எல்லை | 3,700,000.00 | 4,849,463.00 |
| படுகடன் மீதியின் ஆகக் கூடிய எல்லை | 30,000,000.00 | 19,554,496.00 |


## கணக்காய்வு ஐய வினாக்கள்

ஆண்டின் போது தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவிலிருந்து 01 கணக்காய்வு ஐய வினாவும் கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்திடமிருந்து 06 கணக்காய்வு ஐய வினாக்களும் இத்திணைக்களத்திற்கு கிடைக்கப்பெற்றுள்ளதோடு, அவற்றிற்கான பதில்களும் உரிய காலத்தில் வழங்கப்பட்டுள்ளன.

## நிதிக் கூற்று - 2018

2018 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றானது கணக்காய்வாளர் நாயத்திற்கு 2019 ஆம் ஆண்டு பெப்புரவரி மாதம் 27 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டுள்ள

# நிறுவனக் கட்டமைப்பு




**படுமுபி** – படுகடன் முகாமைத்துவ பிரிவு
**உநிமுசபி** – உள்நாட்டு நிதி மற்றும் மூலதன சந்தை பிரிவு
**பகமுபி** – பங்குடமை கருத்திட்ட முதலீட்டு பிரிவு
**ததொபி** – தகவல் தொழில்நுட்ப பிரிவு
**கிபி** – கிழக்காசியப் பிரிவு

**உவசநாநிபி** – உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியப் பிரிவு
**ஆஅவபி** – ஆசிய அபிவிருத்தி வங்கி பிரிவு
**மகிதெபி** – மத்திய கிழக்கு மற்றும் தெற்காசிய பிரிவு
**முபொபி** – முன்னேற்றப் பொருளாதாரங்களின் பிரிவு

**ஐநாதொஉபி** – ஐக்கிய நாடுகள் மற்றும் தொழில்நுட்ப உதவிகள் பிரிவு
**சீஆமுபி** – சீனா மற்றும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கி பிரிவு
**தவஒகொஆஆபி** – தகவல் வளங்கள், ஒருங்கிணைப்பு மற்றும் கொள்கைகள் ஆராய்ச்சி ஆய்வுகள் பிரிவு
**துஒசெகபி** – துறை ஒருங்கிணைப்பு மற்றும் செயலாற்றுகை கண்காணிப்புப் பிரிவு

**ப** - பணிப்பாளர்
**உப** - உதவி பணிப்பாளர்
**நிஉ** – நிர்வாக உத்தியோகத்தர்
**ததொஉ** – தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்